# கல்கி

KALKI 21-1-1973 45 காசு




ஆண்மை—
திடவடிவம்,
தீரம், திறமை,
கம்பீரம்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த
படைப்பு
'எஸ்டர்காட்'
எஸ்டர்காட்®
ஆண்மகன் இதோ ஆளவருகிறான். எங்கும் அவன் செங்கோல். 'எஸ்டர்காட்' அவன் உடுப்பு.
'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் சூட்டிங்குகள். தவிர, 'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலைகள், பாலியெஸ்டர் இழைகலந்த உடுப்புத் துணிகள்; 'டெரோஸெல்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் ஷர்ட்டிங்குகள்.
மபத்லால் க்ரூப்
AIYARS-M.300 TM

# கல்கி

## பொருளடக்கம்


பரிதாபி, தை 8 — 1973 ஜனவரி 21




| சந்தா விவரம் | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 23-00 | ரூ. 11-50 |
| இதர நாடுகள் | ரூ. 50-00 | ரூ. 25-00 |
| இலங்கை(இலங்கைநாணயம்) | ரூ. 27-00 | ரூ. 13-50 |




''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




ராஜாஜியின் கொள்கைகளில் சிலவற்றையாவது கடைப்பிடிக்க வாழ்க்கையில் ஒவ்வொருவரும் முயல வேண்டும். — முதல்வர்.




மின் ஊழியர் வேலைநிறுத்தத்தால் ஆந்திரா இருளில் ஆழ்ந்தது. — தலைப்பு.

கல்கி
மலர் 32
இதழ் 25

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

# ஆந்திரப் பிரதேசத்தில் அமளி

க. சந்தானம்

ஆந்திரப் பிரதேசம் தற்போதிருக்கும் நிலையைக் கண்டு எந்த இந்தியனும் மிகவும் வருந்தாமல் இருக்க முடியாது. திடீரென்று இந்த அரசியல் பூகம்பம் எப்படித் தோன்றிற்று? அதை முளையிலேயே தடுக்காமல் இருந்ததற்கு யார் பொறுப்பு? இப்பொழுது அதற்குத் தகுந்த பரிகாரம் என்ன? என்பதைப் பற்றித் தீர்க்கதரிசனத்துடன் ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாகும்.

இந்தப் பூகம்பம் உத்தம நீதிமன்றத்தின் முல்கி விதிகள் தீர்மானத்திலிருந்து தோன்றியது. அது நீதிமன்றத்தின் தவறல்ல. தெலுங்கானாவை, பழைய ஆந்திரப் பிரதேசத்தோடு இணைப்பதற்குச் செய்த சட்டம் சரிவரச் செய்யப்படாததால் ஏற்பட்டது. இணைப்புக்குப் பின் பழைய விதிகள் செல்லுபடியாகுமா, ரத்து செய்யப்பட்டுவிட்டனவா, அவற்றிற்குப் பதிலாகத் தெலுங்கானாவாசிகளுக்கு என்ன தனிச் சலுகைகள் செய்ய வேண்டும் என்பதைத் தீர விசாரியாமல் சட்டம் அவசரப்பட்டுச் செய்யப்பட்டதால் ஏற்பட்ட பூகம்பம்.

பழைய முல்கி விதிகள் செல்லுபடியாகும் என்ற தீர்மானம் வெளியானவுடனேயே பிரதம மந்திரியும், ஆந்திர முதன் மந்திரியும் அதன் விளைவுகளை நன்கு உணராதது பெரிய துர்ப்பாக்கியமேயாகும். அவர்கள் இருவருமே தற்போதைய நிலைமைக்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள். தங்கள் பிரதேசத்தின் தலைமைக் காரியாலயங்களில் சேவை செய்ய ஆந்திரர்களுக்கு உரிமை இல்லை என்பதை எவ்வாறு ஆந்திர மக்கள் ஏற்பார்கள்? அதுவும் தெலுங்கானாவுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்து, அதன் முன்னேற்றத்துக்காக விசேஷ பண உதவி அளித்து, தனிக் கமிட்டி ஏற்படுத்தி, எல்லாவற்றையும் விடப் பழைய ஆந்திராவைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்துக்காகத் திரு பிரம்மானந்த ரெட்டியைப் பதவியிலிருந்து விலகச் செய்து தெலுங்கானாவைச் சேர்ந்த திரு நரசிம்மராவை முதல் மந்திரியாக்கியபின், இந்த முடிவை ஆந்திரர்கள் ஏற்க மறுத்ததில் ஆச்சரியமில்லை. தீர்மானம் வந்த ஒரு வாரத்துக்குள் ஆந்திரத் தலைவர்களைக் கூட்டி ஒரு சமாதானம் செய்து, அவசியமானால் ஓர் ஆந்திரரையே மீண்டும் முதல் மந்திரியாக்கியிருந்தால் ஆந்திரர்களின் வெறி இவ்விதம் மிதமிஞ்சாமல் இருந்திருக்கலாம். ஆனால் தெலுங்கானா மக்களின் வெறி முன்போல் எல்லை மீறியுமிருக்கலாம். ஓர் உயர்நீதிபதியின் மத்தியஸ்தத்துக்கு விட்டு அவர் முடிவை மத்திய அரசாங்கம் அமல் செய்யும் என்று முடிவு செய்திருந்தால் இருதரத்தாரும் ஏற்றுக் கொண்டிருக்கலாம். வாத விவாதத்தையும், பலாத்காரத்தோடு கூடிய கிளர்ச்சியையும் வளர விட்டுவிட்டு முடிவில் திருமதி இந்திராகாந்தியின் முடிவை அனைவரும் ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசியல் காரணங்களுக்காகப் பழைய ஆந்திர மந்திரிகள் ஓரளவு ஏற்றுக் கொண்ட போதிலும், அவருடைய முடிவு வெளிவந்ததும் மக்களின் எதிர்ப்பு கரை புரண்டு போகவே அவர்கள் ராஜிநாமாச் செய்ய வேண்டியிருந்தது.

இப்பொழுது இந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன? மூன்று முறைகளைப் பிரதம மந்திரி கடைப்பிடிக்கலாம். தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதித்து, தமது தீர்மானத்தை மாற்ற முடியாது, அது பார்லிமெண்டில் சட்டமாகிவிட்டது என்று பிடிவாதம் செய்து ராஷ்டிரபதி ஆட்சி மூலமாகவோ தற்போதைய முதல் மந்திரி மூலமாகவோ கொடிய அடக்குமுறையைக் கையாண்டு கிளர்ச்சியை அடக்க முயலக்கூடும். ஆனால் இது பலிக்கும் என்றோ, ஒருவேளை தாற்காலிகமாகப் பலித்தாலும் இருதரப்பாளர்களும் ஒற்றுமையாக வாழ்வார்கள் என்றோ எண்ண முடியாது.

இரண்டாவதாக, தெலுங்கானாவையும் பழைய ஆந்திராவையும் தனி ராஜ்யங்களாகப் பிரித்து விடலாம். அதனால் நாட்டுக்கும். ஆந்திர மக்களுக்கும்

நஷ்டம் என்பதில் சந்தேகம் இல்லை. இரண்டு தலைமைக் காரியாலயங்களுக்கும், இரு உயர்நீதி மன்றங்களுக்கும் மற்றும் அதிகப்படியான உத்தியோகஸ்தர்களுக்கும் ஏராளமாகச் செலவாகும். அதில் பெரும் பாகத்தை மத்திய அரசாங்கம் ஏற்க வேண்டுமாகையால், மற்ற ராஜ்யங்களுக்கு வழங்கும் மானியங்கள் குறையும். தெலுங்கு மொழியின் வளர்ச்சியும் குன்றும். இரு சகோதரர்கள் பூர்விக சொத்தை பாகம் செய்வதின் பலாபலன்களையெல்லாம் இருதரத்தாரும் அனுபவிக்க வேண்டும். ஆயினும், ஓயாமல் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைவிடப் பிரிந்துவிடுவதே நலமென்று ஒரு குடும்பத்தில் முடிவு செய்வது போலவே ராஜ்யத்திலும் பிரிவினையால் ஏற்படும் நஷ்டங்களைவிட ஒன்முக இருப்பதில் அதிக கஷ்டங்கள் இருக்கலாம்.

இவ்விரு முறைகளைக் காட்டிலும் ஒரு சிறந்த முறை இருக்கிறதென்பது எனது அபிப்பிராயம். பல ராஜ்யங்கள் கூடி சமஷ்டியில் இருப்பது போலவே, ஆந்திரப் பிரதேசத்தை ஒரு சிறிய உபசமஷ்டியாகச் செய்துவிடலாம். ஆரம்ப, மத்தியதரக் கல்வி, சுகாதாரம், பஞ்சாயத்து, நகரசபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள் போன்ற இலாக்காக்களைத் தெலுங்கானா, கிழக்கு ஆந்திரா, ராயலசீமா என்ற மூன்று உப ராஜ்யங்களிடம் ஒப்புவித்துவிட்டு, போலீஸ் நிர்வாகம், உயர்நீதி மன்றம், உயர்தரக் கலாசாலைகள் போன்ற பொது இலாகாக்களை ஆந்திரப் பிரதேச அரசாங்கம் வைத்துக் கொள்ளலாம். நியாயமான நிதிப் பங்கீடு செய்வதும் சாத்தியமே. மூன்றுக்கும் தனித் தனியான சட்டசபைகளும் மந்திரி சபைகளும் உப ராஜ்யங்களை ஆளும். இம்மூன்று சட்டசபைகளும் சேர்ந்தோ, அல்லது பிரத்தியேகமான ராஜ்ய சட்டசபையோ ராஜ்ய மந்திரி சபையை அமைத்து நடத்தலாம். இப்படிச் செய்வதால் இரு தலைநகர்கள் தேவையில்லை. செகந்திராபாத்தில் தெலுங்கானாவின், விஜயவாடாவில் கிழக்கு ஆந்திராவின், கர்நூலில் ராயலசீமாவின் அரசாங்க காரியாலயங்கள் இருக்கலாம். நாளடைவில் தற்போதைய வெறுப்பு மறைந்து, ஆந்திர மொழியின் ஒற்றுமை பெருகினல் மீண்டும் ஒரே ராஜ்யமாகச் செய்துவிடுவது சுலபமாகும். பிரிந்து விட்டால் திரும்பக் கூடுவது சாத்தியமாகாது. இவ்வாறு செய்வதால் பிரதம மந்திரியின் அதிகாரமும், செல்வாக்கும் ஓரளவு குறையலாம். அதனல் அவருடைய ஆளும் சக்தி குறைய வேண்டியதில்லை, அதிகரிக்கக் கூடும். ராஜ்யங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளுக்குப் பிரதம மந்திரியையே மத்தியஸ்தராக வைத்துக் கொள்வது அபாயமானது என்று ஆந்திராவின் அமளியிலிருந்து தெளிவாகிறது. மத்திய அரசாங்கத்தை ஆளுவோர் ராஜ்யங்களின் அலுவல்களில் குறுக்கிடாமல், பிரச்னைகளை உத்தம நீதிமன்றம் மூலமாகவோ பிரத்தியேகமான மத்தியஸ்தக் குழு மூலமாகவோ தீர்த்துக் கொள்ளுவதுதான் முறை. ஒரு தனி நபரைச் சர்வாதிகாரியாக்கி மக்கள் மனத்தை மயக்குவதில் சில கூட்டத்தாருக்கோ, ஒரு கட்சிக்கோ குறுகிய காலப் பிரயோஜனம் இருக்கலாம். அதனல் கஷ்டங்களும், நஷ்டங்களுமே நாளடைவில் அதிகரிக்கும்.


## ஒளி தந்த உணர்வு

ராஜாஜி இறுதியாக நோயுற்றுச் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த சமயம். அவரருகே அமர்ந்திருந்த ஒரு நர்ஸ் எதையோ தைத்துக்கொண்டிருக்கிறார். ஸ்ரீ சதாசிவம் கட்டிலில் படுத்திருக்கும் ராஜாஜியைப் பார்க்கிறார்; துணிகளிடை புகுந்து புகுந்து வெளிப்படும் ஊசியைப் பார்க்கிறார். தழுதழுத்த குரலில் நர்ஸிடம் கூறுகிறார்: "ஸிஸ்டர் நீங்கள் கைங்கரியம் செய்கிற இந்த மகாத்மாவும் உங்கள் கையிலுள்ள ஊசி மாதிரிதான்; அவ்வளவு கூர்மை. ஊசி உலகுக்கெல்லாம் உடுக்கத் துணிகளைத் தைக்கிறது. ஆனல் அது தனக்கென்று எதையும் உடுத்திக் கொள்ளாமல் பிறந்த மேனிக் குழந்தையாகவே இருக்கிறது. இந்த அற்புத நோயாளியும் அப்படித்தான். சமுதாய வாழ்வில் ஏற்பட்ட பல கிழிசல்களுக்குள்ளே சுருக்கென்று புகுந்து புகுந்து அவற்றை இசைவித்து ஓயாமல் தைத்துக் கொண்டேயிருந்தார்; தமக்கென்று எதுவுமே பெறவில்லை. தாம் தைத்து வைத்த பிரச்னைகளும் தம்மைத் தீண்டாமலே நிகம்பரமான சுத்த ஆத்மாவாக இருந்தார்."






பட்டோடியின் விளையாட்டை பங்களூரில் பார்த்த பிறகு சென்னை டெஸ்ட்டுக்கு ஆட வரும்படி கோரி யிருக்கிறார், திரு ஸி. டி. கோபிநாத்.




திருத்தணியில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதே தி.மு.க. கொள்கை என விளக்கினார் முதல்வர்.

# சென்னை டெஸ்ட்

(1) சந்திரசேகர் வீசிய பந்தில் டோனி ஞாயில் கொடுத்த காட்சைப் பிடிப்பவர் ஸோல்கர். (2) டென்னிஸ் விக்கெட்டைக் காத்தபோது பிரஸன்னா வீசிய பந்து



பெயில்ஸை விழுத்தியது. உடனே எல்லோரும் கைகளைத் தூக்கக் கேட்பானேன்? (3) அம்பயர் அவுட் கொடுத்துவிட்டார். இன்ஜினீயர் வழி விட்டு ஒதுங்க, பிரஸன்னா வீசிய பந்தில் அவுட்டாகி அர்னால்ட் பெவிலியன் திரும்புகிறார். காட்ச் பிடித்த

ஸோல்கர் உற்சாகத்தில் பந்தை மீண்டும் தூக்கிப் போட்டுப் பிடிக்கிறார். (4) அபாரமாக ஆடிய ஃப்ளெட்சரின் ஒரு 'ஸ்டைலிஷ் ஸ்ட்ரோக்'.

# தமிழ் நாட்டிலே...

தீரன்

## கடவுள் யார் பக்கம் ?

திருத்தணி தேவஸ்தானத்தின் சார்பில், தேவஸ்தானச் செலவில், 'கண்ணொளி வழங்கும் விழா' நிகழ்ந்திருக்கிறது. அதில் முதலமைச்சர் கலந்து கொண்டு, ஏழை எளியவர்களுக்குக் கண்ணாடி வழங்கி விட்டுப் பேசுகையில் 'தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின்பு கோயில்களின் வருமானம் இரு மடங்காகப் பெருகியிருப்பதிலிருந்தே கடவுளும் தி.மு.க.வை விரும்புகிறார் என்று தெரிகிறது. கடவுளும் எங்கள் பக்கத்தில்தான் இருக்கிறார் என்பது இதனால் நிரூபணமாகிறது' என்று கூறி யிருக்கிறார்.

தி. மு. க. ஆட்சி வந்தபின் கோயில்களில் வருமானம் கூடியிருப்பதற்கு, ''கடவுளே ! நீதான் இந்த ஆட்சியிலிருந்து எங்களை விரைவில் காப்பாற்றிக் கடைத்தேற்ற வேண்டும்'' என்று பக்தர்கள் தி. மு. க. ஆட்சி நீங்குவதற்காக வழக்கத்தைவிட அதிகமான பிரார்த்தனைகளும் வேண்டுதல்களும் செய்வதாக நாம் வேறொரு சரியான காரண விளக்கத்தை முதல்வருக்குத் தர விரும்புகிறோம். 'மக்கள் யார் பக்கம்?' என்று அகந்தையோடு கேட்டுக் கொண்டிருந்த முதலமைச்சரே 'கடவுள் யார் பக்கம்?' என்று கேட்கிற அளவு பக்தியில் வளர்ந்திருப்பது நமக்குப் புரிகிறது. ஆனால் முதல் அமைச்சரின் காரண காரிய விளக்கங்கள்தான் நமக்குப் புரியவில்லை.

இந்த விழாவில் முதல் அமைச்சருக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட வெள்ளி வேலும் கைக் கடிகாரமும் 1,001 ரூபாய்க்கு ஏலம் போன நிகழ்ச்சியால்கூட முதல் அமைச்சரின் பக்திக்குக் கைமேல் பலன் கிடைத்திருப்பதே தெரிகிறது. எவ்வளவுதான் பணிவாகப் பேசினாலும், 'கடவுளும் எங்களைத்தான் விரும்புகிறார், கடவுள் எங்கள் பக்கம்தான்' என்று பேச வருகிறதே ஒழிய, 'நாங்கள் கடவுள் பக்கம், நாங்கள் கடவுளை விரும்புகிறோம்' — என்று பேச வரவில்லையே, முதல்வருக்கு.

## புதுக்கோட்டை பொதுக் குழு

புதுக்கோட்டை நகரிலே கோட்டை கொத்தளங்களுக்கு நடுவே சுற்றிலும் மிகப் பெரிய சுவர்கள் இருப்பதை நம்பி நடத்திய தி. மு. க. பொதுக் குழுவில் எதிர்ப்புக் குரல்கள் முழங்கியிருக்கின்றன. தி. மு. க. தலைமையின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்துப் பேசும் முழக்கங்கள் கேட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான பொதுமக்களும், மாணவர்களும் வழியில் நின்று அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள்.

அதே தினம் மாலையில் திரு கருணாநிதியும் வேறு இரண்டு மந்திரிகளும் கலந்து கொண்ட தி. மு. க. கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் அவர்களைப் பேசவிடாமல் மக்கள் கூப்பாடு போட்டுத் தடுத்திருக்கிறார்கள். அதையும் பொருட்படுத்தாமல் மந்திரிகள் பேசியபோது கூட்டத்தின் பெரும் பகுதி மக்கள் எழுந்து போக ஆரம்பித்துவிட்டவுடன் போலீஸார் வந்து, ''எழுந்து போகாதீர்கள். அமர்ந்து முதல் அமைச்சரின் பேச்சைக் கேளுங்கள்'' என்று வேண்டும் அளவு பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. புதுக்கோட்டைக்கு அருகே ஆலங்குடியில் அமைச்சர் நெடுஞ்செழியன் பேசிய கூட்டம் கலவரத்தில் முடிந்து கண்ணீர்ப் புகை குண்டு வீசி நிலைமையைச் சமாளித்திருக்கிறார்கள். புதுக்கோட்டைப் பொதுக் குழுவின் மூலம் தி. மு. க.வின் பலவீனமான நிலைமையே தெரிகிறது.

## 'வட்டம்' இனி இல்லை

தி.மு.க. ஆட்சி மூலம் புகழ்பெற்ற சொற்றொடரான 'வட்டச் செயலாளர்' பதவியை ஒழித்துவிடுவது என்று புதுக்கோட்டை பொதுக்குழு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. 'வட்டச் செயலாளர்கள்' எல்லாம் அந்தப் பதவியைப் பயன்படுத்தி ஏராளமாகச் சொத்து சேர்த்து விட்டார்கள். அவர்கள் சொத்து விவரம் பற்றி விசாரணை வேண்டும்' என்று நீண்ட காலமாகக் கூறப்பட்டு வந்த புகார்தான் இப்போது இந்தப் பதவியை ஒழிப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இதுவரை தி.மு.க.வில் வட்டச் செயலாளர்கள் என்ற பாக்கியசாலிகள் 135 பேர் இருந்தனர். இப்போது வட்டச் செயலாளர் பதவி ஒழிக்கப்பட்டுத் தி. மு. க. பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை எல்லாம் சேர்த்துப் பொதுக் குழுவை விரிவாக்குவது என்று முடிவாகி யிருக்கிறதாம்.

## கட்சிகளின் பலம்

சென்னையில் உள்ள தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் (புள்ளி விவரத்துறைப் படிப்பைச் சேர்ந்தவர்கள்) நடத்திய ஒரு புதுமையான கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் செல்வாக்குப் பற்றி ஒரு சில முடிவுகள் தெரிந்திருக்கின்றன. சுமார் இருநூறு கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே நேரில் சென்று புள்ளி விவரங்கள் சேகரித்ததிலிருந்தும் மாணவர்களே நடத்திய தேர்தல் கணிப்புக்களிலிருந்தும் 1971 தேர்தலில் தி.மு.க. பெற்றிருந்த நாற்பத்தைந்து சதவிகித வோட்டுக்கள் இப்போது பதினைந்து சத விதமாகக் குறைந்திருக்கும் என்று தெரிகிறது. இத்தேர்வுக் கணிப்பில் மூன்றில் ஒரு பகுதியினர் ஸ்தாபன காங்கிரசுக்கும், முப்பது சதவிகிதத்தினர் அ.தி.மு.க.வுக்கும், ஏழு சதவிகிதத்தினர் புதுக் காங்கிரசுக்கும் ஆதரவு தெரிவித்திருந்தார்கள்.

மாணவர்கள் நடத்திய இந்தக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர் திரு காமராஜ் அவர்களே என்பதும் முடிவாயிற்று. முன்பு கருணாநிதிக்கு மக்களிடை இருந்த செல்வாக்கு இப்போது வீழ்ச்சி

# ராஜாஜி சிந்தனை

வாழ்க்கை எனக்குப் புகட்டிய பாடம் என்ன என்று சுருங்கச் சொல்கிறேன்:

வாழ்க்கை என்பது பகவானின் லீலையே என உணருகிறேன். 'லீலை' என்றால் 'விளையாட்டு' என்று மட்டும் ஆகாது. நாம் எத்தனை யத்தனம் செய்தாலும் அவிழ்க்க முடியாத புதிராகப் பிரபஞ்ச வாழ்க்கை இருப்பதைத்தான் 'லீலை' என்ற பதம் குறிக்கிறது. ஒழுங்குக்கும், சட்டத்துக்கும் கட்டுப்பட்டே பிரபஞ்ச இயக்கம் நடப்பதைப் பார்த்தால் இது நன்கு திட்டமிட்ட ஒன்று எனத் தெரிகிறது. ஆயினும் திட்டத்தின் ரகசியத்தை நாம் அறிய இயலவில்லை. பிரபஞ்சம் அனைத்துக்கும் அதிபதியான மகாப் பிரபு தன் களிப்புக்காக இப்படி விநோதம் செய்கிறான் — லீலை புரிகிறான் — என்று கொள்வது தவிர மர்மத்தை அணுக நம்மால் இயலாது.

நேர்த்தியுடன் நிர்வகிக்கப்படும் இந்தப் புதிரான திவ்விய விளையாட்டில் எனக்கு நன்றாகப் புரிகிற ஒன்று கர்மப் பயனே ஆகும். ஒவ்வொரு செயலுக்கும் கண்டிப்பாகப் பலன் உண்டு. இதிலிருந்து தப்பவே முடியாது.

இன்னொன்றும் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதாவது, நல்லவராக வாழ்வதன் மூலமே வாழ்க்கையில் பேரானந்தம் காண முடியும். தர்ம நெறிகளுக்கு இணங்க வாழுவதில் எத்தனையோ துன்பமும் இடுக்கணும் இருப்பதாகத் தோன்றினாலும்கூட, இதுவே உண்மையில் இன்ப நிறைவு தருகிறது என்று வாழ்க்கை எனக்குப் போதித்திருக்கிறது.

நல்லது என்றால் என்ன என்று வரையறை செய்யப் பார்ப்பது வியர்த்தமான முயற்சியே ஆகும். ஒருவனுக்கு நல்லதாக இருப்பது இன்னொருவனுக்குத் துன்பம் தருவதுண்டு. எனவே, கீதை விதிக்கிறபடி எந்த ஒரு சமயத்திலும் நம்மீது வந்து விழுகிற கடமையைச் சுயநல எண்ணமில்லாமல், சரணாகத புத்தியுடன் செய்தோமாயின், எந்தக் காரியமும் நல்லதே எனலாம். இந்தக் கடமைகள் மனிதனுக்கு மனிதன் மாறலாம். ஒரே மனிதனுக்கு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு கடமைகள் ஏற்படலாம். ஒருவன் சுயநலமின்மையிலும், சரணாகத மனப்பான்மையிலும் ஒருபோதும் மாறாமல் இருந்துகொண்டு தன் அறிவைத் தூய முறையில் செலுத்தினால், அவ்வப்போது அவனுக்கு உண்டான சொந்தக் கடமை என்ன என்பதையும், பொதுக் கடமை என்ன என்பதையும் தெளிவாக உணருவான். அதைப் பற்றில்லாமல் புரிவதே அவரவருக்கும் வாழ்வின் நிறைவாகும்.

பெற்று வருகிறது என்பதையும் இந்தப் புள்ளி விவரக் கணக்கெடுப்பில் இவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். மதுவிலக்கைப் பற்றி இப்போது இவர்கள் எடுத்த புள்ளிவிவரங்களின்படி எண்பது சதவிகித மக்கள் கள் குடிப்பதை வெறுப்பதும் தெரிய வந்திருக்கிறது என்கிறார்கள்.

## ஆசைத்தம்பியின் ஆசை

தமிழ் நாட்டில் இப்போது ஓடும் டாக்ஸிகளில் பல அவற்றை ஓட்டாதவர்களுக்குச் சொந்தமாக இருப்பதால், மீட்டர்களுடன் ஓடும் எல்லா டாக்ஸிகளையும் ஓர் அரசாங்கத் துறை நிறுவனத்தின் கீழ்க் கொண்டு வந்து டாக்ஸி ஓட்டும் டிரைவரை நாளடைவில் அதன் சொந்தக்காரர் ஆக்கும் முயற்சியில் ஈடுபடும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருப்பதாகச் சுற்றுலா வாரியத் தலைவர் ஆசைத்தம்பி கூறியிருக்கிறார். ஆசைத்தம்பியின் திட்டத்தால் டிரைவர்களுக்கு நாளடைவில் டாக்ஸி சொந்தமாகி விடும். பொதுமக்களுக்கு வசதிகள், நல்ல சேவை, எல்லாம் சொந்தமாகுமா இல்லையா என்பதுதான் விளக்கப்படவில்லை. அரசு கைவைத்த துறைகள் எதிலும் மக்கள் நலன், மக்கள் வசதி, மக்களுக்கு மரியாதையான சேவை எல்லாம் உடனே போய் விடுவது வழக்கமாயிற்றே!

## யோக்கியர்கள் வரவேண்டும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்த திரு காமராஜ் அவர்கள், 'சிங்கம்புணரி'யில் ஒரு மிகப் பெரிய பொதுக் கூட்டத்தில் பேசும்போது, ''தவறு செய்த அமைச்சரை உடனே ஜெயிலுக்கு அனுப்பும் தைரியமுள்ள ஒருவர்தான் முதல் அமைச்சராக வர வேண்டும். அமைச்சர்களே ஒழுக்கம் கெட்டவர்களாக இருந்தால் — லஞ்சம் வாங்குபவர்களாக இருந்தால் — சமுதாயம் எப்படி உருப்படும்? பொறுப்பில் உள்ளவர்களே சட்டத்துக்கு விரோதமாக நடப்பதால் நாட்டில் ஒழுக்கம் கெட்டுவிட்டது. இது தேசத்துக்கு மிகவும் ஆபத்தானது. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி இனியும் நீடித்தால் சமுதாயத்தில் கொள்ளை அடிப்பது, கொலை செய்வது, அக்கிரமம் பண்ணுவது போன்ற காரியங்களால் தவறு எதுவுமில்லை என்ற மனோபாவம் வளர்ந்துவிடும். இப்போது நான்கு வருஷங்களாக இங்கே ஆட்சியில் இருப்பவர்கள் போய் வேறு யாராவது மாறி ஆட்சிக்கு வந்தாலும் இவர்கள் செய்து விட்டுப் போயிருக்கும் ஊழல்களைச் சீர்திருத்துவதே மிகவும் சிரமமாக இருக்கும். அமைச்சர்கள், யோக்கியமானவர்களாக இருந்தால்தான் அதிகாரிகளும் மற்றவர்களும் லஞ்சம் வாங்கமாட்டார்கள். மக்கள் எதிர்காலத்தில் இன்ன சாதி, இன்ன மதம், இன்ன ஊர்க்காரர் என்று பார்க்காமல் யோக்கியமானவரா, ஒழுங்காகக் காரியங்களைச் செய்யக் கூடியவரா என்று கணக்கிட்டுத்தான் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்றெல்லாம் அழுத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார். இன்று நாடு இருக்கும் நிலையில் இப்படிப் பேச்சுக்கள் அதிகம் தேவை.



# துக்கச் சுமை குறைய வழி!


ஜகத்குரு
ஸ்ரீகாஞ்சி காமகோடி
சங்கராசார்ய சுவாமிகள்




நாம் எல்லோரும் பரம்பொருளைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பெற முயல வேண்டும். இந்த ஞானம் என்பது என்ன? பரம்பொருளைத் தவிர வேறெதுவுமே இல்லை என்பதுதான். அந்த ஒன்றுதான் இத்தனையாகவும் தோன்றுகிறது. இத்தனையான தோற்றங்களிலேயே மனசைச் செலுத்திக் கொண்டிருந்தால் சஞ்சலம், ஏற்றத்தாழ்வு இவற்றால் உண்டாகும் கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். இத்தனை தோற்றத்திலிருந்தும் மனசைத் திருப்பி, இவற்றுக்குக் காரணமான ஒன்றையே அறியத் தொடங்கினால் சஞ்சலங்கள் ஓயும். ஒரே வஸ்து என்ற பின் சஞ்சலிக்கவோ ஏற்றத் தாழ்வுக்கோ இடம் ஏது? அந்த நிலையிலேயே நித்திய சுகத்தைப் பெறலாம். இந்த நிலையையே ஞானம் என்கிறோம்.

உலக வாழ்வில்கூட சுகம் வருவது போலிருக்கிறது. ஆனால் அது நித்தியமாக நிலைத்து இருப்பதில்லை. வெளியிலிருந்து வருகிற சுகத்தை நாம் எப்படி நிரந்தரமாக்கிக் கொள்ள முடியும்? இந்த நிமிஷம் சுகமாக இருப்பது அடுத்த நிமிஷமே மறைகிறது. அடர்ந்த மரத்தின் கிளைகள் ஆடுகிறபோது இடுக்கு வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்து பாய்ந்துவிட்டு, அடுத்த நிமிஷமே நிழல் வந்து மூடிக்கொள்வது போலத்தான், உலகத்தின் துன்பத்துக்கு நடுவில் கொஞ்சம் கொஞ்சம் சுகம் தலையை எட்டிப் பார்த்து விட்டு ஓடி விடுகிறது. நிரந்தர சுகம் என்பது உலகத்துக்குக் காரணமான ஒன்றை அறிவதுதான்.

உலக வாழ்வில் சகல மனிதர்களுக்கும் அளவில்லாத கஷ்டங்கள் உண்டாகத்தான் செய்யும். பணக்காரன், பெரிய பதவியில் இருப்பவன் கஷ்டமில்லாமல் இருப்பதாக மற்றவர்கள் நினைக்கலாம். அப்படி நினைத்துத் தாங்களும் அவர்களைப் போலப் பணமும் பதவியும் பெறப் பாடுபடலாம். ஆனால் பணக்காரனை, பதவியில் உள்ளவனைக் கேட்டால் தெரியும், அவனுக்கு எத்தனை கஷ்டங்களென்று. நாம் திண்ணையில் இருக்கிறோம். விழுந்தால் சிராய்த்துக் கொள்வதோடோ, களுக்காவதோடோ போய்விடும். பணக்காரனும், பதவிக்காரனும் மாடிமேல் இருக்கிறான். எனவே அவன் விழுந்தால் எலும்பெல்லாம் முறிந்து போகும். பிராணபத்து ஆகும். ஒருவனுக்குப் பணமும் பதவியும் உள்ள போதே அதனால் உண்டாகிற சிறிது சுகத்தோடு, தன் பணம், பதவி போகக் கூடாது என்ற கவலை அதைவிட அதிகமாக இருக்கிறது. ஒவ்வொருவனும் தானே மகா புத்திசாலி, தானே மிகவும் யோக்கியன், தானே ரொம்ப அழகு என்று நினைத்துக் கொண்டிருப்பது போல், அதிக துக்கமுள்ளவனும் தானே என்று நினைத்துக்கொண்டிருக்கிறான்.

துக்கம் நம் உடன்பிறப்பு. நம் பூர்வ கர்ம வினையின் பயனாக இந்தத் துக்கங்களுக்கு நாம் முன்னமேயே வித்திட்டிருக்கிறோம். இதிலிருந்து தப்ப வழியில்லை.

ஆனால் கர்மத்தினால் ஏற்படும் கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு சாந்தமாக இருக்க வழி உண்டு. புதிதாகக் கர்ம மூட்டையைப் பெருக்கிக் கொண்டு எதிர்காலத்தில் கஷ்டத்தை அதிகமாக்கிக் கொள்ளாமலிருக்க வழி உண்டு. முதலில் சொன்ன ஞானம்தான் அந்த வழி.

சித்தப்பிரமை பிடித்து ஜடமாகிவிட்டால் கஷ்டம் தெரிவதில்லை. பைத்தியத்தின் கஷ்டம் வேரூன்றி நிற்பதில்லை. ஆனால் சித்தப்பிரமையில் நித்திய ஆனந்தமும் இல்லை. தூக்கத்தில் துக்கமில்லை. ஆனால் தூக்கத்தில் சுகமாக இருக்கிறோம் என்கிற அறிவும் இல்லை. ஞானிதான் எப்போதும் விழிப்பிலேயே இருந்துகொண்டும் சாசுவத சுகியாக இருக்கிறான். அவனது தேகத்தில் சிரமங்கள் இராது என்பதில்லை. ஆனால் அவனுடைய மனசில் லேசமே இராது.

கிணற்று ஜலத்துக்குள் நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும்போது கனம் தெரிவதில்லை. ஆனால் தண்ணீர் மட்டத்துக்கு மேலே குடம் வந்தவுடன் கனக்க ஆரம்பித்துவிடுகிறது. எளிதில் புரட்ட முடியாத பெரிய மரங்களை வெள்ளத்துக்கு அடியாகத்தான் புரட்டி இழுப்பது வழக்கம். அதே மாதிரி நம் துக்கங்களையெல்லாம் ஞானமாகிற தண்ணீரில் அமுக்கிவிட வேண்டும். அப்போது துக்கம் பரம இலேசாகி விடும்.

# இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது சிறப்பாக விளையாடிய கிரிக்கெட் வீரர் சோல்கர் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் தன் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்

குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் இல்லாத நேரத்திலும் கூட உடலை தெம்புடன் வைத்திருப்பதன் அவசியத்தை சோல்கர் உணர்ந்திருக்கிறார். தினசரி பிலிப்ஸில் சவாரிசெய்ய அவர் தவறுவதில்லை. உலகப் பிரசித்தி பெற்ற பிலிப்ஸ் ஊக்க மிக்க வாலிபருக்கு இன்றியமையாதது. அது கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரி செய்யவல்லது.

இதர பிலிப்ஸ் மாடல்கள்:

| |
|---|
| பிலிப்ஸ் ஒலிம்பியா (சூப்பர் மாடல்) |
| பிலிப்ஸ் லேடீஸ் மாடல் |
| ஊக்கமிகு வாலிபர்கள் உவந்து வாங்குவது பிலிப்ஸ் |





இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
டி ஐ. சைக்கிள்ஸ்
ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை 53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை
பதிவுபெற்ற உபயோகிப்பாளர்கள்.

TICPH/7020




## 3. டாக்டரின் உத்தரவு

**வ**ண்டியிலிருந்து இறங்கியவர்கள் சீதாவும் சூரியாவும் சுண்டுவுந்தான். ஆனால் சூரியாவையும் சுண்டுவையும் லலிதா அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவர்களுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டுச் சீதாவின் கைகளைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு சென்றாள்.

''உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டும் பேசிக் கொண்டும் இருந்தேன். நம்முடைய கல்யாணத்தின் போது நாம் இரண்டுபேரும் தனியாக உட்கார்ந்து போட்டோ எடுத்துக் கொண்டோம் பாரு! அதைப் பட்டுவுக்கும் பாலுவுக்கும் இப்பத்தான் காட்டிக் கொண்டிருந்தேன். பட்டு என் பெண்; பாலு என் பிள்ளை. அவர்களுக்கு உன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டேயிருந்தேன். சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் வண்டி வந்துவிட்டது. வண்டியில் யார் வந்திருப்பார்கள் என்று வெளியே வந்து பார்த்தால் நீ இறங்குகிறாய். என்ன அதிசயத்தைச் சொல்லுவது? சற்று முன்னாலேதான் போஸ்டுமேன் கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். உன்னுடைய கடிதத்தைப் பிரித்துப் பார்த்து விட்டு அனுப்பியிருந்தார். நீ வருவதற்குள் நான் அங்கே வந்து விட வேண்டுமென்று எழுதியிருந்தார். நீ புதுடில்லியிலும் கல்கத்தாவிலும் இருந்து நாகரிக வாழ்க்கை வாழ்ந்தவளாம். உன்னை உபசரிப்பதற்கு இவருக்குத் தெரியாதாம். வேடிக்கையாக' இல்லையா இவர் எழுதியிருப்பது? நானும் உடனே திரும்பிவிடுவதென்றுதான் தீர்மானித்து அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்பா உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார். இங்கே ஒரு தடவை உன்னை அனுப்பி வைக்கும்படி சொன்னார். நான் அனுப்புவதற்குள் நீயே வந்து விட்டாய்!'' என்று லலிதா அளவில்லாத ஆர்வத்தோடு வார்த்தைகளைக் கொட்டினாள்.

இதற்குள் அவர்கள் வீட்டுக் கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே குழந்தைகள் இருவரும் நின்று அதிசயத்துடனும் சங்கோசத்துடனும் சீதாவை ஏறிட்டுப் பார்த்தார்கள். ''இவர்கள் தானே உன் குழந்தைகள் பட்டுவும் பாலுவும்?'' என்று சீதா கேட்டாள். ''ஆமாம்; இவர்கள்தான்!'' என்று லலிதா கூறிவிட்டுக் குழந்தைகளைப் பார்த்துச் சொன்னாள்.

''பார்த்தீர்களா? சீதா அத்தங்காளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேனே? சொல்லி வாய் மூடுவதற்குள்ளே வந்து விட்டாள். அத்தங்காள் ரொம்ப அழகாயிருப்பாள் என்று சொன்னேனே, இல்லையோ? நான் சொன்னது நிஜமா இல்லையா என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். சீதா! நீ ஜெயிலில் இருந்து இன்னும் எத்தனையோ கஷ்டங்களைப் பட்ட பிறகும் இவ்வளவு அழகாயிருக்கிறாயேடி! உன் அகத்துக்காரர் உன்னை விட்டு எப்படித்தான் பிரிந்திருக்கிறாரோ, தெரியவில்லை! அவருக்கு நன்றாகச் சீமைப் பைத்தியம் பிடித்திருக்கிறது. சீமையில் இப்போது அப்படி என்ன அவசர வேலையாம்! அது போகட்டும். வஸந்தியை ஏன் நீ அழைத்துக்கொண்டு வரவில்லை?''

ஏற்கனவே வாட்டமுற்றிருந்த சீதாவின் முகம் குழந்தை வஸந்தியைப் பற்றிக் கேட்டதும் அதிகமாகச் சுணக்கமுற்றது.

''வஸந்தி பள்ளிக்கூடம் போகிறாள். அவளுடைய படிப்பைக் கெடுப்பானேன் என்று அழைத்து வரவில்லை. லலிதா! மாமா எங்கே? அவரைப் பார்க்க வேண்டாமா?'' என்றாள்.

''பார்க்காமல் என்ன? பார்க்க வேண்டியதுதான். அப்பா சற்று முன்னால்தான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். நீ வந்தது அவருக்குச் சந்தோஷமாயிருக்கும். அப்பாவுக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றித் தெரியுமல்லவா, சீதா...?''

''தேவப்பட்டணத்துக்கு நேற்றைக்கு வந்ததும் தெரிந்தது. உன் அகத்துக்காரர் அம்மாஞ்சியிடம் சொன்னாராம். அதைக் கேட்டதும் மறு வண்டியில் புறப்பட்டோம். உன் அகத்துக்காரர் கூட ஒரு நாள் இருந்துவிட்டுப் போகலாமே என்று சொன்னாராம்.....''

''சொன்னாராம் என்கிறாயே? உன்னிடம் சொல்லவில்லையா? அவருக்குப் பொம்மனாட்டிகளைக் கண்டாலே ரொம்ப சங்கோசம். ஆனால் உன்னிடம் அவருக்கு ரொம்ப மரியாதை. நீ தேசத்துக்காக ஜெயிலுக்குப் போயிருக்கிறாய் என்று கேட்டது முதல் அடிக்கடி உன்னைப் பற்றி விசாரித்துக் கொண்டிருப்பார். இப்போது நீயே வந்துவிட்டாய். சீதா! உன் அகத்துக்காரர் சீமையிலிருந்து திரும்பி வரும் வரையில் தேவப்பட்டணத்தில் எங்கள் வீட்டிலேயே நீ தங்கியிருக்க வேண்டும். வேறு எந்த இடத்துக்கும் போகக் கூடாது. தெரிகிறதா?''

'' அதைப் பற்றி இப்போது என்ன அவசரம், லலிதா! பிறகு சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். இப்போது மாமாவைப் போய்ப் பார்க்கலாம்!'' என்றாள் சீதா.

இந்தச் சந்தர்ப்பத்தில் சரஸ்வதி அம்மாள் அங்கு வரவே, ''அம்மா! இதோ சீதா அத்தங்கா வந்திருக்கிறாள். பார்த்தாயா?'' என்றாள் லலிதா.


'' நமஸ்காரம், மாமி! சௌக்கியமா?'' என்று சீதா பவ்யமாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

சரஸ்வதி அம்மாளோ முகத்தைச் சுளுக்கிக் கொண்டு, ''வந்தாயாடி, அம்மா! வா! என்னவெல்லாமோ கேள்விப்பட்டேன். மனத்துக்கு அவ்வளவு சந்தோஷமாயில்லை. ஏதோ இந்த மட்டும் வந்து சேர்ந்தாயே? மாமாவுக்கு உடம்பு சரியாயில்லை என்று தெரியுமோ, இல்லையோ? யாராயிருந்தாலும் சரி; அவரிடம் அதிகமாக நச்சுப் பிச்சு என்று பேசக் கூடாது. டாக்டரின் உத்தரவு. புது மனுஷாளைக் கண்டால் அவருக்குத் தலைகால் தெரியாமல் போய் விடும். லலிதா! நான் சொல்லுகிறது தெரிகிறதோ, இல்லையோ?' அப்பா அதிகமாகப் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டாம்'' என்றாள்.

லலிதாவின் மனம் வேதனை அடைந்தது. அவள் கோபமாக அம்மாவைப் பார்த்தாள். அப்போது சீதா, ''மாமி! நான் மாமாவிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுக்கவில்லை. உடம்பு சரியில்லாதவர்களோடு அதிகமாகப் பேசக் கூடாதென்று அவ்வளவு தூரம் தெரியாதா எனக்கு?'' என்றாள்.

''உனக்குத் தெரியாமல் இருக்குமா, அம்மா! நீ மெட்ராஸ், பம்பாய், டில்லி, கல்கத்தா எல்லாப் பட்டணங்களிலும் இருந்தவள். நான் இந்தப் பட்டிக்காட்டிலேயே விழுந்து கிடக்கிறவள். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இவருக்கு ஏதாவது கொஞ்சம் உடம்பு அதிகம் என்றால் என் தலையிலே தானே விடிகிறது! வயது வேறே ஆகிவிட்டது. முன்னேயெல்லாம் போல் சக்கரமாகச் சுற்றிக் காரியம் செய்ய முடிகிறதா? யாராவது இரண்டு பேர் வீட்டுக்கு விருந்தாளிகள் வந்துவிட்டால் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று பயமாயிருக்கிறது. முன்னைப் போல் சமைக்கப் பரிசாரகனாவது இருக்கிறானா? அதுவும் இல்லை. உன் மாமாவுக்குக் கடன் உடன் அதிகமாகப் போய் விட்டது. பரிசாரகன் வைத்துக் கொள்ளக் கட்டவில்லை!....''

''போதும், அம்மா! உன் பஞ்சப் பாட்டை அப்புறம் பாடலாம். அத்தங்கா வந்ததும் வராததுமாக இதெல்லாம் எதற்காகச் சொல்லுகிறாய்? எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை! நீ வா, சீதா! மாமாவைப் போய்ப் பார்க்கலாம்!'' என்று



சொல்லிச் சீதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள் லலிதா.

* * *

கிட்டாவய்யர் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் சூரியாவும் சண்டுவும் உட்கார்ந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். லலிதாவும் சீதாவும் அறைக்குள் வந்ததும் அவர்கள் எழுந்தார்கள்.

''அத்தங்கா! அப்பாவுக்கு நான் வந்ததில் கூட அவ்வளவு சந்தோஷம் இல்லை. உன்னை அழைத்து வந்ததிலேதான் திருப்தி. உன் கதையையெல்லாம் அப்பாவுக்குக் கேட்க வேண்டுமாம்!'' என்று சூரியா சொல்லிவிட்டுச் சண்டுவையும் அழைத்துக் கொண்டு போனான்.

மாமாவுக்குச் சீதா நமஸ்காரம் செய்தாள். அவர் உட்காரச் சொன்னதும் உட்கார்ந்தாள். கிட்டாவய்யரும் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, சீதாவின் தலையை அன்புடன் தொட்டு, ''மகராஜியாக இரு!'' என்றார்.

மாமாவை அந்தப் பலவீனமான நிலையில் உடம்பில் காயக் கட்டுகளுடன் பார்த்ததினாலும், ''மகராஜியாயிரு!'' என்ற அவருடைய ஆசீர்வாதம் வேறு பல நினைவுகளை உண்டு பண்ணியதனாலும் சீதாவின் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

அந்தக் கண்ணீரின் காரணத்தைக் கிட்டாவய்யர் வேறுவிதமாக அர்த்தம் செய்து கொண்டார். தம் மனையாள் சீதாவை வரவேற்றுச் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகள் அவருடைய காதிலும் விழுந்து அவருக்கு வருத்தத்தை உண்டு பண்ணியிருந்தன. எனவே அவர் உணர்ச்சி ததும்பிய குரலில், ''நீ வருத்தப்படாதே, சீதா! உன் மாமியின் சுபாவந்தான் தெரியுமே! உலகத்தில் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் உன் மாமி மட்டும் கொஞ்சங்கூட மாறாமல் அப்படியே இருக்கிறாள்!'' என்றார்.



சீதா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ''அதற்காக நான் வருத்தப்படவில்லை, மாமா! உங்களை இப்படிப் பார்த்ததும் எனக்குத் துக்கமாயிருக்கிறது. மாமி சொன்னதில் ஒரு குற்றமும் கிடையாது. நான் பிறந்த வேளை அப்படி!'' என்றாள்.

''நீ பிறந்த வேளைக்கு என்ன வந்தது? திவ்யமான நாள் நட்சத்திரத்தில் நீ பிறந்தவள். உனக்கு மலை போல் வரும் கஷ்டங்கள் எல்லாம் பனி போல் நீங்கி விடும். கொஞ்ச நாட்களில் எல்லாக் கஷ்டங்களும் நீங்கி நீ சௌக்கியமாக இருப்பாய்'' என்றார் கிட்டாவய்யர்.

'' தங்களுடைய ஆசிர்வாதத்தினால் அப்படியே ஆகட்டும், மாமா! முதலில் தங்களுடைய உடம்பு சௌக்கியமாக வேண்டும். உங்களை யாரோ அடித்து விட்டார்கள் என்று கேட்டதும் நான் துடித்துப் போய்விட்டேன். ஒரு காக்காய்க்குக்கூடத் தீங்கு எண்ணாத தங்களை அடித்தவர்கள் எப்பேர்ப்பட்ட சண்டாளப் பாபிகளாய் இருக்க வேண்டும்!'' என்றாள் சீதா.

''தலைவிதி, அம்மா! தலை விதி! அதற்கு அவர்களைத் திட்டி என்ன பிரயோசனம்? சீதா! ஒரு விஷயத்தைக் கேள். திருடர்கள் நான் வந்த வண்டியை வழிமறித்து அடித்தபோது ஓர் அடி படார் என்று மண்டையில் விழுந்தது. என் கதி கலங்கியது. அந்த நிமிஷமே உயிர் போய்விடும் போலத் தோன்றியது. அப்போது நான் என்ன நினைத்தேன் தெரியுமா? என் மனக் கண் முன்னால் யார் வந்தது என்று தெரியுமா? உன் தாயார் ராஜம்மாள்தான் வந்தாள், அவள் எங்கேயோ வான வெளியில் நின்று தன் மெலிந்த கரங்களை நீட்டி, 'அண்ணா! வாருங்கள்' என்று என்னை அழைப்பது போலத் தோன்றியது. அப்போது நான், 'அடாடா! குழந்தை சீதாவைப் பார்த்துச் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டோமே? சீதா சௌக்கியமா என்று இவள் கேட்டால் பதில் என்ன சொல்லுவது?' என்று நினைத்துக் கொண்டேன். இவ்வளவும் அடிபட்டுக் கலங்கிய ஒரு நிமிஷ நேரத்தில் என் மனத்தில் நடந்தது!'' என்றார் கிட்டாவய்யர்.

'' மாமா! இதிலிருந்து என் பேரிலும் அம்மா பேரிலும் உங்களுக்கு எவ்வளவு அன்பு என்று தெரிகிறது. ஆனால் நீங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். டாக்டர் உத்தரவுப்படி நடக்க வேண்டும் அல்லவா?'' என்றாள் சீதா.

''ஆமாம்; ஒரே மூச்சில் அதிகமாகப் பேசக் கூடாதுதான். உன்னைப் பார்க்க வேண்டும் என்றும் உன்னிடம் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்றும் எவ்வளவோ ஆவலாயிருந்தேன். உன்னைப் பார்க்க முடியாமலே போய் விடுமோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீயே என்னைப் பார்ப்பதற்கு வந்துவிட்டாய். மற்றதெல்லாம் இராத்திரி சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். நீ இப்போது போய்க் குளித்துவிட்டுச் சாப்பிடு, அம்மா!'' என்று கிட்டாவய்யர் அருமையுடன் கூறினார்.

## 4. காதல் என்னும் மாயை

சீதாவும் லலிதாவும் அன்று சாயங்காலம் குளத்தங்கரைப் பங்களாவுக்குச் சென்றார்கள். 'பங்களா' என்று அந்தக் கட்டடத்தை முன்னே மரியாதைக்குச் சொல்லக்கூடியதாயிருந்தது. இப்போது அப்படிக்கூடச் சொல்வதற்கில்லை. அந்தக் கட்டடத்தின் கூரையில் பல துவாரங்கள் காணப்பட்டன. கீழ்த்தரை குண்டும் குழியுமாயிருந்தது. சுவர்களின் மேல் பூச்சு பல இடங்களில் உதிர்ந்து போயிருந்தது. திண்ணைக்குப் பந்தோபஸ்தாகவும் அலங்காரமாகவும் அமைந்திருந்த மூங்கில் பிளாச்சு வேலி பல இடங்களில் முறிந்து விழுந்து கிடந்தது.

பங்களாதான் இப்படி என்றால், பங்களாவுக்கு எதிரில் இருந்த குளமும் களை குன்றிக் காணப்பட்டது.

குளத்தில் தண்ணீருக்குக் குறைவில்லை. ஆனால் முன்னொரு காலத்தில் கரையோரமாக வளர்ந்திருந்த அலரிச் செடிகளையும் செம்பருத்திச் செடிகளையும் இப்போது காணவில்லை. குளத்தின் படித்துறை பாசி பிடித்தும் இடிந்தும் காணப்பட்டது.

சீதாவும் லலிதாவும் குளக்கரையில் இடிந்த படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிது நேரம் சீதா சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். சுற்றுப்புறத் தோற்றத்தில் இன்னும் ஏதோ வித்தியாசம் இருப்பதாக அவளுக்குத் தோன்றிக்கொண்டேயிருந்தது. பளிச்சென்று அது என்ன என்பது புலனாயிற்று.

''லலிதா! குளத்தின் மேல் கரையில் இருந்த சவுக்கு மரத் தோப்பு எங்கே?'' என்று கேட்டாள்.

''அதை வெட்டி விறகுக்கு விற்றாகி விட்டது!'' என்றாள் லலிதா.

''அதனால்தான் இந்தப் பக்கமெல்லாம் இப்படிப் பார்ப்பதற்கு வெறிச் சென்று இருக்கிறது. சவுக்குத் தோப்பை வெட்டி விட்டபடியால் இந்தக் குளக்கரையின் அழகே போய்விட்

# வளரும் குழந்தைகளுக்கு
# இனிய போர்ன்விடா !



சக்தி வளரட்டும்! பள்ளியிலும்
விளையாட்டிலும், இன்றும் என்றுமே,
வெற்றி அவனுக்கே. ஆம்! அவன்
சுவைத்துப் பருகுவது போர்ன்விடா.
ஊட்டமளிக்கும் **கோகோ**, பால்
மால்ட், சர்க்கரை இவை இனிதே
கலந்திட்ட போர்ன்விடாவிலே அடங்கி
யுள்ளது அவனுடைய ஒளிமிக்க
எதிர்காலம்.




**சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும் *காட்பரிஸ்* போர்ன்விடா!**




○ டோக்கியோ டவர் உல்லாசப் பயணிகள் உயரே ஏறிச் சுற்றுவட்டாரத்தைப் பார்த்து ரசிக்க மட்டும் ஏற்பட்டதல்ல. டெலிவிஷன் ரேடியோ ஒலிபரப்பு நிலையமாகவும் பயன்படுகிறது. நிலநடுக்கத்தைப் பதிவுசெய்கிறது. காற்றின் வேகம், திசை இவற்றை உணர்த்துகிறது. விளையாட்டுக் கூடமும், கடைகளும், நவீன விஞ்ஞான மியூஸியமும் இதில் உண்டு. உயரம் 333 மீட்டர். இந்த உயர்ந்த டவர் மின்னலைத் தடுத்தும் இழுத்துக் கொள்கிறது. எத்தனை மின்னல்கள் எழுந்தன என்பதையும் பதிவு செய்து கொள்கிறது.

○ ஒரு சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பெனியை நிர்வகிக்க எத்தனை நபர்கள் தேவை? 1972 ஜனவரி கணக்கின்படி ஏர்பிரான்ஸின் போக்குவரத்தைச் சுமார் 64,000 பேர் நிர்வகிக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது. அந்நியச் செலாவணி வருவாயில் ஏர்பிரான்ஸ் நிறுவனம் பிரான்ஸில் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. எலெக்டிரானிக் முறைப்படி முப்பத்து மூன்று பெரிய நகரங்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொண்டு ரிசர்வேஷன் செய்கிறார்கள்.




– ஆர். கண்ணன்

டது. இப்போது என்னுடைய வாழ்க்கை சூனியமாயிருப்பது போல் இந்தப் பிரதேசமும் சூனியமாயிருக்கிறது!'' என்று சொல்லிச் சீதா பெருமூச்சு விட்டாள்.

''நீ இப்படிப் பேசுவது எனக்குப் புரியவேயில்லை! டில்லியிலிருந்து நீ கடைசியாக எழுதிய கடிதங்களும் எனக்குச் சரியாக அர்த்தமாகவில்லை! உனக்கென்ன வருத்தம், சீதா! ஏன் இப்படி வாழ்க்கையையே வெறுத்தவள் போல் பேசுகிறாய்? அவருக்கும் உனக்கும் ஒத்துக் கொள்ளவில்லையா? இந்த ஊரில் நீங்கள் ஒருவரையொருவர் பார்த்துப் பிரியப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டீர்களே? இந்தப் பக்கத்து ஊர்களிலெல்லாம் வெகு காலம் வரையில் உங்களுடைய காதல் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களே? அதெல்லாம் வெறும் பொய்யா? உங்களுக்குள் ஏன் ஒத்துக் கொள்ளவில்லை? உண்மையில் அவருக்கு உன் பேரில் அன்பு இல்லையா?'' என்று லலிதா மிகுந்த வருத்தமான குரலில் கேட்டாள்.

''எனக்குத் தெரியாது. அவருக்கு என் பேரில் அன்பு இருக்கிறதா இல்லையா என்பதே எனக்குத் தெரியாது. ஆரம்பத்திலிருந்தே அவருக்கும் எனக்கும் மத்தியில் ஒரு மாயத் திரை தொங்கிக் கொண்டிருந்தது. அவருடைய மனத்தை நான் அறிய முடியாமல் அந்தத் திரை மறைத்துக் கொண்டிருந்தது. அந்தத் திரையைத் திறந்து அவருடைய மனத்தில் உள்ளது என்னவென்பதை அறிந்துகொள்ள நான் பிரயத்தனப்படவேயில்லை. அத்தனை தைரியம் எனக்கு இல்லை. திரையைத் திறந்து பார்த்தால் உள்ளே என்ன இருக்குமோ என்னமோ என்று பயந்தேன். பேய் பிசாசு இருக்குமோ, புலியும் கரடியும் இருக்குமோ, அல்லது

விசுவாமித்திரரை மயக்கிய மேனகையைப் போல் யாராவது ஒரு மாய மோகினி இருப்பாளோ என்று எனக்குப் பயமாயிருந்தது. ஆகையினால் திரையை நீக்கி அவருடைய மனத்தை அறிந்து கொள்ள நான் பிரயத்தனப்படவேயில்லை. அப்படிப் பிரயத்தனப்பட்டிருந்தால் ஒரு வேளை நான் கொலை காரியாகியிருப்பேன். அல்லது கொலையுண்டு செத்துப் போயிருந்தாலும் போயிருப்பேன்!'' என்றாள் சீதா.

''நீ பேசுவது மர்மமாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது, சீதா! நமக்குக் கல்யாணம் ஆன புதிதில் இதே இடத்தில் நாம் உட்கார்ந்து எத்தனை நாட்கள் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம்? அவர் உன்னிடம் வைத்த காதலைக் குறித்து எவ்வளவு பூரிப்புடன் பேசிக் கொண்டிருந்தாய்? அதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கும் எத்தனையோ சந்தோஷமாயிருந்தது. என்னுடைய கணவர் என்னிடம் அப்படியெல்லாம் இல்லையே என்றெண்ணி ஏமாற்றமும் அடைந்தேன். இப்போது நீ பேசுவதைப் பார்த்தால் எல்லாம் பொய் என்று பெரியவர்கள் சொல்லுவது உண்மைதான் போலிருக்கிறது'' என்று லலிதா கூறினாள்.

''அதில் சந்தேகமில்லை, லலிதா! பெரியவர்கள் இந்த உலகத்தை 'மாய உலகம்' என்று சொல்லுவது சரிதான். இந்த மாய உலகத்தில் காதல் ஒன்றுதான் உண்மையானது என்று சிலர் சொல்வதுண்டு. நாவல்களிலும், நாடகங்களிலும், சினிமாக்களிலும் இப்படிச் சொல்வார்கள். அதைப்போல் மூடத்தனம், பைத்தியக்காரத்தனம் — வேறு ஒன்றும் கிடையாது. இந்த மாய உலகத்தில் எத்தனையோ மாயைகள் இருக்கின்றன. எல்லா மாயைகளிலும் பெரிய மாயை காதல் என்பதுதான். என்னுடைய பெண்ணுக்கும் உன்னுடைய பெண்ணுக்கும் கொஞ்சம் வயதாகும் போது, அதுவரையில்நான் உயிரோடிருந்தால், அவர்களிடம் சொல்லப் போகிறேன். 'கதைகளைப் படித்து விட்டும் நாடகங்களையும் சினிமாக்களையும் பார்த்துவிட்டும் காதல், கீதல் என்று பைத்தியக்கார எண்ணம் எண்ணிக் கொண்டிராதீர்கள். பெரியவர்கள் பார்த்துச் செய்து வைக்கும் கல்யாணத்திலேதான் வாழ்க்கை முழுவதும் சந்தோஷமாயிருக்கலாம் என்று சொல்லப் போகிறேன். காதல் என்பது வெறும் மாயை என்பதற்கு என்னையே உதாரணமாகக் காட்டப் போகிறேன்.''

''சீதா! உன்னுடைய பேச்சில் எனக்கு இன்னமும் நம்பிக்கை உண்டாகவில்லை! ஏதோ ஒரு பெருந் துக்கத்தினால் அல்லது மனக் கசப்பினால் இப்படிப் பேசுகிறாயோ என்று நினைக்கிறேன். காதல் என்பது மாயை என்றும் பொய் என்றும் சொல்லுகிறாயே? ஆனால் அந்தச் சமயத்தில்—நமக்குக் கல்யாணம் ஆன சமயத்தில் — நீ அநுபவித்த சந்தோஷமெல்லாம் பொய் என்று சொல்ல முடியுமா? இந்தக் குளக்கரையில் உட்கார்ந்து நீ சொன்னதெல்லாம் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கிறது. அவருடைய பெயரைச் சொன்னால் உன் உடம்பு எப்படிப் பூரித்தது என்பதெல்லாம் எனக்கு நேற்று நடந்தது போல் ஞாபகத்துக்கு வருகிறது. அதெல்லாம் வெறும் பொய் என்பதாக நான் இன்னமும் நம்ப முடியவில்லை.''

''நீ மட்டும் என்ன? என்னால்கூட நம்ப முடியவில்லைதான், லலிதா! அதையெல்லாம் நினைத்தால் இப்போதுகூட என் உடம்பு சிலிர்க்கிறது. முதன் முதலில் அவரும் நானும் பார்த்துக் கொண்ட பிறகு, எங்களுடைய ஆசையை வெளியிட்டுக் கொண்ட பிறகு, இந்தப் பூவுலகம் எனக்குச் சொர்க்க லோகமாக மாறியிருந்தது. அவர் முதன் முதலில் என் கரத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்ட பிறகு, அவருடைய காதலைச் சொல்லிவிட்டு நான் சற்றும் எதிர்பாராத நிலையில் என் கன்னத்தில் கன்னி முத்தம் ஈந்த பிறகு, என்னுடைய மனித ஜன்மம் மாறித் தேவ கன்னிகை ஆகியிருந்தேன். அந்த நாட்களில் வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் என் தேகத்தை அலங்கரித்தன. பூலோகத்துப் புஷ்பங்கள் எல்லாம் என் உடம்பில் மலர்ந்து மணம் வீசின. சந்திர கிரணங்கள் என் தேகத்தை மூடும் சல்லாத் துணி ஆயின. தென்றல் காற்று என் மேனியைக் குளிர்விப்பதற்காகவே வீசிற்று. சந்தனம் எனக்காகவே சுகந்தம் அளித்தது. நான் அணிந்த பட்டுப் புடவைகள் என்னுடைய மேனியின் அழகினால் சோபை பெற்று விளங்கின. இதையெல்லாம் நானே உணர்ந்தேன். லலிதா! அவ்வளவும் அப்போது உண்மையாகத்தான் தோன்றின. 'மாயை' என்றோ 'பொய்' என்றோ ஒரு கணமும் நான் நினைக்கவில்லை. அவர் என்னிடம் அந்த நாளில் வைத்திருந்த ஆசையைத்தான் என்னவென்று சொல்லுவேன்? தமயந்தியிடம் நளன் வைத்த ஆசையும் ஜூலியட்டிடம் ரோமியோ வைத்த ஆசையும் லைலாவிடம் மஜ்னூ வைத்த ஆசையும் அவர் என்னிடம் வைத்திருந்த ஆசைக்கு இணையாகாது என்றே

தோன்றியது. கதைகளில் வரும் அந்தக் காதலர்களின் காதலையும் என்னிடம் என் கணவர் வைத்திருந்த காதலையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களைவிட நானே அதிர்ஷ்டசாலி என்று நினைத்து மகிழ்ந்தேன். அவரும் நானும் தங்கத் தோணியிலே ஏறிக் கொண்டு கரை காணாத கடலில் மிதந்து மிதந்து போய்க் கொண்டிருந்தோம். எங்கள் இன்பப் பிரயாணத்துக்கு முடிவே கிடையாது என்று தோன்றியது. வெள்ளி நிற அன்னப் பறவைகள் பூட்டிய புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டு நாங்கள் நீல வானத்தில் நட்சத்திர மண்டலங்களுக்கிடையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தோம். எங்களுடைய ஆனந்த யாத்திரைக்கு அந்தமே கிடையாது என்று எண்ணினேன். ஆனால் ஒரு நாள் அதற்கு முடிவு வந்தேவிட்டது. உன்னையும் என்னையும் போல் பெண்ணாய்ப் பிறந்தவள் ஒருத்தி வந்து எங்கள் ஆனந்த வாழ்க்கையில் குறுக்கிட்டாள். அந்த நிமிஷத்தில் சனியன் பிடித்தது. அவருடைய மனம் பேதவித்தது. என்னுடைய சொர்க்கம் ஒரு நொடிப் பொழுதில் நரகமாக மாறியது. லலிதா! நான் வங்க நாட்டுச் சிறையில் இருந்த போது ஒரு பாடலைக் கேட்டேன். அது என் மனத்தை ரொம்பவும் கவர்ந்தது. என் மனத்தில் உற்சாகம் குன்றித் துயரம் ஏற்படும் போதெல்லாம் அதைப் பாடுவேன். உனக்கு அதை இப்போது பாடிக் காட்டட்டுமா?'' என்றாள் சீதா.

''கேட்கவேண்டுமா என்ன? பேஷாய்ப் பாடு! நீ பாடுவது எனக்கு எப்போதுமே பிடிக்குமே! அது வங்காளி பாஷைப் பாட்டா?'' என்றாள் லலிதா.

''நான் கேட்டது வங்காளிப் பாட்டுத்தான்; ஆனால் அதை நானே தமிழ்ப்படுத்தினேன், கேள்!'' என்று சொல்லி விட்டு சீதா துயரம் ததும்பிய வர்ணமெட்டில் பின்வரும் பாட்டைப் பாடினாள் :

**''பாற்கடல் மீதினில் பசும்பொன் படகினில்**
**பரிந்தேற்றிச் சென்றவர் யார்?**
**— என்னைப்**
**பரிந்தேற்றிச் சென்றவர் யார்?**

**காற்றங்கு அடித்திட கடல் பொங்கும் வேளையில்**
**கைவிட்டுச் சென்றவர் யார்?—சகியே**
**கைவிட்டுச் சென்றவர் யார்?**

**வான வெளியில் தேனிலவு தன்னில்**
**தானாக நின்றவர் யார்? — சகியே**
**தானாக நின்றவர் யார்?**

**தானாக நின்றென்னைத் தாவி அணைத்துப் பின்**
**தனியாக்கிச் சென்றவர் யார்?**
**— என்னைத்**
**தனியாக்கிச் சென்றவர் யார்?''**

இந்தப் பாட்டைப் பாடிவிட்டுச் சீதா விம்மி விம்மி அழத் தொடங்கினாள். லலிதா அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு பலவிதமாக ஆறுதல் கூறினாள்.

அவ்விதம் ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கும் போதே லலிதா தன் மனத்துக்குள், ''ஐயோ பாவம்! என்னவெல்லாமோ கஷ்டங்களை அனுபவித்து இவளுடைய மூளையில் கொஞ்சம் கோளாறு உண்டாகி யிருக்கிறது!'' என்று எண்ணிக் கொண்டாள். (தொடரும்)

## ஸ்ரீ மகா பக்த விஜயம்

திருக்கோவலூர் தபோவனத்தில் இருந்துகொண்டு அருள் நெறி பரப்பி வரும் ஸ்ரீ சத்குரு ஞானாநந்தகிரி ஸ்வாமிகளின் சீடரான ஸ்ரீ ஸ்வாமி ஹரிதாஸ் சென்னை மயிலை பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாதத்துக்கு மேலாக ஸ்ரீ மஹா பக்த விஜயக் கதைகளைச் சங்கீத உபந்நியாசமாக அழகுபட விரித்துரைத்து வருகிறார். ஸ்ரீ ஞானாநந்த சேவா சமாஜக் கட்டிட நிதிக்காக நடத்தப்பெறும் இந்த அரிய பிரவசனத் தொடர் இம்மாதம் முப்பத்தொன்றாந் தேதி வரை நீடிக்கிறது. அன்பர்கள் கலந்துகொண்டு பக்தித் தேனைப் பருகி, முக்தி நெறிக்குதவும் மன்றம் எழும்ப உதவ வேண்டும்.

# பாமாவின் பதில்

**அட்டைப் படக்கதை**

ருக்மிணி பார்த்தசாரதி

கதவருகே பியூன் நின்ருன். ''ஸார் ! புது அதிகாரி வந்திருக்காங்க...''

'' ஓ, சரி.... பத்து மணி சுமாருக்கு என்னே வந்து பார்க்கச் சொல்லு....''

''சரி சார் !''

பியூன் கதவை மெல்லச் சாத்திக் கொண்டு சென்ருன். ராகவனுக்குக் கீழ் பணி செய்யப் போகும் புது அதிகாரி, பெண் ! வேறு ஏதோ அலுவலகத்திலிருந்து 'டெபுடேஷனில்' வந்திருக்கிருள்.

''பெண்ணுே ஆணுே! ஆபீஸ் வேலே சரியாய் நடந்தால் சரி!'' என்று ராகவன் நினேத்துக் கொண்டான்.

மணி பத்தடித்து ஓய்ந்தது. அதன் எதிரொலி போல் மின்சார மணி ஒலித்தது. பியூன் தலேயை உள்ளே நீட்டினுன்.

''அதிகாரி வந்திருக்காங்க!''

''உள்ளே, வரச் சொல்!'' என்றவாறு அவன் எழுந்து நின்ருன். என்னதான் சிறிய அதிகாரி என்ருலும் பெண் அல்லவா!

நின்றவன் உள்ளே வந்தவளேக் கண்டதும் சிலேயெனச் சமைந்துவிட்டான். அவள் பாமா! பாமாவேதான்!

அவள் முகத்தில் உணர்ச்சிகளின் சாயலே இல்லே. ''நான்தான் மிஸஸ் பாமா!'' என்று தன்னேத்தானே அவள் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

தெரியாதா அவனுக்கு ? என்னதான் பதினேந்து வருடங்களுக்குமுன் பிரிந்துவிட்டாலும் இரண்டு வருட காலம் தன்ேேடு இல்லறம் நடத்தியவளே மறந்துவிட முடியுமா? எத்தனே மனக் கசப்போடு அவர்கள் பிரிந்தார்கள் ! அதையுமா அவள் மறந்து போய் விட்டாள்? அவனே அடையாளம் கண்டுகொண்டதாகக்கூட அவள் காட்டிக் கொள்ளவில்லேயே !

அவனுடைய இதயத்தில் கண நேரம் கோபம் பொங்கிற்று. இப்படிக் கூடவா ஒரு பெண் கர்வத்தின் உருவாய் இருப்பாள் !

ஆனுல் அவள் முகத்தில் கர்வத்தின் முத்திரையைக் காண முடியவில்லே.... பின், அதென்ன உணர்ச்சி? அல்லது உணர்ச்சியின்மை? மரமா அவள்? ஜடப்பொருளா ?

சரி.... அப்படி அவள் ஒரு திரையை இருவருக்குமிடையே நிரந்தரமாக இறக்கிவிட விரும்பினுல், அவன் ஆட்சேபிக்கப் போவதில்லே..... என்ருே அவளேப் பிரிந்தாகிவிட்டது. இப்போது அவர்கள் நண்பர்கள்கூட இல்லே... அன்னியர்கள். ஒருவரையொருவர் குத்திப் பிழிந்துவிட்டு வெவ்வேறு வாழ்க்கைப் ''ாதைகளில் சென்றுவிட்ட அன்னியர்கள்....

'' நீங்கள் எங்கள் அலுவலகத்துக்கு வந்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி மிஸஸ் பாமா!'' என்ருன் ராகவன் சம்பிரதாயமாக.

'' எனக்கும் இதில் மிக்க மகிழ்ச்சி, மிஸ்டர் ராகவன்......'' என்ருள் அவள். குரலில் தெளிவு, இனிமை.....

எத்தனே வருடங்களாகி விட்டன இந்தக் குரலேக் கேட்டு ! இதயத்தில் நீறு பூத்த நெருப்பாய்ச் சுடும் ஏதோ ஒரு ரணத்தை எதிர்பாராமல் குத்திவிட்டாற் போலிருந்தது.

அறிமுகம் தீர்ந்தது. அவள் போய்விட்டாள்...... தன்னேயும் அறியாமல் அவன் பெருமூச்செறிந்தான். மிஸஸ் பாமா....ஒரு காலத்தில் அவள் பாமா ராகவனுக இருந்தாள். இப்போது தன் பெயரிலிருந்தும் அவனே அகற்றிவிட்டாள், வாழ்விலிருந்து அகற்றிவிட்ட மாதிரி.....

பாமா.... என்றுமே அவள் அழகியல்ல.... ஆனுல் அவள் தோற்றத்தில் ஒரு நிறைவு இருக்கும்.... ஏதோ விவரிக்க முடியாத ஒரு தன்மை நெஞ்சுக்கு ஆறுதல் அளிக்கும். சந்தன நிறமுமில்லே, மாநிறமுமில்லே. முன்பு தலே முடி பின்னலாக நீண்டு தொங்கும். இப்போதோ கொண்டையாகத் தரிசனம் தந்தது. குப்பென்று நரைக்க ஆரம்பித்து விட்ட முடிக்குக் கருமை ஏற்ற அவள் முயற்சி செய்திருக்கவில்லே. ஆனுல் முகத்தின் இளமைத் தோற்றத்தை அந்த வெண் கீற்றுக்கள் பாதிக்கவில்லே.

கதவு இரண்டு முறைகள் தட்டப்பட்டது..... இரண்டே முறைகள்.... தாமுவின் பாணி இது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தவன், ராகவன் முன் நாற்காலியில் சௌகரியமாக உட்கார்ந்து கால்களே மேஜையின் மீது போட்டுக் கொண்டான்.

தாமுவும் ராகவனும் அந்த அலுவலகத்தில் சமமான கௌரவம் கொண்ட வெவ்வேறு பிரிவுகளின் தலேமை அதிகாரிகள். தாமு மனேவியை இழந்தவன்.... பத்து வயதுப் பையனின் தகப்பன். ராகவனின் வெகுசில நண்பர்களுள் முக்கியமானவன்.

'' உன் சீனியரைப் பார்த்தேன்.... அவள் வந்தவுடனேயே நூறு வாட் பல்ப் போட்ட மாதிரி ஆபீஸே களே கட்டிவிட்டது !'' என்ருன் தாமு.

''அப்படியென்ருல் ?''

''அவளிடம் ஒரு கம்பீரம் இருக்கிறதடா, ராகவா! எனக்கு 'காரியர் கர்ல்ஸ்' என்ருல் கொஞ்சம் நடுக்கம். வேலேயைக் கவனிக்க மாட்டார்கள். ஆடை அலங்காரங்களிலேயே கண்ணுய் இருப்பார்கள்..... இவள் பரவாயில்லே.... என்ன சொல்கிருய்?''

''சொல்ல என்ன இருக்கிறது? வேலே நடந்தால் சரி......''

''நடக்கும். குணவதியாம். ரொம்ப நல்ல பெயர். அசாத்தியத் திறமைசாலி



யாம்...

எந்தப் பொறுப்பைத் தந்தாலும் ஒரு குற்றச்சாட்டுக்கு இடமில்லாமல் வேலையை நடத்திக் காண்பிப்பாளாம்...''

ராகவன் பதில் சொல்லவில்லை... தாமு எழுந்து போகமாட்டானா என்று ஆத்திரம் பொங்கிற்று. குணவதியாம்; ரொம்ப நல்ல பெயராம்! 'சீ! காரக்டர் உடைய பெண்ணா நீ!' என்றுதானே அவன் குற்றம் சாட்டினான் ஒரு காலத்தில்!

''ஏண்டா, ராகவா, ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்றான் தாமு.

'' என்ன மாதிரி ?''

''விளக்கெண்ணெய் குடித்த மாதிரி !'' தாமு சிரித்தான். பட்டென்று கன்னத்தில் அறைய வேண்டும் போல் இருந்தது ராகவனுக்கு.

''தலை வலி!'' என்று முனகினான்.

''ஓ! ஆபீஸ் கான்டீனிலிருந்து ஸ்பெஷல் காப்பி அனுப்புகிறேன்...'' தாமு தன் கால்களை இறக்கி, எழுந்து, அறையை விட்டு வெளியேறினான்...

இப்படியொரு சந்திப்பு நேரும் என்று ராகவன் எதிர்பார்க்கவில்லை. பாமா அவனைப் பிரிந்து சென்றபோது அவளும் அரசாங்க உத்தியோகம் ஏற்று ஒரு நாள் அவனுக்குக் கீழ் பணிபுரிய வருவாள் என்று அவன் நினைக்கவே இல்லை.

பாமா! அவன் அறிந்த பாமா இவளல்ல....அவள்.....

**ரா**கவன் என்றுமே பொறுமையின் உருவமாக இருந்தவன். பாமாவை அவன் மணந்த போது, அவள் உடலை, உயிரை, மனத்தை, இதயத்தை எல்லாவற்றையுமே விலை கொடுத்து வாங்கிவிட்டதாகத்தான் நினைத்தான். அவள் தன் உடன் பிறந்த அண்ணன் தம்பியோடு சற்று அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் அவன் மனம் பொறுக்க மாட்டான். ''உனக்கு உன் அண்ணன்தான் முக்கியம். உன் தம்பி மேல்தான் பாசம்...அவர்களுக்கெதிரே என்னை அவமானப்படுத்த வேண்டும் என்று என்னோடு பேசாமல் இருந்தாய்!'' என்பான்.

பாமா இயற்கையாகவே கலகலப்பானவள். எதைச் சொன்னாலும் பேச்சில் ஹாஸ்யம் இழையோடும். சிரிப்பொலி இன்னிசையாய், வெள்ளி மணிகளைச் சேர்த்துக் குலுக்கினாற்போல் சிதறும். உண்மையில் அந்தச்

சிரிப்பு அவனுடைய மனப் பரிசுத்தத்தின் சான்றுதான்.

ஆனால் அதை அப்படிக் காணும் குணம் ராகவனுக்கில்லை. அவள் முகம் யாரையாவது கண்டு சிநேக பாவத்தோடு மலர்ந்தால் அதை அவள் தனக்குச் செய்யும் துரோகமாகவே அவன் நினைத்தான். என்றாவது சமையல் நன்றாக அமையவில்லை என்றால், "ஏன்? உன் அத்தை பெண்ணும் அவள் கணவனும் வந்திருந்தபோது நன்றாகச் செய்தாயே, வருந்தி வருந்தி உபசரித்தாயே, அந்தத் தடியன், 'ஆகா! அபாரம்!' என்று புகழ்ந்த போது வாயில் முப்பத்திரண்டு பற்களும் தெரியச் சிரித்தாயே! இன்று எங்கே அந்தத் திறமை?" என்பான். அவனுடைய நண்பனின் குழந்தைக்கு ஆண்டு நிறைவுவிழா என்று அழைப்பு வந்து, கணவனுடைய கௌரவம் குறையக் கூடாதே என்று அவள் கவனமாகப் பரிசு வாங்கினால், அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். "அவன் குழந்தை மேல் இதென்ன பாசம்?" என்று வார்த்தைகளில் நஞ்சைக் கலந்து கொட்டுவான். அவள் சற்றுக் கவனமாக உடுத்திக் கொண்டால் "யாரை மயக்க இந்த ஊர்வசி வேஷம்?" என்பான்.

பாமா பொறுத்துத்தான் வந்தாள். ஒரு நாள் பொறுமையின் எல்லை கடந்து விட்டது. ரணம் வெடித்து உதிரம் இதயமெல்லாம் வியாபித்து விட்டது.

அன்று சுமார் நாலு மணிக்கு அவளுடைய பெரியப்பா பிள்ளை — அவள் அண்ணன் — அவளைப் பார்க்க வந்திருந்தான். சிறு வயதில் அவர்கள் இல்லத்தில் வளர்ந்தவன். அந்த நினைவில் அவன் அழகழகான களங்கமற்ற எத்தனையோ சிறு சம்பவங்களை நினைவுகூர்ந்து சொன்னான். அப்போது தாங்கள் அறிந்தவர்களைப் பற்றிச் சுவாரசியமான செய்திகளை ஹாஸ்யத்தோடு விவரித்தான். அவள் வெள்ளை மனத்தோடு சிரித்தாள். தன் சகோதரனுக்குப் பணிவிடை செய்யும் நிறைவோடு அவனுக்குச் சிற்றுண்டி அளித்து உபசரித்தாள்.

ராகவன் வீடு வந்தான். தன் மனைவியோடு யாரோ பேசிக் கொண்டிருந்ததைக் கண்டு முகம் கறுத்தது.

சகோதரன் விடைபெற்றுக் கொண்டதும் கணவனுக்குச் சிற்றுண்டி எடுத்து வந்தாள் பாமா. அதை வெறிக்கப் பார்த்துக் கொண்டே அவன் "ஏது? எனக்குக்கூட மீதமிருக்கிறதா? உன் புதிய சிநேகிதருக்குக் கொடுத்த மிச்சமா இது?" என்றான்.

"என்னது?" அவள் அடிபட்ட பெண்மையின் வலியோடு கத்தினாள். "என்ன சொன்னீர்கள்? அவன் என் அண்ணன்."

"அண்ணன்.... சீ! வெட்கமாக இல்லை. உனக்குக் கொஞ்சமாவதுகூச்சமிருந்தால்? இப்படி அவனோடு அரட்டை அடித்திருப்பாயா?"

"இப்படிப் பேசாதீர்கள். இது நன்றாக இல்லை...."

"உன் நடத்தையை விடவா? 'காரெக்டர்' உடைய பெண்ணா நீ?"

அவள் உடனே பதில் சொல்லவில்லை. உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் பேச்சு எழவில்லை. குரல் வந்தபோது நிதானமாகச் சொன்னாள்: "உங்கள் பேச்சு விகாரமாக இருப்பதில் ஆச்சரியமில்லை. உலகத்திலுள்ள மிகப் பெரிய சாக்கடை உங்கள் மனத்தில் இருக்கிறது...."

மறுநாள் காலை தன் உடைமைகளோடு அவள் கிளம்பி விட்டாள். போகுமுன் "நமக்கிடை இனி எந்த உறவும் இல்லை" என்றாள்.

"இப்படி நீ செய்வதே நான் உன்மீது சந்தேகப்பட்டது நியாயம் என்பதை நிரூபிக்கிறது. என்மேல் அன்பு இருந்தால் நீ இப்படிக் கிளம்புவாயா?"

"என் அன்பை உங்கள் வார்த்தைகள் கொன்று விட்டன. பெண்களிடம் உங்களுக்கு நம்பிக்கையுமில்லை, மதிப்புமில்லை.... உங்களைப் போன்றவர்கள் மணம் புரிந்துகொள்வதே மன்னிக்க முடியாத குற்றம்." அது தான் அவள் சொன்ன கடைசி வாக்கியம்.

வெகு நாட்கள் அவன் பொறுத்துப் பார்த்தான். அவள் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சிக் கதறிக்கொண்டு அவனிடம் வருவாளென்று—வந்தால் அவளை விரட்டியடிக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருந்தான். ஆனால் அவள் வரவில்லை. அவள் ஏதோ வேலையில் அமர்ந்து விட்டாள் என்ற செய்தி கிடைத்தபோது தான் அவள் இனி வரவே மாட்டாள் என்று அவன் புரிந்து கொண்டான்.

வருடங்கள் மறைந்தன. அவன் மனத்தில் பாமாவின் மீது பொங்கிய வெறுப்பும் கோபமும் குறைந்தாலும் பூரணமாக மறையவில்லை. தான் செய்தது தவறு என்று சிந்தித்துப் பார்க்கும் பணிவு அவனிடமில்லை. தன் இல்லற வாழ்க்கை முறிந்து போனதற்கு அவன் அவளையே முழுப் பொறுப்பாளியாக்கினான்.

அவன் மறுமணம் செய்து கொள்ளவில்லை. 'ஒரு முறை நான் இல்லற வாழ்வில் புகுந்தேன். தோற்றுவிட்டேன். தோல்வி அடைந்தாலும் மறுபடியும் முயன்று பார்க்க இது என்ன விளையாட்டா?'

காலம் கரைந்தது. அவனிடம் மெள்ள மெள்ள ஒரு முதிர்ச்சி தோன்றியது. தன்னைச் சுற்றியுள்ள பரந்த உலகமே தனக்குப் பாடம் கற்பிப்பதாய் அவன் உணர்ந்தான். எத்தனையோ முறைகளில் நண்பர்களின் வீட்டுக்குச் செல்வான். அவர்களுடைய மனைவியர் இன்முகம் காட்டி, அக்கறையோடு சிற்றுண்டி அளித்து, சிரித்துப் பேசி உபசரிப்பார்கள். அதில் களங்கமே இல்லை என்பது அவன் மனத்துக்கு உள்ளங் கை நெல்லிக் கனியாய்த் தெரியும். 'இதே நிலையில்தானே பாமாவை நான் சந்தேகப்பட்டேன்?' என்ற எண்ணம் தோன்றி மறையும். அது விட்டுச் செல்லும் வலியைத் தாங்க மாட்டாமல் உடல் தள்ளாடும்.

ஆனால், பாமாவின் மீது அவன் மனத்தின் அடித்தளத்தில் கோபமும் வெறுப்பும் இருக்கத்தான் செய்தன.

இந்த ஒன்றரை ஆண்டுகளாக அலுவலகம் சீராக நடைபெற்று வந்தது. பாமாவின் திறமைதான் எத்தகையது! மேலதிகாரிகளிடமிருந்து பியூன்கள் வரையில் எல்லோரிடமும் அவள் இன்முகம் காட்டி இன்சொல் பேசி நடந்து வந்தாள். அவளிடம்

அதென்னதான் சக்தியோ! ஒரு யூனியன் தகராறு கூட இல்லை.

தாமு ஒரு நாள் ராகவனிடம் சொன்னான்: ''பாமா இருக்கிறாளே!...''

''மிஸஸ் பாமா என்று சொல்!'' தன்னையும் அறியாமல் வார்த்தைகள் வெளிவந்தன.

''சரி... மிஸஸ் பாமா... அவள் பாவம், கணவனைப் பிரிந்து வாழ்பவளாம்...''

''யார் சொன்னது?''

''அவளுடைய தம்பியின் நண்பன் இங்கு வேலை செய்பவர் ஒருவரின் உறவுக்காரன்... அவன் மூலம்தான்...''

''வம்புப் பேச்சு இனிக்கிறதா தாமு? பாமாவின் குடும்ப விஷயங்களைப் பற்றி நமக்கு என்ன?''

''உன்னோடு டிஸ்கஸ் பண்ணினால் குற்றமில்லை, ராகவா! நிறைய வருஷங்களுக்கு முன்பே கணவன் மனைவி பிரிந்து விட்டார்களாம். இப்படியொரு குணவதியைப் பிரிந்தானே, அந்த மடையன், அவன் மூளையைச் சொல்!''

''குணவதி...'' ராகவனின் உதடுகள் அசைந்து துடித்தன.

தாமு தொடர்ந்தான். ''பொதுவாகவே ஒரு பெண் நல்ல பெயரெடுப்பது என்பது கஷ்டமான சாதனை. உலகத்தின் நாக்கு விஷ நாக்கு. இப்படி ஆபீஸ் உத்தியோகம் பார்த்து ஆண்கள் மத்தியில் வேலை செய்தும் ஒரு பெண் நல்ல பெயர் எடுத்திருக்கிறாள் என்றால் அது அக்னிப் பரீட்சையில் வென்ற மாதிரிதான்.''

இதயத்தில் தோன்றிய வலியைத் தாங்க முடியவில்லை. ''நமக்கு வேண்டாம் இந்த வம்பெல்லாம்'' என்றான் ராகவன்.

''ஒரு நாள் நான் தரப் போகும் செய்தியைக் கேட்டு நீ ஆச்சரியப்படப் போகிறாய்!'' என்று சிரித்தான் தாமு.

மூன்று மாதங்களுக்குப் பிறகு நண்பனைத் தேடி அவன் அறைக்கு வந்த தாமு பழைய தாமுவாக இல்லை.

''உன்னிடம் ஒப்பாரி வைக்க வந்திருக்கிறேன்!'' என்றான் அவன் ராகவனிடம்.

''என்ன விஷயம் தாமு?''

''நான் மிஸஸ் பாமாவிடம் கேட்டேன், என்னை மணந்து கொள்ளும்படி....''

''என்னது!'' ராகவன் தன் ஆசனத்திலிருந்து எழுந்து விட்டான்.

''ஏன் அப்படிக் குதிக்கிறாய்? பெண்கள் மறுமணம் செய்து கொள்வது பாவம் என்று எண்ணும் மேதாவிகளோடு சேர்ந்தவனா நீயும்?''

''உளறாதே! அவள் என்ன சொன்னாள்?''

''அவள் மறுத்து விட்டாள். மண வாழ்க்கையை அவள் விளையாட்டு என்று நினைக்கவில்லையாம். ஒரு முறை தோற்றதனால் மறு முறை முயன்று பார்க்க... இப்படி நான் அவளைக் கேட்டதே அவள் மனத்தை மிகவும் வேதனைப்படுத்துகிறதாம்.''

ராகவன் கால்கள் தள்ளாட உட்கார்ந்தான். நெஞ்சில் குப்பென்று நிறைந்த உணர்ச்சிகளின் பொருள் விளங்கக்கூட இல்லை. பாமாவும் அவனைப் போலவேதான் நினைக்கிறாள், மண வாழ்வைப் பற்றி. நிஜத்தில் இத்தனை ஒற்றுமை உடைய இருவர், மனஸ்தாபங்களை வளர்த்துக் கொண்டு அவற்றை விசுவரூபமாக்கி, சுசப்போடு பிரிந்து, தனித்து வாழ்ந்து... விதி எப்படிச் சிரித்து விட்டது!

சட்டென்று அவனுள் ஏதோ வெளிச்சம். பாமாவை அவன் உடனே தனித்துச் சந்தித்து மனத்தைத் திறந்து காட்டிவிட வேண்டும்.

''தாமுதான் சொன்னான்!'' என்றான் ராகவன்.

''உண்மைதான். உங்கள் நண்பரிடம் நான் சொன்னேன், மண வாழ்க்கையை நான் விளையாட்டாகக் கருதவில்லை என்று. உலகம் ஏன் இப்படி இருக்கிறது? ஒரு பெண்ணை நிம்மதியாக வாழ விட்டால் என்ன?''

''தாமு நல்லவன். சந்தேக மனம் கொண்டவன் அல்ல. உனக்கேற்ற கணவனாகத் திகழ்வான்.'' ராகவனின் குரல் சோகத்துடன் ஒலித்தது.

''அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நான் ஒருவரை மணந்தேன். சத்தியமாய்ச் சொல்கிறேன், அவரைத் தவிர யாரையும் மனத்தால் கூட நினைத்துப் பார்க்கவில்லை. அவரோ என் அன்பைத் தம் வார்த்தைகளால் பொசுக்கி விட்டார். அன்பு இருந்த இதயமே சாம்பலாகிப் போய்விட்டது. இப்போது நான் உணர்ச்சிகளற்ற இயந்திரம், உலகத்தைப் பொறுத்தவரையில்...''

''பாமா! கடந்து போனதைக் கனவாக நினைத்துவிடு பாமா! மறுபடியும் நாம் வாழ்வைப் பகிர்ந்து கொள்ளலாம். நான் இப்போது எத்தனையோ முதிர்ச்சி அடைந்து விட்டேன். பெண்களை மதிக்கக் கற்று விட்டேன்.''

அவள் முறுவலித்தாள். அந்த முறுவலே உயிரற்றிருந்தது. ''உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? நிரபராதி குற்றவாளியாக்கப் பட்டு அதற்கான தண்டனையையும் அனுபவித்து விட்டால், அவனால் அந்த அநீதியை மறக்க முடிவதில்லை. தண்டனை அளித்தவரைக்கூட அவன் மன்னித்து விடலாம். ஆனால் தண்டனை அளிக்கப்பட்ட கொடூரம் இருக்கிறதே, அதை அவனால் மன்னிக்க முடிவதில்லை. அந்தக் கொடூரத்தின் நினைவு தீ நாக்குகளாக அவனை எரித்துக் கொண்டேயிருக்கும், உயிர் பிரியும் வரையில்...''

அவள் கண்களில் ஈரமே இல்லை. ஆனால் அவற்றிலிருந்த சோகத்தைக் கண்டபோது அவனுடைய இதயமும் பொசுங்கிச் சாம்பலாகிவிட்டது.

கணக்கு வகுப்பில் பிரமித்துப்போய் போர்டையே வெறிக்க வெறிக்கப் பார்ப்பான் சிறுவன். 7 என்ற எண் எழுதப்பட்ட போதெல்லாம் 'ஏன் 'மூக்கை' இப்படித் தலை கீழாக எழுதி வைக்கிறார்கள்' என்று அவனுக்குத் தோன்றும். அதிசயமாய் இருக்கிறதா? சிறுவன் பெயர் பிக்காஸோ என்றால் அதிசயப்பட மாட்டீர்கள்! — கருடன்




ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜ்
16
கப்பண்ணாவுக்கும் அப்பண்ணாவுக்கும் இடையே விரோத பாவம் வளர வேண்டும் என்று விரும்பியே தான் பி.க.பி.ம. தந்திரமாக அப்பண்ணாவுக்குக் கடிதம் எழுதி யிருந்தான். அவன் எதிர் பார்த்த படியே கப்பண்ணா, கடிதத்தைப் படித் ததும் பி.க.பி.ம.வும் அப்பண்ணாவும் சேர்ந்து சண்டை போடுவதாக ... தான். விளைவு .....
ஆபத்துக்கு என்ன பொன் மொழி! இல்லை... இல்லை... பொன் மொழிக்கு என்ன ஆபத்து?
கப்பண்ணா வந்து அவளை சினிமாவுக்கு அழைச்சுக்கிட்டுப் போறதாகச் சொன்னான். எனக்குத் தலைவலி. நான் மின்கிறது போகலே. இப்போ திருகு வலியாகவே மாறிடுச்சு!
"சினிமாவுக்குப் போனவள் திரும்பி வர வில்லை!" சிறு கதைகளுக்கு இப்படித் தான் தலைப்புப் போடுகிறார்கள் இந்தக் காலத்தில்.
மடையா! இது ஸீரியஸ் விஷயம். சற்று முன்னால் கப்பண்ணா போன் பண்ணினான்....
...அவளை ஒரு ரகசிய இடத்தில் தனி அறையில் ஒரு நாற்காலியில் கட்டிப் போட்டிருக்கானாம்! நாற்காலிக்குக் கீழே ஒரு டைம் பாம்!....
...பன்னிரண்டு மணிநேரத்தில் நான் வைரங்களோடு அவனிடம் வராவிட்டால் அது வெடிக்குமாம். அவன் சொல்லி அரை மணி ஆயிடுச்சு!
ஐயோ! பெரிய குண்டா என் தலையில் தூக்கிப் போடறீங்களே!
வார்த்தை குண்டையே உன் தலை தாங்க முடியாத போது அசல் குண்டைப் பொன் மொழி எப்படி தாங்குவாள்? ஜக்கு! நீ தானே ஹீரோ? எப்படியாவது அவளை நீ மீட்டுத் தான் ஆகணும்!


சற்று முன்னும் என்னை ஸீரோவா நினைச்சு மடையான்னு திட்டினீங்க! இப்போ ஹீரோன்னு சொல்லிக் காலைப் பிடிக்கிறீங்க.
வெறுவாயில் உளறியிருப்பேன்; சோதனை செய்யாதே! ....
... பொங்கி எழும் வீரரே! போர்க் கொடி உயர்த்தும். ஒழுக்கம் கெட்டவர்களை ஒடுக்கும் வரை ஓய மாட்டேன் என்று சவால் விடும்!
அப்படின்னா முதலில் உங்களைத் தான் கவனிக்கணும்!
கடமையை உணர்த்தினேன்.
கதாநாயகன் கதாநாயகியைக் காப்பாற்றி அழைத்து வந்தால் அதன் முடிவு என்ன தெரியுமில்லையா?
கல்யாணம்! என் தங்கையை அழைத்து, நீ என் மாப்பிள்ளையாகணும்னு இருந்தால் நடந்துட்டுப் போகட்டும். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள். இந்தக் கல்யாணத்தைப் பெருமாள் கிஷ்கிந்தையில் இருந்தபோது தீர்மானிச்சு இருக்கணும்.
மரியாதை தெரியாத மாமனாராக நீர் இருந்தாலும் உங்கள் பெண்ணைக் கருதி உங்களை மன்னிக்கிறேன். என் காதல் கடிதத்துக்கு கசக்கி எறிந்த பிச்சு மணியைப் பிச்சு இழுத்துடறேன்!
காதல் கடிதாசு வேறு எழுதினியா? கஷ்டம்! கஷ்டம்!
சாதாரண காதல் கடிதம் இல்லை. காதல் கவிதை. காளிதாசனும் கம்பனும் கற்பனை செய்ய முடியாத காவியம்! ... சரி, சென்று வருகிறேன்; வென்று திரும்புவேன்! விஷ் மி குட் லக்!
நீ வென்றாலும் தோற்றாலும் எனக்கு பெட் லக் தான். போய் வா!

தொடரும்

# பன்முகப் பயன்கள்



பலபொருள்கள்
ஒரேஒரு பயனைத்தான் தருகின்றன.
சில பொருள்களோ இரண்டே
பயன்களைத் தருகின்றன. ஒரு சிலவே
பற்பல பயன்களைத் தருகின்றன.

'டெரீன்'® ட்ரேட் மார்க் இறுதியில் கூறிய
இனத்தைச் சேர்ந்தது. அது துணிவகைகளின்
தரத்தைப் பொறுத்த மட்டில் எண்ணற்ற பயன்களைத்
தரவல்லது. 'டெரீன்' ட்ரேட் மார்க், துணிகள்
'டெரீன்' கொண்டு உருவாக்கப் பட்டது, ஆகவே அவை
கடுமையான தர நிர்ணயங்களுக்கேற்ப தயாரிக்கப்படுகின்றன
என்று உங்களுக்கு எடுத்துரைக்கிறது.
துணிகள் சுருங்காது என்று மட்டும் சொல்லவில்லை.
துணிகள் கசங்கவே கசங்காது.
மங்கவே மங்காது திரைந்து போகாது.
என்றும்,
அதன் புதுப் பொலிவை
இழக்காது என்றும் எடுத்துரைக்கிறது.

'டெரீன்' ட்ரேட் மார்க் பற்பல
வழிகளில் பயன்களைத் தருகின்றன.
ஆனால் அந்த எல்லாப் பயன்களும்
உங்களுக்காகவே தருகின்றன.

TERENE

**'டெரீன்'—**
**சிறந்த மில்களுடன்... சிறந்த துணிவகைகளின் மீது**

® 'டெரீன்' கெமிகல்ஸ் அண்ட் ஃபைபர்ஸ் ஆப்
இந்தியா லிமிடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.

கலாக்ஷேத்ராவின்

புதிய

நாட்டிய நாடகம்



# குசேலோபாக்கியானம்

ஆண்டுக்கு ஒரு புதிய நாட்டிய நாடகத்தைத் தயாரித்தளிக்கும் கலாக்ஷேத்திரத்தில் ஸ்ரீமதி ருக்மிணி தேவி சென்ற சீசன் கலை விழாவின் ஓர் அம்சமாக வழங்கிய குசேலோபாக்யானம் உன்னதமான படைப்பு. கேட்டுக் கேட்டுப் பழகிய கதைதான் என்றாலும் நாட்டிய, அபிநய பாவங்கள் மூலம் இக்கதையின் மையக் கருத்தான பக்தியையும் நட்பின் உயர்வையும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சௌலப்ய குணத்தையும் எவ்வளவு அழகாக, அலுப்புத் தட்டாமல், கலா ரசனை பொங்கி வழியும் வகையில் கலாக்ஷேத்ர நடன மணிகள் ஆடிக் காட்டி விட்டார்கள்!

குறைந்த சம்பவங்களை வைத்துக் கொண்டு நிறைந்த உணர்ச்சியை அளிக்கும் அசாதாரண அழகு ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் கலைக்கும் அவருடைய படைப்புக்களுக்கும் உண்டு. ஸந்தியாவந்தனம், ஜெபம், பூஜை மூலம் குசேலரின் பக்திப் பிரவாகத்தையும், ஒரு நகைக்கடைக்காரனின் நடிப்பின் மூலம் துவாரகையின் செல்வத்தையும் பளிச்சென எடுத்துக் காட்டியுள்ளார். கிருஷ்ண பரமாத்மாவின் விதானமும், பால கோபாலனின் அற்புதமான நடன, நாட்டியமும் பாத பூஜையும், பாத தீர்த்தத்தை அரண்மனை முழுதும் தெளித்து, அரண்மனையையே புனிதப்படுத்தும் காட்சியும் மனத்தை விட்டு அகலாதவை. குசேலர் தாம் கொண்டுவந்த அவல் துணியை மறைக்காமல் மறைப்பதும், அதைக் கண்ணன் தேடி எடுப்பதும் அதை ஒரு பிடி உண்டு உடல் சிலிர்ப்பதும் பாலகோபாலின் நடிப்புத் திறனுக்கு விசேஷ மெருகு ஏற்றுகின்றன. பாவங்களைத்தான் அவர்கள் அனைவரும் எவ்வளவு அனாயாசமாக வெளிக்காட்டுகின்றனர்! ஜனார்த்தனனின் நடிப்பில் குசேலரின் கனிவும் எளிமையும் பக்தியும் பொங்கி வழிகின்றன. ருக்மிணியாக நடித்த லீலாவும், குசேல பத்னியாக நடித்த சத்யபாமாவும் தாங்கள் தேர்ந்த பரதக் கலை விற்பன்னர்கள் மட்டுமல்ல, அபிநய, ஆடல்களிலும் முதல் தரம் என்பதை லாகவத்துடன் வெளிக் காட்டியுள்ளனர். இந்த நாட்டிய நாடகத்தின் மையம் குசேலரா கிருஷ்ணனா என்று சீர்தூக்கிச் சொல்ல முடியாதபடி, ஜனார்த்தனனும் பாலகோபாலனும் நாட்டிய நாடகத்துக்கு முழு சோபை அளித்தனர். நாட்டிய நாடகங்களுக்குப் பின்னணி இசை எவ்வளவு பூரணமாக, எவ்வளவு துல்லியமாக இருக்க வேண்டும் என்பதைக் கலாக்ஷேத்திரத்தில்தான் காண முடிகிறது. நாட்டியங்களுக்குப் புஷ்டி அளிப்பது அவற்றுக்கு இசைவான பின்னணி இசை. பாகவதுல சீதாராம சர்மாவின் அடக்கமான, அளவோடு பாடப்பட்ட சம்ஸ்கிருத தருக்களும், சுலோகங்களும், நட்டுவாங்கமும், உடன் பாடிய சீதாவின் இனிமையான குரலும் நாட்டிய நாடகத்துக்கு நிறைவைத் தந்தன. மிருதங்கம், குழல், வயலின் எல்லாம் ஒத்துழைத்து ஏற்படுத்திய நிறைவு, மேடையில் நடன பாத்திரங்கள் ஏற்படுத்திய திருப்தியை அதிகரிக்கவே உதவியது. குசேலோபாக்கியானம் மனத்தைத் தொடும் ரஞ்சகமான ஒரு நாட்டிய நாடகம்.

— எம். எஸ். சிவஸ்வாமி



அந்தத் துக்கத்திலிருந்து அவர்களால் விடுபடவே முடியவில்லை. அடக்கக் கூடிய துக்கமா அது? எங்கோ நீர்த் தேக்கத்திலிருந்து கசியும் நீராகக் கண்கள் ஊற்றிக் கொண்டேயிருந்தன. ஆண்டாண்டுகள் அழுதாலும் மாண்டவர்கள் வரும் வழி? இந்த உண்மை நன்றாகத் தெரிந்திருந்தாலும் கல்யாணி — ராகவன் தம்பதியரின் பெண் சீதா இறந்து மாதங்கள் சில சென்றபொழுதும் தேற்றிக் கொள்ள வழி இல்லாமல் தவித்தார்கள்.

இன்னும்கூடத் துக்கம் விசாரிக்க வந்து கொண்டேயிருந்தார்கள். சீதாவுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வயதில் பெண் குழந்தை ஒன்று இருந்தது. இதனால் தலை தூக்கித் தங்களைத் தேற்றிக் கொள்ள இயலாமல் தவித்தார்கள் அவர்கள். இச்சம்பவத்துக்கு முதல் வருடம்தான் அவர்களின் மூத்த மகள் கலா — சீதாவின் அக்கா தன் குழந்தை ராமுவுடன் கைம்மைக் கோலம் பூண்டு பிறந்த வீடே கதி என்று வந்தாள். இரண்டுமே பெரிய அடிதான்.

கல்யாணி அம்மாளின் பெற்ற வயிறு கொதித்தது. பூவை இழந்துவந்த பெண் ஒருத்தியும், பூவைச் சுமந்து கொண்டு புனித வழியாகச் சென்ற மற்றொருத்தியும் அவளை எழுந்திருக்கவே விடவில்லை. இன்னும் சங்கரி ஒருத்தி கல்யாணத்துக்கு நின்று கொண்டிருந்தாள். அவசரம் எதுவும் இல்லை. கல்லூரிக் குமரி அவள். வந்தவர்கள் யாராவது கல்யாணி அம்மாளிடம் சங்கரியைப் பற்றிக் கேட்டுவிட்டால் அவ்வளவுதான் !

''போதும். இரண்டு பெண்களின் கல்யாணச் சவரணையும். என் பெற்ற வயிறு கொதிக்கிறதே ?'' என்று கதறித் துடிக்க ஆரம்பித்து விடுவாள்.

சீதாவின் கணவன் சிவாவுக்கு ஒரு கம்பெனியில் வேலை. கைநிறையச் சம்பளம். வயது முப்பதுதான் ஆகியிருந்தது. இளமை பொங்கும் ஒரு கவர்ச்சி அவன் உடலில் தங்கி அழகைக் கொடுத்தது. 'இவனுடன் வாழக் கொடுத்து வைக்கவில்லையே இந்தச் சீதா. கட்டையைக் கட்டிக் கொண்டு போனாளே' என்று அவனைக் காணும்பொழுதெல்லாம் கல்யாணி புலம்புவாள். இந்த வயதில் முதல் கல்யாணமே ஆகியிருப்பதில்லை. என்ன செய்வது? எழுதி எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்கிறதே !

துக்கத்தில் முகத்தைக் கவிழ்த்துக்கொண்ட அவர்கள் சிவாவைத் தங்களுடனேயே அழைத்துக் கொண்டார்கள். கைக் குழந்தையுடன் அவனைத் தனியாக விடமுடியாத பரி



# காற்றில் அசையும் கொடி

லட்சுமி ராஜரத்தினம்

தாபம். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட சிவாவும் அவர்களுடன் வந்துவிட்டான். சீதாவுடன் தனிமையில் கனவைத்த கனவுகள் — அவைகளுக்காகவே தனிக் குடித்தனம் இருந்த காலத்தில் ஒதுக்கிய நேரங்கள் — இவற்றுக்கு மாறுபாடாக மாமனார் வீட்டின் துணை தேவைப்பட்டது அவன் உள்ளத்துக்கு. இல்லாவிட்டால் தனி வீட்டின் தனிமையில் கல்லென்று கேட்கும் துக்கத்துக்கு மத்தியில் அம்மாவைத் தேடியலையும் குழந்தை ரமாவையும் வைத்துக் கொண்டு அவனுக்குப் பைத்தியமே பிடித்திருக்கும்.

வந்தவுடனேயே குழந்தை ரமா பெரியம்மா கலாவுடன் ஒன்றிக் கொண்டாள். குழந்தை ராமு அவளுக்குத் தோழனாகிவிட்டான். ஆனால் சிவா? கண் கட்டிய குழந்தையாகக் கைகளை நீட்டிக் கொண்டு துழாவினான். இப்பொழுது இந்த இடமும் பழகிவிட்டது. தனக்கென்று சில பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு நிதானத்தோடும் கட்டுப்பாட்டோடும் வருவதும் போவதும் தெரியாமல் நடந்து கொண்டான். தன்னை வெளிக் கொண்டு வந்து காண்பிக்காமல் மனத்தோடு வாழும் முயற்சி. அதற்கு அணையாகத்தான் இந்தப் பதுங்கல் நிலை!

இரவு மணி ஏழு. மாடியில் அறைக்கு முன் உள்ள நடைபாதையில் உள்ள விளக்கடியில் மேஜையை இழுத்துப் போட்டுக் கொண்டு அலுவலக வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் சிவா. திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த சட்டிகளில் சிறு செடிகள் காற்றோடு உறவாடிக் கொண்டிருந்தன. அவை அவனோடு சீதா வாழ்ந்த காலத்தில் ஆசையுடன் விதைகளாகப் பயிரிட்டவை. அவை வளர்ந்து மலர்ச் செண்டுகளாக மொக்குக் கட்டி நிற்பதைப் பார்க்க அவள் இல்லை. அவளுடைய நினைவாக அப்படியே கொண்டு வந்து இங்கே வைத்திருந்தான் சிவா. ரமாவைப் பார்க்கும் காலத்தில் ஏற்படும் ஓர் ஏக்க உணர்வு பூச்செடி பசுமைகளைக் காணும்தோறும் மனத்தில் பாலேடாகப் படியும்.



படியேறிச் சங்கரி வந்தாள். வெடவெட வென்று வாளிப்பான உடலில் முன்னால் தொங்கும் இரட்டைப் பின்னல்கள் அலட்சிய மான போக்கைக் காட்டிற்று. அவற்றில் தொங்கும் இரட்டையாகத் தொடுத்த ரோஜாக் கொத்துக்கள்; வீட்டின் தோற்றத் தினால் ஒரு துயரம் தோன்றினாலும், வயதின் காரணமாக ஆசைக்கு இடம் கொடுக்கும் எடுப்பான அலங்காரம்; கலீரென்று கைகொள்ளாமல் சரியும் நாணயங்களாகச் சிரிப்பு! அயர்ப்பில் சீதாவாகவே தோன்ற வைக்கும் சாயல். பின் அசைப்பின் வீச்சில், கைகளை ஆட்டும் துடிப்பில், முகத்தைச் சுளிக் கும் அலட்சியத்தில் சில சமயம் சீதாவே வந்துவிட்டாளோ என்று மயங்க வைக்கும் போலி உருத் தோற்றம்.

அவன் எதிரில் வந்து நின்றாள் அவள். முகத்தை நிமிராமல் கண்களைத் தூக்கி, ''என்ன சங்கரி?'' என்று கேட்டான்.

எடுத்த எடுப்பிலேயே விஷயத்துக்கு வந் தாள் அவள்.

''அ த் தா ன்! எங்க கல்லூரியில் புதுக் கட்டடத் திறப்பு விழாவுக்கு ஒரு பெரிய நடிகையின் நாட்டியத்துக்கு ஏற்பாடு செய் திருக்கிறோம். அதற்கு நீங்கள் இரண்டு டிக்கட்டுகள் வாங்கிக் கொள்ள வேண்டும்.'' டிக்கெட்டின் நிர்ணய விலையைக் கூறினாள் அவள்.

அவன் நாட்டியம் பார்க்கும் நிலையிலா இருக்கிறான்? வாழ்க்கை என்ற நாடகத்தில் சோக பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருப் பது போதாதா? அவளால் அவனுடைய நிலைமையைப் புரிந்து கொள்ள முடியுமா? மன்னிக்கணும். நான் நாட்டியம் பார்க்கும் மன நிலையில் இல்லை என்று ஒரு நிமிடத்தில் கூறியும் விடலாம். அவளுடைய குழந்தை முகம் தவித்துப் போகும்.

''என் வீட்டிலேயே நான் நான்கைந்து டிக்கெட்டுக்களைக் கட்டிவிடுவேன்'' என்று அவள் தோழிகளிடம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்பாள் என்பது அவனுக்குத் தெரி யுமே! சோகம் ததும்பி நிற்கும் கண்களை அவள் பார்த்தாள். அவனுடைய நினைவு அலைகள் பொங்கிச் சரிவதைப் புரிந்து கொண் டாள்.

''இத்தனை டிக்கெட்டுக்களையும் நான் விற்றுத் தர வேண்டும் அத்தான். வாங்கிக் கொண்டவர்கள் வரவேண்டும் என்ற கட் டாயம் எதுவும் இல்லை.....'' என்றவளை இடைமறித்து, ''அதாவது உனக்கு வேண்டி யது டிக்கெட்டுக்களை விற்ற பணம். அவ் வளவுதானே?'' என்றான்.

நிலைமையை அவன் புரிந்து கொண்டதில் அவளுக்குச் சந்தோஷம்தான். அவன் நீட்டிய புது நூறு ரூபாய் நோட்டு ஒன்றைப் பெற்றுக் கொண்டு டிக்கெட் புத்தகத்தை எடுத்துக் கிழிக்கப் போனாள். அவன் தடுத்தான்.

''நான் நாட்டியம் பார்க்க வரமாட்டேன், சங்கரி. உனக்கு வேண்டியவர்கள் யாருக் காவது இந்த டிக்கெட்டுக்களைக் கொடுத்து விடு.''

''ரொம்ப நன்றி, அத்தான்!'' காற்றில் படபடக்கும் கொடியின் அசைவாக மென் னடை பயின்றாள் அவள். வேலையைத் தொடர முடியாமல் அவன் களைத்துப் போனான். விளக்கை அணைத்து விட்டுக் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நாற் காலியில் சாய்ந்தான்.

''இருட்டில் என்னப்பா செய்கிறாய்?'' என்று கேட்டவாறு ராகவன் வந்தார். வேலை எதுவும் இல்லாமல் தன் நேரத்தில் அவர் குறுக்கிட மாட்டார் என்பதைச் சிவா அறி வான். அதனால், ''என்ன மாமா விஷயம்?'' என்று நேரடியாகவே கேட்டான். அது அவ ருக்கு வசதியாகப் போய்விட்டது.

''சிவா! உன் வயதில் இந்தக் காலத்தில் கல்யாணமே ஆவதில்லை. நான் சொல்வதைக் கேளப்பா. உனக்குச் சரின்னா ஏற்றுக்கொள். இல்லேன்னா மறந்துவிடு.''

உறவினர்களின் சில கூற்றுக்கள் அவர் காது களில் விழுந்து கொண்டுதான் இருந்தன. சிவாவுக்கு வழிகாட்ட வேண்டியது தம் பொறுப்பாய்ச் சார்ந்திருப்பதை உணர்ந்தார்.

''எங்களுக்கும் வயசாயிடுத்து. வயசை விடப் பெரியவள் வீட்டோடு வந்ததும், சீதா போனதும்தான் எங்களை வேரோடு சாய்ச்சுடுத்து. சங்கரி வேறு கல்யாணத்துக்கு நிற்கிறாள்.'' பெரியவர் பேச முடியாமல் கண் கலங்கினார்.

அவர் என்ன சொல்லப் போகிறார் என் பதை ஓரளவுக்குப் புரிந்துகொண்டான் சிவா. மனம் கலகலத்துப் போய்விட்டது. என்ன பதிலைச் சொல்லப் போகிறான்? நீல விளக் கொளியில் ஆஜானுபாகுவாக அவன் மல்லாந்து கிடக்க நெஞ்சில் வளைக் கரத் தைக் கன்னத்துக்கு அணைப்பாகக் கொண்டு சீதா விடிய விடியக் கதை பேசியதை அவரிடம் கூற முடியுமா? வெண் தாமரை முகத்தில் இரு வண்டுகளாகக் கொட்டும் கண்கள் விரியத் தனக்குப் பிடித்ததைக் கேட்டுப் பெறும் அவளுடைய ஆசை வெள்ளத்தைப் பற்றிக் கூற முடியுமா அவரிடம்?

''நான் நன்னா யோசனை பண்ணித்தான் சொல்றேன். நீ இப்படியே பச்சை மரமா நின்னு துக்கம்கற வெய்யில்லே உலர்ந்து போகக் கூடாது. இதுதான் என் ஆசை. சிவா, நீயே சங்கரியை மணந்துகொண்டு விடு'' — துணிந்து சொல்லி விட்டார் அவர்.

சீதாவின் மேல் வைத்த ஆசையைத் திருப்பி வேறு மனைவி என்று ஒருத்தியை ஏற்று....! அவனால் சிந்திக்கவே முடியவில்லை. கைகளை முன்புறமும் பின்புறமும் கட்டிக்கொண் டான். நெஞ்சில் வேதனைதான் கமந்தது.

**க**ல்லூரி வாசலில் தனக்காகக் காத்துக் கொண்டு நின்ற அத்தான் சிவாவைக் கண்டு அதிசயித்துப் போனாள் சங்கரி. அருகில் வந்ததும் அவளிடம், ''நான் உன்னுடன் பேச வேண்டும். உன் கல்லூரியிலிருந்து இப் படியே கடலோரமாய் நடந்து மெரீனா கடற் கரைக்குப் போகலாம். உன் தோழிகளிடம் சொல்லிவிட்டு ஓடி வா'' என்றான்.

குதித்துக்கொண்டு ஓடினாள். அவளிடம் இன்னும் குழந்தைத்தனம் மாறவில்லை. இரு வரும் நடக்க ஆரம்பித்தார்கள். அவள் அவ னிடம் இன்னும் கேட்கவேயில்லை. 'என்ன பேச வேண்டும்' என்று.


சந்திரிகாவுடன் மட்டுமே
அழகு நிறைவு பெறுகிறது
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லெட் சோப்
CHANDRIKA
AYURVEDIC SOAP
சந்திரிகா ப்ராடக்ட்ஸ் சென்னை-10

''கடற்கரை மணல் நடக்க முடியாமல் காலைப் பின்னும் அத்தான். அதனால் பூங்கா வழியாக நடப்போம்.''

அவன் பேசவேயில்லை. அவள்தான் பேசிக் கொண்டேயிருந்தாள். சீதாவும் இப்படித் தான் வழி முழுதும் பேசிக் கொண்டே வரு வாள். கல்லூரியில் நடக்கும் நாட்டிய நிகழ்ச் சிக்கான ஏற்பாடுகள், அதற்காகப் போய்ச் சந்தித்த நடிகையின் எளிமையான தோற்றம், கல்லூரிப் பத்திரிகையில் அவள் எழுதிய கட் டுரைக்காகக் கிடைத்த பாராட்டுரைகள்— இப்படிப் பலப்பல தடையின்றிப் பேச்சில் விழுந்தன. அவனுடைய முக பாவத்தை அவள் கவனிக்கவில்லை.

அவன் புரிந்து கொண்டான், அவளுடைய மனம் இன்னும் வளரவில்லை என்று. நடுவில் 'தொம்'மென்று குதித்துக் கைக்கெட்டும்படி யாக இருந்த பூவரசம் பூவைப் பறித்துக் கொண்டாள்.

''இதென்ன குழந்தை மாதிரி?'' என்று அவன் கேட்டபொழுது, ''ஏன் அத்தான் பறிக்கக் கூடாதா?'' என்று கேட்டுவிட்டு, ''தோட்டக்காரனைப் போல் மிரட்டுகிறீர் களே? என் அம்மா அப்பாவுக்கு நான் குழந்தைதான்'' என்றாள் வெடுக்கென்று.

தன் குரலில் சற்றுக் கடுமை விழுந்துவிட்ட தாக உணர்ந்து கொண்டான். இருவரும் மெரினா காண்டீன் திறந்தவெளி மாடியில் கடற்கரையைப் பார்த்திருக்கும் பக்கமாக உட்கார்ந்திருந்தார்கள். சர்வர் வந்து நின்ற பொழுது தன் பார்வையை அவள் பக்கம் திருப்பினான் அவன்.

கடலைத் தழுவிய காற்று சுகமாக வீசி யது. ஒரு பக்கமாகத் தங்கக் கலரில் வெளிச் சம் மாலை என்பதை அறிவித்தது. ''எனக்கு ஐஸ்கிரீம்தாம் வேணும். ஐஸ்கிரீம் மட்டுமே போதும்.''

தீர்மானமாக அவனிடம் கலந்துகொள் ளாத தெளிவுடன் சுயேச்சையாகச் சொன் னாள். அவன் தன் போக்குக்கு ஏதோ ஆர்டர் கொடுத்தான். அவள் கையில் ஏதோ ஓர் ஆங் கில நாவல். அவளிடம் இருந்த விறுவிறுப்பு அவனிடம் இல்லை. அவனுடைய அனுபவத் தோற்றம் ஒரு பக்குவத்தைப் பாடமாகப் போதித்திருந்தது. இழந்த பெண்மையின் சுகத்தைப் பெறலாம் மீண்டும். ஆனால் அவ ளுடன் துள்ளித் திரிந்து, புதுமையின் எதி ரொலியாக, கண் அசைவுக்குப் பதில் தரும் மின்னலாக இயங்க வேண்டுமே. அவனுடைய செயல்கள் எல்லாம் போலியாகத்தான் தெரியுமோ ?

''உனக்கும் எனக்கும் திருமணம் செய்ய உன் தந்தை நிச்சயித்திருக்கிறார்.''

''அப்படியா ?'' ஆச்சர்யம் குரலில் தொனித்தது. ஐஸ்கிரீம் கட்டியாக ஸ்பூன் விளிம்பில் நின்றது. அவனால் 'என்னவென்று நிச்சயிக்க முடியவில்லை. கேள்வியின் ஆச்சர் யம் அளவில்லாத ஆழத்தையே கொடுத்தது.

''நீ என்ன நினைக்கிறாய் என்பதை எனக் குத் தெரிவிக்க வேண்டும்!''

கண்களின் துறுதுறுப்பான மின்னல் கவர்ச்சி, குழந்தைத்தனமாக மருண்டது. தன்னைப் பற்றியே தீர்மானிக்க முடியாத தவிப்பு கைகளில் நடுக்கத்தைக் கொடுத்தது. கல்யாணம் என்பது அவளைப் பொறுத்த வரையில் ஓர் உல்லாசம்தான். அவனும் அப்படி அமைய வேண்டும் என்றுதான் விரும் பினான். தன்னால் அத்தகைய உல்லாசத்தைக் கொடுக்க முடியுமா என்று அஞ்சினான்.

அவனுக்கு அநுபவத் தோற்றத்தின் இனிய அனுபவமாக ரமா இருந்தாள். இருவரின் கைப்பிடிப்பின் நடுவில் விழும் கரத்தைச் சங்கரி விலங்காக நினைத்தால்? பாட்டி கல் யாணி இருக்கும்வரையில் சரிதான். ஆனால் அதன் பிறகு...?

''அப்பா! அம்மா சொன்னால் எனக்குச் சரிதான், அத்தான். எனக்கு நல்லதைத்தான் அவர்கள் செய்வார்கள்.'' யோசிக்காத பதில் பட்டென்று வந்தது.

ஐஸ்கிரீமின் குளுமை நாக்கை மரக்க வைத் தது. அவள் என்ன நினைக்கிறாள்?- அவனுக்குக் கேட்கத் தெரியவில்லை. இந்தத் திருமணத்தி னால் ஏற்படும் சாதக பாதகங்களை அவளுக்கு நினைக்கத் தெரியவில்லை.

ஒரு நாள் மாலை தன்னுடன் வேலை பார்க் கும் ரமேஷை அழைத்துக் கொண்டு வந்தான் சிவா. அழைத்துக் கொண்டு வந்தாலும் வரு வேன் என்று முன்கூட்டியே அவன் கூறியிருந் தான். அந்தச் சந்தேகத்தின் பேரில் டிபன், காப்பி எல்லாம் தயாராக இருந்தன. கூடத் தின் நடுவில் மேஜையடியில் ராகவனும் டிபன் சாப்பிட அவர்களோடு கலந்து கொண்டார். அவர் அப்படிக் கலந்து கொள்வதைப் பெரி தும் விரும்பினான் சிவா. ரமேஷ் தன் கலகலப் பால் கூடத்தில் ஒரு களையை உண்டாக்கினான்.

பேச்சின் நடுவில் ''இப்படிப்பட்ட கல கலப்பை இந்த வீடு இழந்து எத்தனையோ நாட்களாகி விட்டன'' என்று கூறியவாறே கேசரியை மூன்றும் முறையாகக் கேட்டுப் போட்டுக் கொண்டார் ராகவன். சங்கரி தான் பரிமாறினாள். அன்றொரு நாள்



★ சென்னை மியூசிக் அகாடெமி சதஸில் பேராசிரியர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்திக்குச் சங்கீத கலாநிதி விருதினைச் செம்மை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் வழங்கிக் கௌரவிக்கிறார்.

★ வீணை சண்முக வடிவு நினைவாக வழங்கப்பட்ட வீணைப் பரிசை திரு ஆர். வேங்கடராமன் மியூசிக் அகாடெமி காரியதரிசி டாக்டர் வே. ராகவனிடம் பெறுகிறார். அருகே செம்மை மகிழ்ச்சியோடு இருக்கிறார்.

★ இந்தச் சதஸில் பேராசிரியர் கல்கி நினைவுத் தம்புராப் பரிசைப் பெற்றவர் சுகந்தி தியாக ராஜன்.





சிவாவுடன் பேசிய பின்னர் மனத்தில் ஏற்பட்ட நடுக்கம் வலியாக மாறி அவளை இம்சித்துக் கொண்டிருந்தது. அவனுடைய அனுபவத் தோற்றம் அவள் நெஞ்சை நிரடியது.

இயல்பான கைத் தொடல்கூட காதல் கனியும் புதுமையாக அவளுக்குக் கிடைக்காது. தன் மனைவி என்ற உரிமையில் அவள் திருப்தியாய் இருக்கிறாளா என்ற தவிப்பில்தான் அவன் அவைகளைத் தருவதற்கு முயற்சி செய்வான். இப்படியெல்லாம் அவளுடைய தோழிதான் கூறிப் பயப்படுத்தி வைத்திருந்தாள்.

''மாமா! இனிமேல் இந்த வீடு இப்படிப்பட்ட கலகலப்பில்தான் திகழும்.'' சிவாவின் பார்வை பட்ட சங்கரி சட்டென்று மறைவில் ஒதுங்கினாள். இப்போது அவன் விஷயத்துக்கு வந்தான்.

''மாமா! இவன் என்னுடன் வேலை பார்க்கும் ரமேஷ். இவனைத்தான் நான் சங்கரிக்குப் பொருத்தமான வரனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்!''

ராகவன் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தார். அவருடைய கையகல உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. ரமேஷின் எதிரில் அவற்றைக் கேட்க முடியவில்லை.

''ஏற்கனவே ஒரு நாள் இவனுக்கு நம் சங்கரியைத் தூரத்திலிருந்து காட்டியிருக்கிறேன். இன்னும் ஒரு தரம் தன் பெற்றோர்களுடன் பெண் பார்க்க முறையாக வருவான். இந்த 'விஸிட்' என் நண்பன் என்ற முறையில்.'' தடங்கலின்றிக் கூறிவிட்டான் சிவா.

சங்கரியின் முகம் குப்பென்று வியர்த்தது. சிவாவின் முகத்தில் ஒரு நிம்மதி ஏற்பட்டது. மெரினா ஹோட்டலில் ரமேஷ் கையில் எடுத்த ஐஸ்கிரீமை அவள் தட்டிச் சுவைக்கும் காட்சி இயல்பாகத் தோன்றியது. அவளுடைய குழந்தைத்தனமான குதூகலம் அவளை விட்டு மறையாது. சிவாவைச் சந்தித்துப் பேசியபின்னர் ஏற்பட்டிருந்த குழப்பம் அவள் மனத்தை விட்டு விலகியிருந்தது முகத்தில் தெரிந்தது. அவனைப் பார்த்து அவள் சிரித்தாள். நன்றி உணர்வு அதில் மிளிர்ந்தது.

இதைப் பற்றி ராகவன் கல்யாணியிடம் சொல்லச் சென்றிருந்தார். கை கழுவச் சென்ற சுரேஷின் பார்வை கள்ளத்தனமாய்ச் சங்கரியைச் சந்திக்கச் சென்றது. சங்கரியின் முகம் குங்குமப் பூவாய்ச் சிவந்தது. ரமேஷ் சென்ற பின்புகூட அசையாமல் அவன் சென்ற திசையைப் பார்த்தவாறே சிலையாய் நின்றாள் சங்கரி.

உட்புற நடை மறைவில் சிலையாய் நிற்கும் அவள் உருவைக் கண்ட சிவா நகைத்தவாறே, ''சங்கரி! ரமேஷ் போயாகி விட்டது'' என்று கேலி செய்தான். வெட்கத்துடன் உள்ளே ஓடினாள் அவள்.

# RAJAJI'S MAHABHARATA

*"Those that do not know the story of MAHABHARATA cannot be deemed to be children of Bharatavarsha. Not all could read the original MAHABHARATA in its entirity. I therefore wrote "Vyasar Virundhu" (a condensation of MAHABHARATA in Tamil which was serialised in Kalki). "Vyasar Virundhu" and its English rendering in book form are selling in lakhs. But my own feeling is that this is not enough. I pondered over how best to make people read this epic and asked the Kalki management to serialise "Vyasar Virundhu" once again week after week, which they did. Let all people read this great epic. Falsehood and deceit will get far away on reading our epics; the mind will turn to the path of righteousness. Righteousness alone is the path of deliverance."*

Thus wrote Rajaji in the Kalki some time ago. He later expressed a desire to carry his MAHABHARATA in English in Swarajya. By way of fulfilling his wishes Rajaji's MAHABHARATA will be serialised in Swarajya from the issue dated Jan. 13, 1973.

T. SADASIVAM
Publisher, SWARAJYA
Kalki Buildings, Chetput, Madras - 600031




"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்..!"


# கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே,* அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!




TP. G. 19 TM



சார்! என் சைக்கிளைக் காணோம்.
தெருவில் என் மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடி! சைக்கிள் திருடனைத் தேடலாம்!
சபா
"என்ன! ராகமாலிகை பாடணுமாமா?"
"இல்லே, என்னை... ராக்கம்மா.. பாடணுமாம்!"
ஜிப் கம்பெனி திறப்பு விழா.
சர்க்கஸ் மானேஜர் கார் மக்கார் பண்ணுது!
"எம்.எல்.ஏ. ஸார்! கார் ஆக்ஸிடெண்ட்டுக்குப் பிறகு இப்பதான் உங்களுக்கு மயக்கம் தெளிஞ்சிருக்கு! யார் யாருக்கு முதலில் தகவல் சொல்லணும்?"
"காமிராமேன், நிருபர்கள் .. இவங்களை வரச் சொல்லுங்க ..."

உ

# திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்



இத்திருக்கோயிலில் தங்கரதம் செய்வதற்கு ஏற்பாடாகி வேலையும் நடந்து வருகிறது. அதற்கு நன்கொடையாகத் தங்கமோ, பணமோ, திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பிச் செந்திலாண்டவன் கருணைக்குப் பாத்திரமாக வேண்டுகிறோம்.

தவிரவும் இத்திருக்கோயிலில் சுவாமி, அம்பாள் அலங்காரத்திற்கு புஷ்பம் சாத்த வேண்டிய வகைக்கு ''புஷ்ப கட்டளை நிதி'' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஷெ புஷ்பக் கட்டளை செய்ய விரும்புவோர் வைப்புத் தொகையாக ரூ. 750/- கட்டினால் அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு எல்லா மூர்த்திகளுக்கும் கட்டளைதார் குறிப்பிடும் ஒரு தேதியில் புஷ்ப அலங்காரம் செய்து கட்டளைதார் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதம் நேரிலோ, தபாலிலோ பாரம்பரியமாக அனுப்பி வைக்கப்படும். ஷெ ரூ. 750/-க்குக் குறைவாக அனுப்பும் தொகையை புஷ்பக் கட்டளை பொது நிதியில் சேர்த்துக் கொண்டு அதன் வட்டியிலிருந்து புஷ்பக் கட்டளை நடத்தப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

*திருச்செந்தூர்*
*16-11-1972*

**வி. கே. வேலுசாமி, பி.ஏ.**
நிர்வாக அதிகாரி







# மூன்று முடிச்சுக்கள்



## 2

அறிஞர்கள் சிந்திக்கிறபோதுதான் எழுத்துக்கள் அமரத்துவம் பெறுகின்றன. இது தெரியாமல் போனதென்ன இந்த மோகனசுந்தரத்துக்கு ?

தரையில் விழுந்து, பக்கங்களை விரித்துச் சிரித்தது பொன்மொழிப் புத்தகம். அது யாரைக் கண்டு சிரித்ததோ? தாய்க்குலத்தின் மீது அபாரமான பற்றுக் கொண்ட மோகனசுந்தரத்தைக் கண்டு சிரித்ததோ ? பைரவியின் அடக்கமான புருஷ பக்தியைக் கண்டு சிரித்ததோ ?

வடித்தெடுத்த வார்ப்படச் சிலைபோல் வந்து நின்ற பைரவி, புத்தகத்தையும் புருஷனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவளால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒசிந்து ஒசிந்து தென்றலைப் போல் தன்னருகே வந்து நின்ற அன்பு மனையாளை அண்ணாந்து நோக்கினான் மோகனசுந்தரம். அதரங்களிலே எதையோ சாதி வென்றுவிட்டது போன்ற ஒரு நெளிவு. அது முறுவலாய் அரும்பிட்டுப் பின்னர் கனிவாய் மலருகிறது.

கணவனுடைய நெற்றியில் முத்து முத்தாய் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைச் சேலைத் தலைப்பால் துடைத்தாள் பைரவி. ஏன் இந்த வியர்வை? எதற்கு இந்தப் பார்வை?

அப்போதைக்கு அவள் அதைக் கேட்டுக் கொள்ள விரும்பவில்லை. காலதாமதம்தான் காரணம் என்பது அவளுக்கு ஓரளவு புரிந்திருந்தது. ஆனாலும் புத்தகத்தை வீசி எறிவானேன் ?

''இன்றைக்கு ஏன் இத்தனை நேரம் பைரவி ?'' — மோகன சுந்தரத்தின் மலர்ந்த கனி வாயிலிருந்து உதிர்ந்த சொற்கள்.

கண்ணுள்ளே சுழியிட்டு எழுந்த ஏதோ ஒன்று தன்னுள்ளே பெருமூச்சாய் விகசித்து அடங்குகிறது பைரவிக்கு. அவள் வழக்கம்போல் புன்னகை செய்கிறாள். மோகனசுந்தரத்துக்கே பிடித்தமான புன்னகை அது. அதிலேதான் அவன் காணுகிற தெய்விகம்; சொர்க்க சுகம்; குடும்பப் பாங்கு....

அம்மம்மா....

இல்லையென்றால் அவன் அந்த உலகப் பொன்மொழிகள் புத்தகத்தை வீசி எறிந்திருப்பானா?

'' இன்னிக்குப் பார்த்து பேலன்ஸ் ஷீட் டாலியாகலே; அதைச் சரி பார்த்து முடிக்க நேரமாயிட்டது. இதோ சமையலை ஒரு நொடியிலே முடிக்கிறேன்.''

கணவர் பசி தாளாதவர் என்பது அவளுக்குத் தெரியும். விரைந்து சென்று உடை மாற்றிக் கொண்டு சமையலறையுள் நுழைந்தாள் பைரவி.

ஒரு கணம் கண்களை இறுக மூடிப் பெருமிதப்பட்டுக் கொண்டான் மோகனசுந்தரம். ஆகா ! வாழ்க்கை

**கே. பாலசந்தர்**

யில் நல்ல மனைவியை அடைந்தவனை விடப் பாக்கியசாலி வேறு யாராக இருக்க முடியும்? கண்டெடுத்த புதையல் — கண் கண்ட சொர்க்கம் அல்லவா இவள்! உண்மையான அமைதி எது என்று என்னைக் கேட்டால் பைரவி மாதிரியான பெண்களைத்தான் சொல்ல முடியும்? பொதுவாகவே பெண்களை வாய் கூசாமல் பேசுவதோ வார்த்தை கூசாமல் எழுதுவதோ அறிவுக்குச் செய்கிற ஒரு துரோகம் என்றுதான் படுகிறது!

சக்கர வண்டியை மெல்ல நகர்த்தியவாறு ரேடியோ வைக்கப் பெற்றிருந்த மேஜையருகே சென்றான்.

மனைவியின் இனிமைக்கு ஈடு செய்வதுபோல் அவன் விரும்புவது நல்ல சங்கீதம்; அவள் அருகில் இல்லாதபோது அவளை மறக்க முயன்று நாடுவது நல்ல நூல்களை. ஏனைய நேரங்களில் ஒன்றிரண்டு சிகரெட்டுக்கள்!

ரேடியோவில் பைரவி ராக ஆலாபனை பொன்னிழைகளாய் எழுந்து காதுகளை முத்தமிடுகிறது.

அடுத்து —

'யாரோ இவர் யாரோ' என்கிற அருணாசலக் கவிராயருடைய பாடல்! அடடா! அவனுக்கே பிடித்தமான பாடல்! மிதிலை வீதியிலே ஸ்ரீராமன் நடந்து செல்கிற காட்சியைக் கண்டு ஜானகி வியந்து பாடுகிறான்!



பைரவி ராகத்தோடு பைரவியின் மணக் கோலக் காட்சி கண் முன்னுல் படமாக விரிகிறது. கண்களில் முத்தனைய நீர்த் துளிகள் ஆனந்தமாய் அரும்புகின்றன ! வாய்க்கப் போகிற மனைவியின் பெயரே பைரவி என்று கேள்விப் பட்டபோது அவன் அடைந்த ஆனந்தம் இன்றளவும் குறையவில்லையே !

போலீஸ் இன்ஸ்பெக்டராகப் பணி புரிகிறபோது ஏற்பட்ட அந்த விபத்தில் இந்த உலகையே அளந்து பார்க்கிற கால்களில் ஒன்று முடமாகிவிட்டது. அவன் கவலைப்பட வேண்டுமே! பெறற்கரிய மனைவியின் கால்கள் இருக்கின்றன. அவை போதுமே! அரிதான கண்களையே இழந்திருந்தால்கூட அவன் இப்படித்தான் எண்ணமிட்டிருப்பான்.

டிங் டாங்... டிங் டாங்...

அந்த நூதனக் கடிகாரம் பதினெட்டு முறை நாவசைத்தது.

முந்தானையால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் பைரவி. ''சாப்பாடு தயாராய் விட்டது.''

ரேடியோவை நிறுத்திவிட்டு மனைவியை நோக்கிச் சிரித்தான் மோகனசுந்தரம். ''பைரவி ! உனக்கு எவ்வளவு சொன்னுலும் புரியவில்லை. உனக்கு ஏன் இந்தத் தலையெழுத்து?''

'' ஏன் ?''

''காலையில் எழுந்தது முதல் இரவு உறங்குகிற வரை எதுக்கு யந்திரமா உழைக்கணும்? அஃப்கோர்ஸ்! நிலையைப் பார்க்கறபோது நீ வேலை செய்யறது என்னுல் அனுமதிக்க முடிகிறது. ஆனுல் நீ அடுப்பங்கரையில் வேகறதை என்னுல் சகிச்சிக்க முடியலை.''

வாய் நிறையச் சிரிப்பைத் தேக்கிக் கணவனை நோக்கினுள் பைரவி. ''நானும் உங்களுக்கு எத்தனை முறை சொல்றது ! என் கையால் உங்களுக்குச் சமைத்துப் போடலைன்னு எனக்கே ஒரு நிம்மதி ஏற்படலை. கணவனுக்குள்ள ருசியைத் தெரிஞ்சுக்கிறவதான் மனைவி; அவளுக்குப் பேரு சமையல்காரியல்ல! எனக்கென்னமோ, சமையல்காரி சமைச்சுப் போட என்னுல் பார்த்துக்கிட்டிருக்க முடியாது. அப்புறம் எனக்கு இருக்கிற சந்தோஷத்துக்கு அர்த்தம் இல்லாமல் போயிடும்.''

ஒரு மனைவிக்குள்ள மகிழ்ச்சி என்ன என்பதை எவ்வளவு நாசூக்காகச் சுட்டிக்காட்டி விட்டாள் பைரவி. உள்ளுக்குள் பூரித்துக் கொண்டான் மோகனசுந்தரம்.



சாப்பாட்டைக் கொண்டுவரப் புறப் பட்டாள் பைரவி.

''பைரவி !''

பைரவி திரும்பினாள்.

''இன்னிக்குச் சமையலறையில் உட் கார்ந்து சாப்பிடணும் போலத் தோணுது.''

''நல்லாயிருக்கு. ரொம்ப நல்லா யிருக்கு. நீங்க தட்டுத் தடுமாறி வந்து தவித்துச் சாப்பிடறதை நான் பார்த் துக் கண்ணீர் விடணுமா ? இது உங்க ளுக்குச் சம்மதமா? சொல்லுங்க!''

பைரவியின் கண் விளிம்பில் நீர்த் திரையிட்டு விட்டது. மோகனசுந்தரம் மெல்லத் தலையசைத்தவண்ணம் தரையை நோக்கினான்.

சற்றைக்கெல்லாம் உணவு பதார்த் தங்களைக் கொண்டு வந்து உண்பதற் காகப் போடப்பெற்றிருந்த மேஜையின் மீது வைத்தாள். கணவன் கை கழுவ 'பேஸி'னைக் கொண்டு வந்தாள். கை கழுவிக் கொண்ட மோகனசுந்தரம் மேசையருகே சென்றான். இலை போட் டுப் பரிமாறினாள் பைரவி. மணக்க மணக்க வடகக் குழம்பிட்டு நெய் வார்த் தாள். வாழைக்காய்ப் பொரியலும், புதினாத் துவையலும் அப்பளமும் பக்க மேளங்களாய் நின்று சுருதி கூட்டின.

பைரவி எவ்வளவுக்கெவ்வளவு அழகா யிருப்பாளோ, அவ்வளவுக்கவ்வளவு சுவையாகவும் சமைப்பாள். அவளு டைய தாயார் அவளுக்காகக் கொடுத்து விட்டுப் போன சீதனம் அது ஒன்று தான்.

இருவருமே உண்டு முடித்தாய் விட் டது. கணவனை மெல்லப் படுக்கை யருகே நகர்த்திச் சென்றாள். சக்கர வண்டி 'கிரீச்'சிட்டது:

''முதல்லே இந்தச் சக்கர வண்டியை ரிப்பேர் பார்க்கணும் பைரவி !'' என் றான் மோகனசுந்தரம்.

''ஏன் ?'' — பைரவி கேட்டாள்.

''கிரீச் கிரீச்சினு சத்தம் போட்டுப் பிராணனை வாங்குது.''

பைரவி கலகலவென்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கறே ?''

''இந்த வீட்டிலே சத்தம் போட அது ஒண்ணாவது இருக்குதேன்னுதான்.''

மோகனசுந்தரத்துக்குப் புரிந்துவிட் டது. ''பைரவி ! ஓயாம உழைக்கிற உனக்கு ஒரு குழந்தை வேறு தேவையா? நான் போதாதா?''

அவள் குழந்தை போலச் சிரித்தாள். ''பேசாம படுத்துக்குங்க... இன்னிக்கு டைப் செய்ய நிறைய மேட்டர் இருக்கு!''

''இப்படித் தினமும் ராக்கண்ணு முழிச்சு டைப் அடிச்சுக்கிட்டிருந்தா உடம்பு என்னுகிறது பைரவி!''

''ஒண்ணும் ஆகாது. நான் டைப் அடிக்கிற ஒவ்வொரு மணி நேரமும் கரன்ஸி நோட்டு அச்சாகிக் கொண் டிருக்கிறதுன்னுதான் அர்த்தம். போன தடவையே வீட்டு வரி கட்டலே. இந்த லட்சணத்துலே நேத்து வேறே இந்தத் தடவைக்கான வரிக் கடிதம் வந் திருக்கிறது.''

மோகன சுந்தரம் அதற்கு மேல் ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை. குடும்ப நிலை அவனுக்குப் புரியாதா, என்ன?

பைரவி மாடி ஏறிச் செல்லும் சத்தம் கேட்டது.

டக் டக்... டக டக டக்...

தட்டெழுத்து யந்திரத்தின் குரல் மெல்லக் கேட்கத் தொடங்கியது.

தன்னுள் நெட்ட நெடிய ஒரு பெரு மூச்சை எழுப்பித் தலையசைத்துக் கொண்டே எதிரே சுவரில் மாட்டி யிருந்த பெரிதான படத்தை அண் ணாந்து கவனித்தான் மோகனசுந்தரம். அதில் பைரவி அழகுக்கே புதிய புதிய அர்த்தங்களை இதழ்களில் தேக்கியவாறு காட்சி தந்து கொண்டிருந்தாள். அந்த அறையில் வேறு படங்கள் இல்லை. வேறு படங்களை அங்கு மாட்டி வைக்கவும் அவன் விரும்பவில்லை. எத்தனை நேரம் தான் மனைவியின் படத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தானோ?

மாடியில் 'டைப்' சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கீழே இந்த வேலையை வைத்துக் கொண்டால் போடுகிற சத் தத்தின் காரணமாகக் கணவனால் தூங்க முடியாது என்பதற்காக மாடியில் ஒரு தனியறையில் அடைபட்டு டைப் செய்கிறாள்! மூன்று அல்லது நான்கு மணி நேரம் வரையில் அவள் அந்தத் தட்டெழுத்து யந்திரத்துடன் தினமும் போராடுகிறாள் ! ஒருசில நாட்கள் இரவு முழுதும் கூடப் போராடி யிருக்கிறாள்! சென்ற ஆண்டு வரையில் அவள் வீடு உண்டு; தானுண்டு என்று நிம்மதியாக வாழ்ந்தவள். இன்ஸ் பெக்டர் உடையுடன் ஜீப்பில் வந்து இறங்குகிறபோது...

இதே சிரிப்பு... இதே கனிவுடன் வரவேற்பாள். ஆனால் அப்போதைய சிரிப்பில் அமைதி இருந்தது; கனிவு

இருந்தது. இப்போது அவற்றைக் காணமுடியவில்லை என்றுதான் தோன்றுகிறது. அப்போது அவள் ஒரு கம்பீரமான இன்ஸ்பெக்டரின் மனைவி; இப்போது அவள் ஒரு முடவனின் பணிவிடைக்காரி!

தன்னைப் பொறுத்தவரையில் மோகனசுந்தரத்துக்கு இப்படித்தான் முனகத் தோன்றியது.

ஒரு சிகரெட்டை ஊதிவிட்டுப் படுக்கலாமே என்று தோன்றவே, சக்கர வண்டியை நகர்த்திக் கொண்டே மேசையின் அருகே சென்றான். சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு தீப்பெட்டியைத் தேடினான். அங்கே தீப்பெட்டி இல்லை. மேசை அறைகளைத் திறந்து பார்த்தான். காலியான பெட்டி கிடந்தது.

மனைவியை அழைக்கலாமா என்று காலிங் பெல்லை அழுத்தச் சென்றான். அதற்குள் என்ன நினைத்துக் கொண்டானோ? சே, பாவம்! இப்போதுதான் தனக்கான பணிவிடைகளைக் கவனித்து விட்டுத் தொழிலைக் கவனிக்கச் சென்றிருக்கிறாள். இதற்கிடையில் ஒரு தொல்லை கொடுக்க வேண்டுமா?

ஒரு சின்ன நினைவு எழுந்தது.

சில சமயம் தீக்குச்சியை உரசும் போது ஒடிந்து கொள்ளும். அதை அப்படியே சாம்பற் பேழை — ஆஷ்ட்ரே — யில் போட்டுவிட்டு வேறு தீக்குச்சியை எடுத்துப் பற்ற வைப்பான். அப்படி உடைபட்ட குச்சிகள் ஆஷ் ட்ரேயில் இருக்கின்றனவா என்று கவனித்தான். ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்தது. சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு புதிய தெம்புடன் கூடிய நிலையில் கழுத்தை உயர்த்தி நீளமாகப் புகையை விட்டான்.

அப்போது —

டக் டக் டக டக டக்... என்ற தட்டெழுத்து ஓசையுடன் —

மெல்லிதாக இழையோடிய சிரிப்பொலி...

கலகலவென்ற சிரிப்பொலியாகவுமில்லாமல், சிணுங்கிய சிரிப்பொலியாகவுமில்லாமல், எதையோ கண்டு ரசிக்கின்ற — எதையோ ஒன்றைச் சுவைக்கின்ற சிரிப்பொலியாக அது இருந்தது.

குரலைப் பொறுத்தவரை அது பைரவியின் குரல்தான்; சந்தேகமில்லை. அண்டை வீடு, எதிர் வீட்டிலிருந்து சிரிப்பொலி கேட்கக் காரணமில்லை. ஏனென்றால் தன்னுடைய வீடு ஒதுக்குப்புறமாக இருந்தது. எப்படிப் பார்த்தாலும் ஏறத்தாழ முப்பதடி வித்தியாசங்களில் அவை காணப்பட்டன. கிழக்குப் புறமாகப் பெரிதான வீதி. எனவே இன்னொரு பெண்ணின் சிரிப்பொலி இந்த வீட்டுச் சுவரைப் பொத்தலாக்கிக் கொண்டு நுழையக் காரணமில்லை. பைரவிதான் சிரித்திருக்க வேண்டும்! ஏன் சிரித்தான்? எதற்காகச் சிரித்திருக்க வேண்டும்?



## என்ன நியாயமோ?

அமெரிக்காவில் டென்னிஸ் சாம்பியன் ஆஷேயும் ஜான்கோட்ஸும் செமிபைனலில் ஆடிக்கொண்டிருந்தார்கள். ஆர்தர் ஆஷே 2-1 'கேம்' எண்ணிக்கையில் வெற்றிப் பாதையில் முன்னேறி மூன்றாவது ஆட்டத்தில் 2-1 எண்ணிக்கையில் இருந்தார். திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. அடுத்து எட்டு விளையாட்டுக்களுக்கு ஆர்தர் ஆஷே தோல்வியுற்றார். காரணம் அவர் கண்ணாடியில் நீர் ஒழுகி அவரால் பந்தைப் பார்த்து ஆட முடியவில்லை. ரசிகர்கள் ''ஆட்டத்தை நிறுத்த வேண்டும்!'' என்று வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் ஆட்ட நிர்வாகிகள் தொடர்ந்து ஆடும்படி கட்டளையிட்டு விட்டார்கள். ரெபரி ''சிறிது மழை தூறினாலோ, அதனால் மைதானம் பழுதுபட்டாலோ ஆட்டத்தை நிறுத்த வேண்டியதில்லை. இருதரப்பிலும் ஒரே மாதிரியான சிரமத்தை அனுபவித்தாலொழிய ஆட்டத்தை நிறுத்த வேண்டியதில்லை!'' என்று சொல்லி விட்டாராம். என்ன நியாயமோ?

இந்த முறை சிகரெட்டை நெஞ்சில் குழி விழப் பொறுக்க ஓர் இழுப்பு, இழுத்து விட்டுத் தூக்கி எறிந்தான்.

சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டே அறையின் வாசலண்டை வந்து மாடியை அண்ணாந்து கவனித்தான். தட்டெழுத்து யந்திரத்தின் ஓசை அறையினுள் கேட்பதை விடக் கொஞ்சம் அதிகமாசக கேட்டது; ஆனால் சிரிப்பொலி இப்போது கேட்கவில்லை.

ஏன் சிரித்தாள்? எதற்காகச் சிரித்தாள்?

—நெஞ்சுள் ஓயாத கேள்விகள்.

இந்தக் கேள்வி அவசியம்தானா?

நெஞ்சுக்குள் இன்னொரு நெஞ்சு பேசியது.

ஏன் சிரிக்கக் கூடாதா?

தனியாகத் தனக்குள் தானே சிரித்துக்கொள்ள என்ன வேண்டிக் கிடக்கிறது? அதுவும் 'டைப்' செய்துகொண்டிருக்கிற இந்த வேளையில்?

எதையாவது படித்துக் கொண்டிருக்கிறாளா என்றால் அதுவுமில்லை. டைப் செய்து கொண்டிருக்கிறாள். டைப் செய்கிற விஷயம் கதையா? இல்லையே! தலைவலி எடுக்கக்கூடிய வருமான வரிக் கணக்கு! அந்தக் கணக்கில் 'ஜோக்' இருக்க நியாயமில்லை. பின் ஏன் சிரிக்க வேண்டும்?

ஒருகால் எவனுடைய கணக்கிலாவது ஃபிராட் செலவு அநியாயமாக இடம் பெற்றிருப்பதைக் கண்டு சிரித்திருப்பாளா? இதுதான் இப்போது சகஜமாகிவிட்ட ஒன்றாயிற்றே! இதில் நகைச்சுவை என்ன இருக்க முடியும்?

வேலை பார்க்கும் அலுவலகத்தில் ஏதேனும் சிரிப்புக்குரிய சம்பவம் நடந்திருக்கும். அதை நினைத்துக் கொண்டு சிரித்திருக்கிறாள் போலும்! பல சமயங்களில் எப்போதோ படித்த நகைச்சுவைத் துணுக்குகளை நினைத்துப் பார்க்கிறபோதும்கூடச் சிரிப்பு வருவதுண்டு. பைரவியும் இப்படித்தான் நினைத்துத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டிருக்க வேண்டும்!

அதே நேரத்தில் —

மூடியிருந்த கண்ணாடி ஜன்னலின் அந்தப் பக்கத்திலிருந்த பல்லியொன்று இந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற பூச்சி ஒன்றைத் தாவித் தாவிக் கவ்வ முயன்று கொண்டிருந்தது. முடிகிற காரியமா?

மோகனசுந்தரத்துக்கே சிரிப்பு வந்து விட்டது.

சிரித்து முடித்த அடுத்த நிமிஷம்—

நாம் ஏன் சிரித்தோம்?

ஒரு கணம் அப்படியே கண்களை மூடிக் கொண்டான்.

ஏதோ புத்தனுக்குக் கிடைத்து விட்ட ஞானோதயம் போன்ற ஒரு தெளிவு.

கண்களைத் திறந்து பார்த்தபோது—

எதிரே வீசியெறிந்த பொன்மொழிப் புத்தகம் மின்விசிறியின் காற்றில் வெகு நேரமாகத் துடித்துக் கொண்டிருப்பது தெரிய வந்தது. அதை எடுத்து அலமாரியில் செருக வண்டிச் சக்கரத்தை நகர்த்தினான்.

அருகே சென்று மெல்லக் குனிந்து புத்தகத்தை எடுத்தான். திறந்து மடிப்புக் கண்டிருந்த அந்தப் பக்கத்தைப் பார்வையிட்டான்.

அங்கே—

சில எழுத்துக்கள் ஓர் அறிஞனால் அமரத்துவம் பெற்றிருந்தன:

> **''கடவுளிடம் உனது உடைந்த இதயத்தைக் கொடு; அதை முழுமையாக்கிக் கொடுப்பார். ஒரு பெண்ணிடம் உன் முழு இதயத்தையும் கொடு; அதை அவள் உடைத்துக் கொடுப்பாள்!''**

சற்று நேரம் முன்பு மாடியிலிருந்து வந்த மனைவியின் சிரிப்பொலி அவனைக் குழப்பியது.

இப்பொழுது அந்தப் புத்தகமோ அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)



குமாரி சீதா

## அரங்கேற்றம்

1972-ம் ஆண்டு டிசம்பர் 16ந் தேதி ஜம்ஷெட்பூர் மதராஸி சம்மேளனியின் ஆதரவில் குமாரி சீதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் வெகு சிறப்பாக நடந்தேறியது. குமாரி சீதா விரைவிலேயே கலை உலகில் முன்னணிக்கு வரவிருக்கும் திறமைசாலி என்று அன்றைய வெற்றிகரமான நிகழ்ச்சியில் நிதரிசனமாயிற்று. நிகழ்ச்சி நிரலின் ஒவ்வொரு அம்சமும் அற்புதமாக இருந்தது: இவற்றில் "ஆண்டாள்" முடிமணியாக விளங்கியது. நிகழ்ச்சிக்கு மன்றம் வழிய ரசிகப் பெருமக்கள் குழுமியிருந்தனர். பேராசிரியர் ஜி.ஏ. நடராஜனின் சிஷ்யையாகிய குமாரி சீதா, ஜம்ஷெட்பூர் திரு கே. எம். ராமசுவாமி அவர்களின் குமாரி ஆவார்.

# காட்ட முடியாத கணக்கு

தபால்காரர் கொடுத்து விட்டுப் போன ஐம்பது ரூபாய்ப் பணத்தையும், மணியார்டர் கூப்பனின் கீழ்ப் பகுதியையும் கையில் வைத்துக் கொண்டு, கண்களில் நீர் பெருக நின்று கொண்டிருந்தாள் ராஜம்மா.

கிணற்றடியி லிருந்து பூணூலைச் சரியாக மாற்றிக் கொண்டே ஹாலுக்கு வந்தார் வேங்கடராமன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்.

திக்பிரமை பிடித்தபடி, கண்களில் நீர் பெருக நின்று கொண்டிருக்கும் மனைவியைப் பார்த்தார். அவள் கையில் இருந்த பணமும், மணியார்டர் கூப்பனும் அவர் கண்களில் பட்டன.

'ஓ! மாதாந்திரக் கப்பம் - மகனிடமிருந்து வந்து விட்டதோ?' என்று தம் மனசுக்குள் ளேயே சொல்லிக் கொண்டார்.

''ஏய் ராஜம், என்ன அப்படியே நின் னுட்டே! உள்ளே போய் ஒரு டம்ளர் மோர் கொண்டா, போ...''

கணவனின் குரல் கேட்டுச் சுய நினைவுக்கு வந்தவள், பணத்தையும் கூப்பனையும் ஊஞ்ச லில் வைத்துவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

வேங்கடராமன் அந்தக் கூப்பனை எடுத்தார், படித்தார், சிரித்துக் கொண்டார்.

''பயல் சொன்ன பேச்சை இந்த விஷயத்தி லாவது தட்டவில்லை!''

மனைவி கொடுத்த டம்ளரைப் பெற்றுக் கொண்டே அவளுடைய முகத்தில் பிரதி பலிக்கும் உணர்ச்சிகளைப் படிக்க முயன்றார்.

''...ராஜம்... ராஜம்...''

அவள் புடவைத் தலைப்பால் தன் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''அசடே... நீதான் இப்படி உன் புத்திர சிகாமணிக்காக வருத்தப் படறே! ஆனால் அவனோ கொஞ்சமும் வருத்தப்படறதா தெரி யல்லே. பாரேன்.... மணியார்டர் கூப்பன்லே கூட, 'அன்புள்ள அம்மாவுக்கு' என்று எழுதக் கூடாதோ? வழக்கம் போல் ஒரே வரி. தலைமை என் இருபத்தைஞ்சு; ரூபாய் ஐம்பது!... அதாண்டி... சும்மா சொல்லலே... பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுன்னு...ம்''

ராஜம்மாவால் அடக்க முடியவில்லை. பூஜை அறைக்குள் சென்று விட்டாள்.

மேஜையின் மேலிருந்த சிவப்பு நிற நோட் டுப் புத்தகத்தை எடுத்தார் வேங்கடராமன்.



மூடியில்லாத கூட்டிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டார். நிதானமாக அவர் பக்கங்களைப் புரட்டும் பொழுது அந்தத் தலைமை ஆசிரியரின் மனத்தில் பழைய சம்பவ ஏடுகளும் புரளத் தொடங்கின.

நேர்மைக்கும் சத்தியத்துக்கும் முழு உருவமாகக் காட்சி யளித்த காந்தியின் பெயரால் நடைபெற்ற அந்த உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பதவியில் பத்து ஆண்டுகளும், தலைமை ஆசிரியர் பதவியில் ஐந்து ஆண்டுகளும் உழைத்து, பலருக்கு — ஆசிரியர்கள் உட்பட — உதாரண புருஷர்களாக விளங்கியவர் வேங்கடராமன். அவருடைய ஒரே பிள்ளை பாஸ்கரன். பள்ளிப் படிப்பு முடியும் வரை ஒழுங்காகத்தான் இருந்தான்.

ஒரே பிள்ளை என்ற காரணத்தால் அவன் தாயார் கொடுத்த செல்லம், அவனை வழிமாற வைத்து விட்டது. தன் கணவனுக்குத் தெரியாமல் மகனுக்குப் பணம் கொடுத்ததன் விளைவு; இரவு வெகு நேரம் கழித்துத் திரும்பும் மகனை, கணவன் கண் பார்வையிலிருந்து மறைத்து,சமையலறையில் சாப்பாடு போட்ட பாசத்தின் எதிரொலி, கல்லூரிக்குக் கட்ட வேண்டிய பணத்தைச் சிநேகிதர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டு வந்த பிள்ளையை அடித்துத் திருத்தாமல், அள்ளி யெடுத்துப் படுக்கையில் விட்ட தாய் உள்ளம் கதறக் கதற நடந்த அந்த நிகழ்ச்சி வேங்கடராமனுக்கு இன்னும் நினைவிலிருக்கிறது.

வேங்கடராமனிடம் ஒரு தனி முறை. மகன் போக்குக்குக் காரணம், மனைவியின் பலவீனம்தான் என்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் அவர், மகன் குடித்துவிட்டு வந்த மறுநாள் காலை மகனிடம் ஒன்றும் கேட்காமல், மகன் எதிரிலேயே மனைவியை அதட்டிக் கூப்பிட்டார்.

''ஏய் ராஜம்! இங்கே வந்து தொலை.''

ராஜத்தின் உள் மனம் எச்சரித்தது. மகன் பாஸ்கரனோ அலட்சியமாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். வேங்கடராமன் கையிலே ஒரு கைத்தடி இருந்தது.

அவர் ரிடையரானபோது மற்ற ஆசிரியர்கள் கொடுத்த நினைவுப் பரிசு.

ராஜம் வந்தாள். மகன் நாற்காலியில் காலாட்டிக் கொண்டிருந்தான். அவர் கையில் கைத்தடி.

''நீ கொடுத்த செல்லம்தான்டி உன் பிள்ளை இப்படி ஆயிட்டான். அடிக்கிற சமயத்தில் அடிச்சு, அணைக்கிற சமயத்திலே அணைச்சாத்தான் பிள்ளை உருப்படியாக வளரும்.... ம்... பல மாணவர்களை நல்லபடியா உருவாக்கின எனக்கு இப்படி ஒரு பிள்ளை... நேற்று குடிச்சுட்டு வர்றான்; பிள்ளை அறையிலே போய்ப் பாரு... சிகரெட் பாக்கெட் வேறே.. சே....!''

''வந்து... ஏதோ தெரியாத்தனமா செஞ்சுட்டான்.... வந்து...'' தயங்கினாள் ராஜம்.

''என்னடி தெரியாத்தனமா செஞ்சுட்டான்? குடிக்கிறபோதே குடிக்கிறது தப்புன்னு தெரியாதா? அதுவும் கல்லூரிச் சம



பணம் கட்டக் கொடுத்த பணம்... ராஸ்கல்... என்ன திமிர் இருக்கணும் அவனுக்கு...?''

அவருடைய கைத்தடி உயர்ந்தது. ராஜம் பதறினாள். பாஸ்கரனுக்கும் உடல் கொஞ்சம் நடுங்கியது.

''ஏண்டி நடுங்கறே? உன் பிள்ளையை ஒண்ணும் அடிக்கல்லே. இந்தத் திமிர் வளர்றதுக்குக் காரணம் நீதாண்டி; உன்னைத்தான்...'' என்றபடியே ராஜத்தின் முதுகிலும் முழங்கையிலும் நன்றாக அடித்து விட்டு ஓய்ந்தார்.

பாஸ்கரனுக்கு உடல் சிலிர்த்தது. வீட்டை விட்டுப் போய்விட்டான்.

வேங்கடராமன் கதறினார். ''ராஜம்...! தப்பு செய்த தன்னை அடிக்காமல் தனக்கு உதவி செய்த அம்மாவை அடித்து விட்டாரே அப்பா என்று மனம் திருந்தி உன்னைத் தடுக்க வருவான்னு நான் நினைச்ச பிள்ளை...ஐயோ... இப்படி உன்னைத் தவிக்க விட்டு விட்டுப் போறானே!... ராஜம்! என் பிள்ளையோட நிலைமைக்கு நானும்தான் காரணம்... உங்கிட்டே அளவுக்கு மீறிப் பணம் கொடுத்தது என் தப்புத்தானே... நானே என்னை அடிச்சுக்கணும்... ஆனா... ராஜம்... என் கையிலே தெம்பு இல்லே.... உன்னை அடிச்சே என் கையிலே ஏகப்பட்ட வலி... நீயே என்னை அடிச்சுடறியா?'' தேம்பித் தேம்பி அழுதார் வேங்கடராமன்.

''ஐயோ! அப்படிச் சொல்லாதீங்கோ... எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்... கொஞ்சம் இருங்கோ...'' என்று சொல்லிவிட்டுச் சமையலறைக்குள் சென்றாள்.

வேங்கடராமன் அந்தக் கைத்தடியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தள்ளாத காலத்தில் பெற்ற மகன் உதவியாக இருப்பான் என்ற எண்ணத்தில் சிறு வயதில் பாஸ்கரனை அவர் 'தடியா, தடியா' என்று செல்லமாகக் கூப்பிடுவார்.

''அந்த மகன் செய்த குற்றத்துக்குப் பெற்றவனுக்குத் தண்டனை நான் கொடுத்தேன். ஆண்டவனே! அவனைப் பிள்ளையாகப் பெற்றதே எனக்கு நீ தந்த தண்டனையோ!'' என்று அவர் அழுதார்.

சமையலறையிலிருந்து பெரிய டபராவில் வெந்நீருடன் அருகே வந்தாள் ராஜம்.

''கையை நீட்டுங்கோ... வலியா யிருக்குன்னு சொன்னேளே... ஐயோ... இப்படி உங்க கையே வீங்கியிருக்கே.. வெந்நீர் ஒத்தடம் கொடுக்கிறேன். சரியாப் போயிடும்...''

தம் கையை எடுத்த மனைவியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கதறிவிட்டார்.

''...ராஜம்!... நான் உன்னை அடிச்ச அடியிலே முதுகெல்லாம் வீங்கி யிருக்கு. முழங்கையில் ரத்தம் வரது; அதுக்கு மருந்து போடாமல், அடித்த என் கைக்கு ஒத்தடம் கொடுக்க வர்றியே...? உன்னை என்னம்மா சொல்றது? எனக்கு ஒத்தடம் வேண்டாம். உனக்கு நான் மருந்து போடறேன்...வா...''

''நீங்க கொடுத்த அடிதான் எனக்கு மருந்து. மகன் தறுதலையா யிருக்கானேன்னு மனசுக்குள்ளே குமைஞ்சு, மனசிலே ஆறாத புண்ணாயிடுத்து... நீங்க கொடுத்த இந்த மருந்து அந்தப் புண்ணை ஆற்றிடுத்து.''

''என்ன சொல்லறே, ராஜம்?.... நான் அடித்த அடி, மருந்தா?''

''....ஆமாம்... சிகிச்சை முறையிலே இரு வகை உண்டுன்னு அடிக்கடி சொல்லுவீங்களே. ரண சிகிச்சையும் ஒரு முறை தானே? புண்ணைக் கீறி மருந்து போடறதில்லையா? அது மாதிரி.... மகன் தறுதலையாகத்தானே இருக்கான், திருத்திடலாம்னு பார்த்தேன். பாசத்தை மருந்தாகப் பயன்படுத்தினேன் பாவி, அடம் பிடிக்கிற குழந்தை பாலாடையைத் தட்டி விடற மாதிரி செஞ்சுட்டான். போறான் விடுங்க...'' அவள் கணவனுக்கு ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்து விட்டாள்.

''அப்படி அவ்வளவு சீக்கிரம் அவனை விட்டுடப் போறதில்லேடி, பார்த்துண்டே யிரு.''

போன மகன் திரும்பவே யில்லை. மூன்று மாதங்களுக்குப் பிறகு பம்பாயிலிருந்து கடிதம் வந்தது.

''அம்மாவுக்கு,

நான் பம்பாயில் வசிக்கிறேன். ஏதோ கல்லூரியில் படித்த படிப்பு கொஞ்சம் உதவியா யிருக்கிறது. நண்பனின் உதவியால் நல்ல வேலை கிடைத்திருக்கிறது.

—இப்படிக்கு பாஸ்கரன்''

ரத்தினச் சுருக்கமாக வந்த கடிதத்தில் தன் மகனையே பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜம். கடிதத்தைப் படித்த வேங்கடராமனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. கடிதத்தில் இருந்த முகவரி அவருக்குத் தெம்பைக் கொடுத்தது.

அவர் கடிதம் எழுத உட்கார்ந்தார்.

கணவர் எழுதிய கடிதத்தைப் படித்த ராஜத்துக்கு ஒன்றுமே புரியவில்லை.

''என்ன இப்படி எழுதி யிருக்கிறீர்களே!''

''என்ன தப்பாய் எழுதி விட்டேன்?... வீட்டை விட்டு ஓடிப்போன பிள்ளைக்கு இப்போது உதவியா யிருக்கிறது கல்லூரிப் படிப்புன்னுதானே எழுதி யிருக்கான்....படவா, ராஸ்கல்... அவன் பிறந்த நாளிலேருந்து கடைசியா அவன் கல்லூரிக்குக் கட்டக் கொடுத்த பணம் வரை அவன் திருப்பித் தரட்டும். அதுவும் தவணை முறையிலேன்னு தானே கேட்கிறேன்... பதில் வரட்டும்... நீ பேசாமல் இரு...''

ராஜம் மௌனமானாள். பம்பாயிலிருந்து எதிர்பார்த்ததற்குச் சீக்கிரமாகவே பதில் கடிதம் வந்தது.

''அப்பாவுக்கு,

உங்கள் கடிதம். நீங்கள் எழுதியுள்ள படியே ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறை ஐம்பது ரூபாய் தவணையில் செலுத்தி விடுகிறேன். சௌகரியப்பட்டால் அதிகமாகவே அனுப்புகிறேன் — அம்மாவின் பெயருக்கு.

—இப்படிக்கு பாஸ்கரன்''

''ரோஷக்காரப் பிள்ளையடி'' என்று பெருமைப்பட்டுக் கொண்டே கடிதத்தை எடுத்து மடித்து வைத்தார் வேங்கடராமன்.

''...ம்... சொன்னபடியே ஒழுங்காக இருபத்தி ஐந்து தடவையாக அனுப்பிக்கொண்டு வருகிறான்'' என்று முனகிக் கொண்டே வந்த

அவர் சிவப்பு நிற நோட்டில் வரவு வைத்துக் கொண்டார். ஒரு வாரம் சென்றது.

கபாலீசுவரர் கோயிலுக்குச் சென்று திரும்பிய ராஜம்மாள் கணவனிடம் பிரசாதத்தைக் கொடுத்துக் கொண்டே, ''தெற்கு மாட வீதியிலே இருக்கிற பார்வதம் இன்னைக்கு என்னிடம் ஒன்று கேட்டாள்'' என்று விஷயத்தை ஆரம்பித்தாள்.

''என்ன கேட்டாள்?''

''பாஸ்கரோட ஜாதகம் வேணுமாம். அவ பொண்ணு பேருக்கேத்த மாதிரி லட்சுமியா இருக்காளாம்.... வந்து... வந்து...'' தயங்கினாள் ராஜம்.

ஊஞ்சலை விட்டுக் கீழே இறங்கிக் கண்ணாடி அலமாரியிடம் சென்றார் அவர். மேல் தட்டில் மஞ்சள் அட்டை போட்ட சிறு நோட்புக்கை எடுத்தார்.

ராஜத்துக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ஜாதகம் எழுதி வைத்த நோட்டு அது. கற்பகாம்பிகையை மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

அவர் ஊஞ்சலருகே வந்தாள். நோட்புக்கைப் பிரித்தார். ராஜத்துக்குத் துணுக்கென்றது.

அதிலிருந்து அவர் எடுத்த ஓர் எக்ஸ்பிரஸ் கவர் அவள் கவனத்தை ஈர்த்தது. 'எக்ஸ்பிரஸ் லேபிள்' நிறம் — சிவப்பு — அவளுக்கு எதையோ குறிப்பால் உணர்த்தியது

''...நேற்று மத்தியானம் நீ மாவு மில்லுக்குப் போனபோது வந்த கடிதம்... படித்துப் பார்...''

கடிதத்தின் உள்ளே இருந்த விஷயம் அவளை மயக்கமடையச் செய்தது.

''ராஜம்... கடிதத்திலே வெடிகுண்டு இருந்தாற் போல இப்படி விழறியே....'' என்றபடியே அவளைத் தாங்கிக் கொண்டார்.

அரை மயக்க நிலையிலே, ''அப்படி ஏதாவது ஆகி ஒரேயடியா செத்துப் போயிருக்கலாமே... ஏன் அவன் இப்படிச் செய்துவிட்டான்? குழந்தைக்கு ஆண்டு நிறைவுன்னு கடிதம் போடறானே?... என்ன நெஞ்சழுத்தம்.... சே!...'' அவள் மீண்டும் மயக்கமானாள்.

வேங்கடராமனாலும் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லைதான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு விட்டார். ஆனால் ராஜம்? அவளால் அந்தச் செய்தியை ஜீரணிக்க முடியவில்லை. பெற்ற மனம் ஆயிற்றே?

இரண்டு மாதங்களாக மகனிடமிருந்து பணமோ, கடிதமோ வரவில்லை. ராஜத்தின் மனம் அலைபாய்ந்தது.

''ஏண்டி இப்படிக் கிடந்து அலையறே?... வந்திருக்காளே பெண்டாட்டி... எந்த ஜாதியோ, என்ன எழவோ? கண்டித்துச் சொல்லியிருப்பாள்... பணம் அனுப்ப வேண்டாம்னு... பெண்டாட்டி தாசனாயிருப்பான். காதல் கல்யாணம்தானே.... கவர்ச்சி போயிடுத்துன்னா, 'சீ'ன்னு ஆயிடறதுகள்!...''

ராஜம் ஒன்றும் பேசவில்லை. மேலும் ஒரு வாரம் கழிந்தது. ஒரு கடிதம் வந்தது. ஆரம்பமே பூகம்பம்!

''அன்புள்ள அம்மாவுக்கு.''

ராஜத்துக்குக் கண்களை நம்ப முடியவில்லை! பாஸ்கரன் கையெழுத்துத்தான்!... 'அன்புள்ள' அடேடே! இந்த வார்த்தை இத்தனை நாளா இவனுக்குத் தெரியாமலா இருந்தது?

கடிதத்தைப் படித்தாள்:

''அன்புள்ள அம்மாவுக்கு,

நமஸ்காரம். அப்பா நலமாக இருக்கிறாரா? இரண்டு மாதங்களாக எனக்கு ஒரே செலவு. அதனால் பணம் அனுப்ப முடியவில்லை. சென்னைக்கு மாற்றலாகி வர வாய்ப்பு இருக்கிறது. வரலாமா? அப்பாவிடம் அனுமதி கிடைக்குமா? மனைவி கோகிலா சொன்னதின்பேரில் தான் எனக்கு இப்போது தெளிவாகிறது... உன்னையும், அப்பாவையும் நேரில் பார்த்து தானே மன்னிப்புக் கேட்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். குழந்தை நன்றாக விளையாடுகிறது...

—இப்படிக்கு அன்புள்ள பாஸ்கரன்''

ராஜத்துக்குத் தொண்டை அடைத்தது. கண்களில் தாரை தாரையாக நீர் பெருகியது.

''என் மகனா இப்படி எழுதி யிருக்கிறான்?'' அவள் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்க்கிறாள். சுமார் அறுபது தடவை அதைப் படித்தாள்!

வேங்கடராமன் அந்தக் கடிதத்தைப் படித்தார். ஒன்றுமே சொல்லவில்லை.

இரவுச் சாப்பாட்டுக்குப் 'பிறகு வெற்றிலையை மடித்துக் கொடுத்த மனைவியிடம் நிதானமாகச் சொன்னார், வேங்கட்ராமன்:

''நாளைக்குக் கடிதம் எழுதி விடுகிறேன் பையனுக்கு.''

ராஜத்தின் கண்களில் ஆவல் மின்னியது.

''என்னன்னு எழுதப் போறேன்?''

''சென்னைக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வா. ஆனால் வீட்டுப் பக்கம் வராதே என்று!'' அவர் படுக்கைக்குச் சென்று விட்டார்!

பத்து நாட்கள் கழிந்திருக்கும். காலை ஏழு மணி சுமாருக்குத் தந்தி' சேவகன் கொடுத்த தந்தியைப் பெற்றுக் கொண்ட வேங்கடராமன் தள்ளாடினார். சைக்கிள் மணி ஒலி கேட்டு ஹாலுக்கு வந்த ராஜம் பதறிப் போனாள்.

''கார் விபத்திலே கோகிலா போயிட்டாளாம்!''

ராஜம் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டாள். வேங்கடராமன் ஓடிவந்தார் தரையில் விழுந்துவிட்ட மனைவியை அணைத்து எடுத்து ஊஞ்சலில் படுக்க வைத்தார். அவசரம் அவசரமாக டாக்டரை வரவழைக்க வெளியே வந்தார்.

''என்னங்க...இப்படியே இருந்தால் எப்படி? அங்கே பையன் எப்படித் தவிக்கிறானோ?'' மெலிந்த குரலில் கேட்டாள் ராஜம். பத்து நாட்களில் அவள் சிறிது தெம்பு பெற்றிருந்தாள். பத்தே நாட்களில் வெகுவாக இளைத்து விட்டிருந்தார் வேங்கடராமன்.

''என்னை என்ன செய்யச் சொல்லறே?''

அவருடைய குரலும் உடைந்திருந்தது.

''நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியணுமா?''

வாசலில் டாக்சி நிற்பது தெரிந்தது.

கதவைத் திறந்து கொண்டு, குதிப்புடன் ஓடிவரும் அந்தச் சிறுவன் —

''என்ன.... பாஸ்கரன் இப்படி ஓடி வரானே....'' என்று கேட்டு விட்டாள் ராஜம்.

''ஆமா... ஆமா... சின்ன வயசிலே பாஸ்கரன் இப்படித்தான் இருந்தான்.... அப்போ இந்தப் பையன்...'' இழுத்தார் அவர்.

வாசற்படியில் நிழலாடியது. அங்கே பாஸ்கரன் நின்று கொண்டிருந்தான்.

ஹாலுக்குள் நிற்கும் சிறுவனையும், வாசற்படியில் நிற்கும் பாஸ்கரனையும் பார்க்கும் பொழுது, ஏதோ சினிமாவில் காண்பிக்கப்படும் தந்திரக் காட்சி போல் இருந்தது அவருக்கு. ''....பாத்தி... தாத்தா....'' என்றபடியே வந்த அந்தக் குழந்தை, 'வேங்கடராமனின் கால்களைக் கட்டிக் கொண்டது. தன் செப்பு வாயால் ராஜத்தின் கன்னத்தில் முத்தமிட்டது.

ராஜத்துக்கு உடல் சிலிர்த்தது. வேங்கடராமனுக்கும் ஒரு புதிய உணர்ச்சி பரவியது. பாஸ்கரன் உள்ளே நுழையவில்லை.

ராஜம் தன் கணவனைப் பார்த்தாள். குழந்தையைப் பார்த்தாள். வாசற்படியைப் பார்த்தாள். குனிந்த தலையுடன் நிற்கும் மகனையும் பார்த்தாள்.

பார்வைகள் மோதிக்கொண்டன.

ராஜம் குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டாள்.

''வாடா, தடியா!'' என்று வரவேற்றார் தந்தை.

உள்ளே நுழைந்தவுடன் தடாலென்று கீழே விழுந்து நமஸ்கரித்தான் பாஸ்கரன்.

''இன்னும் ஆயிரத்துச் சொச்சம் பாக்கியிருக்கு... இன்னும் கணக்குத் தீரல்லே...'' வேங்கடராமன் கண்டிப்புடன் பேசினார்... சிவப்பு நிற நோட்டுக்கை எடுத்து வந்தார்.

மறுபடியும் தன் தாயின் கால்களில் விழுந்தான் பாஸ்கரன்.

''அம்மா...அம்மா...தயவுசெய்து என்னை மன்னிச்சுடு அம்மா... உன் அருமை தெரியாமல் உனக்கே அடி வாங்கிக் கொடுத்த இந்தப் பாவியை மன்னிச்சுடும்மா.''

''டேய், எழுந்திருடா... எழுந்திரு. உங்கப்பா கணக்குக் காட்டற மாதிரி நான் கணக்குக் காட்ட முடியாதுடா. உன் படிப்புக்குச் செலவழிச்ச பணத்தை அப்பா கணக்கு காட்டறார். ஆனால் உன்னை வளர்க்கிறதுக்கு நான் பட்ட அவஸ்தையைக் கணக்கிலே கொண்டு வர முடியுமா?''

''நிச்சயமா முடியாதும்மா... கோகிலா செத்த உடனே நான் பட்ட அவஸ்தை.... இந்தக் குழந்தையை வைச்சுண்டு நான் பத்து நாட்கள் பட்ட அவஸ்தை. அப்போதானம்மா புரிஞ்சது. குழந்தையை வளர்க்கிறது இவ்வளவு கஷ்டம் என்கிறது.''

''...பாஸ்கர், நான் மட்டும் ஒன்றும் புதிதாச் செஞ்சிடலே... ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளை வளர்க்கிறதுக்காகப் படற துன்பம் இருக்கிறதே... அதை வார்த்தையாலே வர்ணிக்கிறதோ, விலை பேசறதோ கணக்குக் காட்டவோ முடியாதுடா.... பல ராத்திரிகள் தூங்காமல், கண் விழித்து, நோய் நொடி இல்லாமல் வளர்க்கிற தாய், தன்னையும், தன் பிறப்புக்குக் காரணமான தந்தையையும் மகன் காப்பாத்துவான்னு நம்பித்தாண்டா அப்படிச் செய்யறா. உன்னைத் திருத்தறத்துக்காக அடிபட்ட நான், அந்த அடிக்கு விலை பேசி, கணக்குக் காட்ட முடியுமா?''

குலுங்கிக் குலுங்கி அழுதாள் ராஜம்.

''பாஸ்கர்... இந்தா பாஸ் புத்தகம் நீ அனுப்பி வந்த ரூபாயை யெல்லாம் உன் பெயரிலேயே போட்டு வைச்சிருக்கேன்... இந்தா''

ஆச்சரியத்துடன் கணவனைப் பார்க்கிறாள் ராஜம்.

''ஆமாம் ராஜம்...ஒருவேளை நான் செத்துப் போயிட்டா எனக்குக் காரியம் பண்ண அவனுக்குப் பணம் வேண்டாமா? அதுக்குத்தான் அப்படிச் செஞ்சேன்...அவன் சம்பாதிச்ச பணத்திலே காரியம் நடந்தால் அவனுக்கும் பெருமை. எனக்கும் நிம்மதியில்லையா?'' பாஸ்கரன் கல்லானான்.

# சத்திய வெள்ளம்

## நா. பார்த்தசாரதி

### இருபத்தொன்பதாவது அத்தியாயம்

நேரு விழாக் கூட்டத்தன்று மாலை தன்னையும் அருகில் வைத்துக் கொண்டு அண்ணாச்சி பாண்டியனைக் கண்டித்த போது, 'உன் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படும் பொறுப்பு உன்னை விட இந்தத் தங்கச்சிக்குத்தான் அதிகம்' என்று தன்னைச் சுட்டிக் காட்டிப் பேசியது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. தங்களுடைய அன்பும் நேசமும் தங்களோடு பழகும் பிறரால் புரிந்து அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டுவிட நேரும் போதெல்லாம் இப்படித்தான் மனம் பூரித்தாள் அவள். விடுதி விதிகள் கடுமையாக்கப் பட்டிருந்தும்கூட அன்று முன்னனிரவில் அண்ணாச்சியின் கடை முன்பாக நடந்த நேரு விழாக் கூட்டத்தில் பாண்டியன் பேசுகிற வரை இருந்து கேட்ட பின்பே அவளும் மற்ற மாணவிகளும் விடுதிக்குத் திரும்பினர்.

மறு தினம் காலை வகுப்புக்கள் தொடங்குவதற்கு முன் பல்கலைக் கழக மைதானத்தில் அவளைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தபோது, ''உனக்காகவாவது நான் எச்சரிகையாக இருக்க வேண்டும் என்று உன்னையும் பக்கத்தில் வைத்துக் கொண்டே அண்ணாச்சி சொல்லி விட்டார். ஆனால் இப்போதெல்லாம் உன்னைப் பார்க்கும்போதே எதிரே 'எச்சரிக்கை'யைப் பார்க்கிற பயம் வந்து விடுகிறது'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் பாண்டியன். அவள் அருகே நின்ற தோழிகளும் இதைக் கேட்டுச் சிரித்தார்கள்.

''நல்ல வேளை! அபாயம் என்று சொல்லாமல் 'எச்சரிக்கை' என்று சொன்னீர்களே?''

''எச்சரிக்கை என்று சொல்லிவிட்டதனால் அபாயம் இல்லை என்று ஆகிவிடாது. ஒவ்வொரு பெண்ணும் ஓர் அபாயம் என்பதனால்தான் ஆண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது...''

''ஆண்கள் மட்டும் அபாயமே இல்லாத பரம சாதுக்களோ?''

''ஒரு பட்டிமன்றம் நடத்தி முடிவு செய்ய வேண்டிய விவாதம் இது. இப்போது எனக்கு அதற்கான நேரமில்லை.''

''ஏன்? நேரு விழாப் பட்டி மன்றத்தில் தோற்றது போதாதா? மறுபடியும் தோற்க ஆசையா?''

கண்ணுக்கினியாள் சார்பாக அவளுக்குப் பரிந்து கொண்டு வந்து பேசிய எல்லாப் பெண்களும் கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது முதற் பாட வேளைக்கான மணி அடித்து அவனைக் காப்பாற்றியது. எல்லோருமே அவரவர்கள் வகுப்புக்களுக்காக விரைந்தார்கள். மைதானத்தில் வகுப்புக்காக விரைந்து கொண்டிருந்த பாண்டியனை நடனசுந்தரம் என்ற பெயரையுடைய கீழ்த் திசைப் பட்டப் பிரிவு மாணவர் அவசரமாக வந்து எதிர் கொண்டார்.

''அண்ணனைப் பார்க்கத்தான் வந்தேன்? ஒரு ஐந்து நிமிஷம்நின்னு நான் சொல்றதைக் கேட்டப்புறம்தான் போகணும். இரண்டு வாரங்களாக ஒரு பெரிய தகராறு. வகுப்பிலே உரைநடைப் பகுதி நடத்த வருகிறபோதெல்லாம் பண்புச் செழியனார் ஒரு குறிப்பிட்ட கட்சியின் பெயரையும், தலைவர் பெயரையும் சொல்லி, 'மேடைத் தமிழ், ஏட்டுத் தமிழ் எல்லாமே அவரால்தான் உயிர் பெற்றது. அவரே தமிழுக்கு உயிர் கொடுத்தார். அவரை வீர வணக்கம் செய்தே தமிழை வளர்க்க முடியும்' என்று வெளிப்படையாகக் கட்சிப் பிரசாரத்தில் ஈடுபடுகிறார். நானும் வேறுசில தேசிய மாணவர்களும் வகுப்பிலேயே குறுக்கிட்டு, 'வீர வணக்கத்தை குருட்டுத்தனமாகப் பின்பற்றி மோசம் போன காரணத்தால்தான் ஒரு தலைமுறையைச் சேர்ந்த பல்லாயிரம் தமிழ் இளைஞர்கள் யாரோ ஒருவர் மேடையில் பேசியது போலவே மூக்கால் பேசவும், யாரோ ஒருவர் எழுதியது போலவே 'பருவப் பாவை உரைநடை' எழுதவும் பழகிச் சீரழிந்தனர். தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் ஓரிஜினாலிடியும், இண்டுவிஜுவாலிடியும் வளராமல் வெறும் இமி

டேஷன் மட்டுமே நோயாக வளர்ந்த பயங்கரமான தொத்து நோய்க் காலத்தைத்தான் நீங்கள் பொற்காலம் என்று பொய்யாகப் புனைந்து இங்கே சொல்லுகிறீர்கள் சார்!'' என்று மறுத்தோம். உடனே பண்புச் செழியனுக்கு ஆதரவான சில மாணவர்கள் வகுப்பிலேயே எங்கள் மேல் பாய்ந்து விட்டார்கள். கூப்பாடு போட்டார்கள். வகுப்பில் நடக்கும் பச்சையான இந்தக் கட்சிப் பிரசாரத்தை எப்படியாவது தடுக்க வேண்டும்'' என்றார் நடனசுந்தரம்.

மாலையில் தன்னை விடுதி அறையில் வந்து பார்த்தால் இதைப் பற்றிக் கலந்து பேசிச் செய்ய வேண்டியதைச் செய்யலாம் என்று கூறி அந்த மாணவ நண்பருக்கு விடையளித்தான் பாண்டியன். நடனசுந்தரமும் மாலையில் மற்ற நண்பர்களோடு வந்து சந்திப்பதாகக் கூறிவிட்டுச் சென்றார். பகல் நேரம் முழுதும் சுறுசுறுப்பாக வகுப்புக்களில் கழிந்தது. நண்பகலில் மாணவ மாணவிகளுக்காக அறிவிக்கப்பட்ட ஒரு சுற்றறிக்கையில் மறு நாள் மாலை எல்லா விடுதிகளுக்குமான விடுதி நாள் விழாவும் தேநீர் விருந்தும் நடைபெறும் என்றும் அதில் கலந்து கொண்டு பேச ஒரு பெரிய நடிகரும், வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புக்காக அவரோடு மல்லிகைப்பந்தலுக்கு வந்திருக்கும் ஒரு நடிகையும் வரப் போவதாகச் சுற்றறிக்கை கூறியது. பல்கலைக் கழகப் பாட ஆண்டின் மூன்று பகுதிகளும் இப்படி விடுதிகளுக்கான விழா அல்லது 'ஸோஷல் பிரேக் அப்' — ஒன்றைக் கொண்டதாக இருக்கும். மாணவர் பேரவைத் தேர்தல், வேறு பல பரபரப்பான நிகழ்ச்சிகள் எல்லாம் இருந்ததனால் முதற் பகுதியில் விடுதி விழா அவ்வளவு நன்றாக அமையவில்லை. எனவே இந்த இரண்டாவது பகுதியில் அதை ஏற்பாடு செய்து அந்தச் சமயத்தில் அங்கே படப்பிடிப்புக்காக வந்திருந்த இரு கலைஞர்களையும் அதில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்க அழைத்திருந்தார்கள். விடுதி சம்பந்தமான குழுக்களில் மட்டும் எப்படியோ மல்லை இராவணசாமியின் கட்சிச் சார்புள்ள மாணவர்களே அதிகமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்று வந்திருந்தார்கள். அதனால் இந்த விடுதி விழாவில் அவர்கள் ஏதாவது வம்பு செய்யக் கூடும் என்று பாண்டியனும் நண்பர்களும் எதிர்பார்த்தார்கள். அன்று மாலை நடனசுந்தரமும் அவரோடு வேறு சில ஓரியண்டல் பட்டப்படிப்பு மாணவர்களும் தன் அறைக்குத் தேடி வந்தபோது அவர்கள் பிரச்னை பற்றிச் சிறிது நேரம் பேசிப் பாண்டியன் வழிவகைகளைக் கூறிய பின் மறுநாள் மாலை நடைபெற இருக்கும் விடுதி நாள் விழாவைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது.

''விழாத் தேநீர் விருந்துக்கான உண்டி வகைகள் பற்றிய அட்டை (மெனு) புதுமையான முறையில் அச்சிடப்பட்டிருக்குமாம்! சிறப்பு விருந்தினர்களான நடிகமணி தங்கராஜுக்கும், நடிகை ஜெயபாலாவுக்கும் விடுதிகளின் சார்பில் வரவேற்பிதழ்கள் அச்சிடப்பட்டுப் படித்துக் கொடுக்கப்படுமாம்! இதுதான் நான் கேள்விப்பட்டது'' என்றான் ஒரு மாணவன்.

''இதன் அமைப்பாளர்கள் அத்தனை பேருமே சரியான பஃபூன்கள்! நாளைக்குப் போய்ப் பார்ப்போம். இன்னும் நிறையக் கேலிக் கூத்துக்கள் இருக்கும்'' என்று பாண்டியன் சொன்னபோது உடன் இருந்த மாணவர்கள் சிலர் அதை ஆமோதித்தனர். வேறு சிலர் ''இதெல்லாம் உன் கற்பனை! ஒன்றுமே நடக்காது! எப்போதும் நடக்கிற சடங்கு இது. இப்போதும் அப்படி ஒரு சடங்காகவே இது நடந்து முடிந்து விடும். அவ்வளவுதான்'' என்று அவன் கூறியதை மறுத்தார்கள்.

''நாளை மாலை வரையில் பொறுத்திருங்கள்! யார் சொல்வது சரி என்பது தானே தெரிகிறது'' என்று குறும்புத்தனமாக நகைத்தபடி சவால் விட்டான் பாண்டியன். அவன் கூறியது மறு நாள் மாலை பலித்தது. விடுதி நாள் விழாவின் தேநீர் விருந்தில் வருத்தப்படத்தக்க பல கேலிக் கூத்துக்கள் இருந்தன. விருந்து மேஜைகளில் உண்டிப் பட்டியல் (மெனு) 'தமிழ் வாழ்க!' என்ற தொடக்கத்துடன் இருந்தது. உணவு வகைகளில் 'தமிழ் வாழ்க' என்பதும் ஒன்றோ என்று அதைத் தவறாகப் புரிந்து கொண்டு



எண்ணிய சில மாணவர்கள் பரிமாறத் தொடங்கிய சர்வர்களிடம், ''இந் தாப்பா! முதலில் ஒரு 'தமிழ் வாழ்க' கொண்டு வா. வரிசைப்படி அதுதான் முதல் அயிட்டம். மறந்து விடாதே'' என்று வம்பு செய்தார்கள்.

தீஞ்சுவைத் துண்டம் (கேக்)
வருவள் (சிப்ஸ்)
உருள் மோதகம் (போண்டா)
கலவை (மிக்ஸ்சர்)
தேநீர் (டீ)
தாம்பூலச் சுருட்டு (பீடா)

என்று உணவுப் பட்டியல் (மெனு) அச்சிடப்பட்டுத் தரப்பட்டிருந்தது. அதில் 'வருவல்' என்பதை 'வருவள்' என்று பிழையாக அச்சிட்டு விட்டதால், ''வருபவள் யார்? அவள் யாரானாலும் வரட்டும். வரவேற்போம்'' என்று 'மெனு கார்டை'க் கையில் தூக்கிக் கொண்டு கூப்பாடு போட்டார்கள் பல மாணவர்கள். விருந்தில் வழங்கப் பட்ட கேக்கின் மேற்புறம் ஒரு கட்சியின் சின்னத்தைப் போல் ஒருபுறம் ஒரு நிற மும் மறு பாதி வேறொரு நிறமுமாக இரு வண்ணத்தில் இருக்கவே மாணவர் களிடையே சலசலப்பு மூண்டது. சாக் லேட் கருப்பும் மறுபாதி 'செர்ரி' நிறத் திலும் அந்தக் கேக்குகள் இருந்தன. கோபத்தில் சில கேக்குகள் மேடையை நோக்கிப் பறந்தன. உடனே கேக்குகள் வழங்குவது நிறுத்தப்பட்டு மற்றவை களை வழங்கத் தொடங்கியதன் மூலம் நிலைமை சமாளிக்கப்பட்டது.

''இந்தாப்பா! 'தீஞ்சுவைத் துண் டத்'துக்குப் பதில் இன்னொரு 'கலவை' கொடு!'' என்று சர்வரிடம் மேலும் ஒரு மிக்ஸ்சர் பொட்டலத்தைக் கேட்டு ஒரு மாணவன் எழுப்பிய குரலைத் தொடர்ந்து சிரிப்பொலிகள் வெடித் தன. மேடையில் வந்து அமர்ந்திருந்த நடிகர் மணியும், நடிகையும் பயத் தோடு உட்கார்ந்திருப்பது போலத் தோன்றியது. அவர்கள் நிலை பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது.

நடிகரை வரவேற்று முடித்த பின், நடிகையை வரவேற்று வரவேற்புரை படித்த மாணவன் வரவேற்பிதழில் அச்சிட்டிருந்தபடியே, ''நீங்கள் படத் துக்குப் படம் நன்கு நடித்து வளர்ச்சி



பெற்று வருகிறீர்கள்'' என்று படித்தவுடன் சிரிப்பொலிகள் அடங்க நெடு நேரமாயிற்று. படுபாவி அச்சகத்தில் வருவலை வருவளாக்கியது போல் 'நன்கு நடித்து' என்பதை 'நன்கு தடித்து' என்று அச்சிட்டுத் தொலைத்திருந்தான். 'தடித்து' என்று பிழையாகப் படித்ததை ஒட்டி எழுந்த சிரிப்போடு சிரிப்பாக, 'கரெக்ட்' என்றும், 'வெல்ஸெட்' என்றும் கூட்டத்திலிருந்து குரல்கள் ஒலித்தன. சிறைப்பட்டு விட்டது போல் கூனிக் குறுகித் தலை குனிந்து அமர்ந்திருந்தாள் அந்த நடிகை. வரவேற்புரை முடிந்ததும் நடிகர் பத்து நிமிஷங்கள் சுருக்கமாகப் பட்டும் படாமலும் பேசி முடித்துவிட்டார். நடிகை மழலைத் தமிழில் பயந்து கொண்டே எண்ணி மூன்று வாக்கியங்கள் பேசியதும் விழா முடிந்தது.

'' இதுபோல் அருமையான 'வெறைட்டி எண்டர்டெயின்மெண்ட்' நம்ம யூனிவர்ஸிடியில் சமீப காலத்திலே நடந்தது கிடையாது! என்ன நகைச்சுவை! எத்தனை சிரிக்கவைக்கும் நிகழ்ச்சிகள்?'' என்று விடுதி விழா முடிந்து போகும்போது சக மாணவர்கள் பாண்டியனிடம் அந்த விழாவைப் பற்றிப் பேசிக் கொண்டு போனார்கள். அப்போது ஒரு மாணவன் கேட்டான்: ''இவர்கள் எதைச் செய்தாலும் ஏன் இப்படிக் கேலிக்கூத்தாக முடிகிறது? எதனால் இவர்கள் இப்படிக் கோட்டை விடுகிறார்கள்?''

'' சிரத்தை இல்லாமல் வெறும் போட்டி மனப்பான்மையும் வெறியும் மட்டுமே இருந்தால் இப்படித்தான் ஆகும்! சிரத்தைதான் செயலுக்கு வித்து.''

''நல்ல நகைச்சுவைதான் இது.''

''தவறு! இது நகைச்சுவையும் இல்லை- கேலிக் கூத்துக்கும் நகைச்சுவைக்கும் எங்கோ ஒரு மயிரிழை வேறுபாடு எல்லைக்கோடாக இருக்கிறது. நம்மைச் சிரிக்க வைப்பதெல்லாம் நகைச்சுவை அல்ல. நல்ல நகைச் சுவை என்பது சிரிப்பில் தொடங்குகிறது. ஆனால் அது சிரிப்போடு முடிவதில்லை. ஆழமான ஒரு சிந்தனையில் போய் முடிகிறது. முடிய வேண்டும். தடுமாற்றங்கள் எல்லாமே நகைச்சுவை ஆகிவிடுமானால் அப்புறம் நகைச்சுவைக்கு ஒரு மரியாதை இருக்காது'' என்று பாண்டியன் தன் கருத்தை வெளியிட்ட பின்புதான் அவன் உள்ளூற எவ்வளவு மனம் வருந்திப் பேசுகிறான் என்பது சக மாணவர்களுக்குப் புரிந்தது.

அதற்குப் பின் ஒரு வாரம் வரை மாணவர்களுக்கு நடுவே இந்த விடுதி விழா நிகழ்ச்சிகள் சிரிக்கச் சிரிக்க விமர்சனம் ஆகிக் கொண்டிருந்தன. அந்த வார இறுதியில் சனிக்கிழமை பிற்பகல் அண்ணாச்சி கடையில் அமர்ந்து தற்செயலாகப் பேசிக் கொண்டிருந்த போது,

.'' மழைக் காலம் ஏறக் குறைய முடிஞ்சு போச்சு. மலைகளில் எல்லாம் பசுமை கொஞ்சுகிறது. அருவிகளில் தெளிவாகவும் ஒரு சீராகவும் தண்ணீர் விழுகிறது. ஓடைகள் கலகலவென்று சிரிக்கின்றன. கரடியாறு நீர்த்தேக்கம் வரை ஒரு 'பிக்னிக்' போய் வரலாமா?'' என்று பாண்டியனிடம் கேட்டான் பொன்னையா.

''போவதானால் நாளைக்கே போகலாம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்றால் முடியாது. சைக்கிள் விடத் தெரிந்தவர்களாக நாற்பது ஐம்பது பேர் மட்டும் போவோம். அதிகக் கூட்டம் வேண்டாம். காலையில் எட்டு மணிக்குப் புறப்படுவோம். இங்கேயே நம்ம 'சங்கர் பவனில்' சொல்லி நல்ல இட்டிலி, டிபன் எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு போயிடலாம். மாலையில் அஞ்சு அஞ்சரைக்குள் திரும்பிடறதாயிருந்தாத்தான் மாணவிகளும் வருவாங்க...'' என்றான் பாண்டியன். தம் கடையில் பத்து சைக்கிள்கள் மட்டுமே இருப்பதால் அதிகப்படி சைக்கிள்களுக்கு வேறு கடைகளில் சொல்லி ஏற்பாடு செய்து தருவதாக அண்ணாச்சி கூறினார். உடனே கண்ணுக்கினியாளுக்கு ஃபோன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. சைக்கிள் விடத் தெரிந்த மாணவிகள் மட்டுமே வரலாம் என்ற நிபந்தனையையும் கூறினான் பாண்டியன். சைக்கிள் வாடகை உட்படத் தலைக்கு ஐந்து ரூபாய் செலவாகும் என்ற விவரத்தை அவன் கூறியபோது, ''தலைக்கு மட்டும் அஞ்சு ரூபாயின்னா கைகால் உடம்புக்கு எவ்வளவு ஆகுமோ? நீங்க சொல்றதைக் கேட்டா பயமாயிருக்கே?'' என்று கேலியில் இறங்கினான் அவள்.

''உன்னோட கேலி பேச இப்போ எனக்கு நேரமில்லே. வர்ரதாயிருந்தால் உடனே சொல்லு...''

''அது சரி! நான்தான் தீரப்படாதேன்னு நீங்க கூப்பிடற இடத்துக்கெல்லாம் வந்தாகணும். மத்தவங்களைக் கேட்காம எப்படிச் சொல்ல முடியும்?'' என்றாள் கண்ணுக்கினியாள்.

''ஏன் முடியாது? அந்த மத்தவங்களுக்கும் ஒவ்வொருத்திக்கு ஒரு தீரப்படாதவன் இருப்பான். உனக்கு வேணும்னா அது தெரியாம இருக்கும்!''



விஜயா பாங்கின் தலைவர் திரு சுந்தரராம் ஷெட்டியின் புதல்வி செல்வி ஊர்மிளா வுக்கும், திரு குபேலூர் ஷங்கர் ஷெட்டி யின் புதல்வன் டாக்டர் தாராநாத் ஷெட்டி M.D., F. R. C. P. (C) (PED) F. R. C. P. (C) (NEUROL)க்கும் திருமணம் சென்ற டிசம்பர் 7ம் தேதி யன்று மங்களூரில் மிக விமரிசையாக நடைபெற்றது. மணமகன் அமெரிக்காவிலுள்ள ஹார்வர்டு கலா சாலையில் நரம்பு மருத்துவத்தில் விசேஷ பயிற்சி பெற்றவர். திருமணத்துக்கு பிரமுகர்கள் பலர் வந்திருந்து மண மக்களை ஆசீர்வதித்தனர்.

வாழ்க மணமக்கள்

உறுதியான கட்டடங்கள்: கிராமங்களில் - 2

''ஏதேது? ரொம்பக் குஷியாப் பேசருப்லே இருக்கே?''

''ஆமாம்! அது யாரோட பேசறேன் என்பதைப் பொறுத்து வருகிற குஷி.''

''அப்பிடியா?..... நான் விசாரிக்கிறேன். மறுபடியும் ஃபோன் பண்ணிச் சொல்றேன். வார்டனையும் கேட்டுக்கணும்.''

''கேட்டு முடிவு பண்ணினதும் மறுபடியும் என்னைக் கூப்பிட்டுச் சொல்லு. அதுவரை இங்கே ஃபோனடியிலேயே இருக்கேன்'' என்று ஃபோனை வைத்துவிட்டு அண்ணாச்சி கடைக்கு எதிர்ப்புறமிருந்த மருந்துக் கடையில் காத்திருந்தான் பாண்டியன்.

இருபது நிமிஷங்களுக்குப் பிறகு மறுபடியும் அவள் ஃபோன் வந்தது. தானும் வேறு சில மாணவிகளும் வருவதாகத் தெரிவித்தாள் அவள். காலை ஏழே முக்கால் மணிக்கே அண்ணாச்சி கடை வாசலுக்கு வந்துவிட வேண்டும் என்று நிபந்தனை போட்டான் அவன். அவள் ஒப்புக்கொண்டு ஃபோனை வைத்தாள். அவ்வளோடு பேசிவிட்டு அவன் அண்ணாச்சி கடைக்குப் போவதற்குள் கலைப் பிரிவில் இருபது பேர், கீழ்த்திசைப் பட்டப் பிரிவில் பத்துப் பேர், பொறியியலிலிருந்து மூவர், வேளாண்மைக் ,கல்லூரியிலிருந்து ஐந்து பேர், மருத்துவக் கல்லூரியிலிருந்து நான்கு பேர் என்பதாக ஒரு பட்டியலோடு தயாராக இருந்தான் பொன்னையா. நாலைந்து கடைகளில் சொல்லி எல்லாருக்குமாகச் சைக்கிள் ஏற்பாடு செய்யப் போனார் அண்ணாச்சி.

**அ**டுத்த நாள் காலை ஏழரை மணிக்குப் பனி விலகுவதற்குள்ளேயே அண்ணாச்சி கடை முகப்பு கோலாகலமாக இருந்தது. பல நிறங்களில் ஸ்வெட்டர்களும் கம்பளிச் சட்டைகளும் அணிந்து, காமிராக்கள், டிரான்ஸிஸ்டர்கள், டைனகுலர்கள், மௌத் ஆர்கன், கிட்டார், தபேலா, என்று பல பொருள்கள் சகிதமாகப் பட்டுப் பூச்சி மொய்த்தாற் போல் மாணவ மாணவிகள் கூட்டம் கூடியிருந்தது. புஸு புஸுவென்று முகத்திலும் காதோரங்களிலும் கலைந்த கூந்தலோடும், தூங்கி எழுந்த அழகுடனும் மாணவிகள் மிக வனப்பாகக் காட்சி யளித்தனர். கண்ணுக்கினியாள் கிளிப் பச்சை நிறத்தில் ஒரு முழுக்கை ஸ்வெட்டர் அணிந்திருந்தாள். பாண்டியன் அவளைக் கேலி செய்தான்.

''ஏது! பசுமைப் புரட்சி செய்கிறாற் போலிருக்கிறதே?''

''நாம் திடீரென்று 'பிக்னிக்' கிளம்புவதே ஒரு புரட்சிதான்.''

சரியாக எட்டு மணிக்கு அவர்கள் புறப்பட்டார்கள். சங்கர் பவனில் வாங்கிய டிபன் பொட்டலங்களை ஈவு வைத்து அவரவர் பொட்டலங்களை அவரவரே சுமந்து கொண்டு வரச் செய்து விட்டார்கள். மலைச் சாலையில் பசுமை மணத்தை நுகர்ந்தபடி பச்சை நிறத்திலும், பொன்னிறத்திலும், தாமிர நிறத்திலுமாகத் தளிர்த்திருந்த வர்ணக் கலவையான மலைகளின் அடர்த்தியினிடையே சைக்கிள்களில் அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறினார்கள்.

'ஹேரண்ட்பார்' இரண்டையும் விட்டு விட்டு மௌத் ஆர்கனை எடுத்து வாசிக்கத் தொடங்கிய ஒரு மாணவனைச் சுட்டிக் காட்டி, ''அடேடே! நம் பழநி எப்போது இவ்வளவு தைரியமாகச் சைக்கிள் விடக் கற்றுக் கொண்டான்?'' என்று பாண்டியன் கேட்டபோது,

''பழநியின் தைரியம் அதோ அவனது பக்கத்தில் மற்றொரு சைக்கிளில் கூடவே வருகிறது பார்'' என்று பழனியின் அருகே சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒரு மாணவியைச் சுட்டிக் காட்டிப் பொன்னையா கூறியவுடன் சிரிப்பொலிகள் மலைச்சாரலில் ஒருசேர ஒலித்தன. திடீரென்று கண்ணுக்கினியாளும், பாண்டியனும் சேர்ந்து கீழ்த்திசைப் பட்டப் பிரிவு மாணவர்களுக்கு ஒரு போட்டி ,வைத்தார்கள்.

''மிஸ்டர் நடனசுந்தரம்! புலவர் வகுப்புத் தேர்வில் உங்களுக்கு 'வெர்ஸிஃபிகேஷன்' (செய்யுளியற்றல்) என்று ஒரு தேர்வு உண்டு. இப்போது எங்களுக்காக நீங்கள் உடனே ஒரு செய்யுள் இயற்ற வேண்டும். கடைசி வரியை இப்போது நான் சொல்லி விடுவேன். இதோ



## சத்திய வெள்ளம்

கேலிக் கூத்துக்கும் நகைச்சுவைக்கும் எங்கோ ஒரு மயிரிழை வேறுபாடு எல்லைக் கோடாக இருக்கிறது. நம்மைச் சிரிக்கவைப்பதெல்லாம் நகைச்சுவை அல்ல. நல்ல நகைச்சுவை என்பது சிரிப்பில் தொடங்குகிறது. ஆனால் அது சிரிப்போடோ, சிரிப்புடனே மட்டுமே முடிந்து போய் விடுவது இல்லை.

நமக்கு எதிரே, 'கரடியாறு நீர்த்தேக்கம் ஆறு கிலோ மீட்டர்' என்ற கல் தெரிகிறது. அடுத்த கல்லாகிய ஐந்தாவதற்குரிய கிலோமீட்டர் வருவதற்குள், 'இட்டிலிக்(கு) உண்டோ இணை' என்ற கடைசி வரியைப் பூர்த்தி செய்து யார் முதலில் வெண்பா இயற்றிச் சொல்கிறார்களோ அவர்களுக்குப் பத்து ரூபாய் பந்தயம். யாருமே இயற்ற முடியாமற் போய் விட்டால் — புலவர் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் பத்துப் பேரும் ஆளுக்கு ஒரு ரூபாய் போட்டு என்னிடம் தந்துவிடவேண்டும். ஒருவரோ இருவரோ இயற்றி விட்டால் நாங்கள் தருகிற பத்து ரூபாயை வாங்கி நீங்கள் பங்கிட்டுக் கொள்ளலாம்! எங்கே பார்க்கலாம்? ரெடி..ஒன்...டு...த்ரீ...'' என்றான் பாண்டியன். அடுத்த மூன்றாவது நிமிஷமே 'கோதை மார்பன்' என்ற புலவர் முடிநிலை வகுப்பு மாணவர்,

'' மங்காப் புகழ்படைத்த மல்லிகைப் பந்தலினிற்
சங்கர் பவன் தரும் சாம்பாரும் — வெங்காயச்
சட்டினியும் இங்கிருக்க ஏழுலகில் தேடினும்
இட்டிலிக் குண்டோ இணை ''

என்று விரைந்து பாடிவிட்டார். அவர் பாடி நான்கு நிமிஷங்களுக்குப் பின்பே,

'' வட்ட நிலாப்போல் வாகான இட்டிலியும்
தொட்டுக்கொள் தொட்டுக்கொள்
என்றழைக்கும் — இட்டமுள்ள
சட்டினியும் சேர்ந்திருக்கும் இந்நிலையில்
இவ்வுலகில்
இட்டிலிக் குண்டோ இணை ''

என்று நடனசுந்தரமும் மெல்ல மெல்ல ஒரு வெண்பாவைப் பாடினார். அடுத்த எட்டுப் புலவர் மாணவர்களும் பாடுவதற்குள் ஐந்தாவது கிலோ மீட்டர் மைல் கல் வந்து விட்டது. அந்த எட்டுப் பேரிடமும் தலைக்கு ஒரு ரூபாய் வசூல் செய்து தானும் கண்ணுக்கினியாளும் மற்றவர்களும் சில்லறையாக இரண்டு ரூபாய் சேர்த்துப் பத்து ரூபாயை இரண்டு ஐந்தாகப் பிரித்துக் கோதை மார்பனிடமும் நடனசுந்தரத்திடமும் கொடுத்தான் பாண்டியன். ''ஜாக்கிரதை! பிக்னிக் முடிந்து திரும்புவதற்குள் வேறு ஏதாவது ஒரு பந்தயத்தில் இதை உங்களிடமிருந்து பறித்து விடுவோம். அதுவரை இந்த ரூபாய் நோட்டுக்களைப் பத்திரமாக வைத்திருக்கிற சந்தோஷம் மட்டுமாவது உங்களுக்குக் கிடைக்கட்டும்'' என்றாள் கண்ணுக்கினியாள்.

''சரியாகச் சொல்கிறாய்! ரூபாயைச் செலவழிப்பது சந்தோஷமா? கன்னிப் பெண் கன்னியாகவே மூப்பது போல் வைத்திருப்பது சந்தோஷமா? என்பது புரியாமல்தான் பலர் இந்த நாட்டில் இன்று திகைக்கிறார்கள்'' என்றான் பாண்டியன்.

அவன் கூறிய கன்னிப் பெண் உவமைக்காக அவனைப் பொய்க் கோபத்தோடு முறைப்பது போல் பார்த்தாள் அவள்.

'' 'பிக்னிக்' என்பது கோபங்களை விலக்கிவிட வேண்டிய காரியம்.''

''குறும்புகளையும் சேர்த்துக் கொள்ளுங்களேன். அதற்கு மட்டும் விதி விலக்கா, என்ன?''

'' 'பிக்னிக்'கின் விதியே குறும்பு தானே? அதை விலக்கிவிட்டால் அப்புறம் எதற்கு 'பிக்னிக்?'' என்று பாண்டியன் பதிலுக்குக் கேட்டதும், ''ஆம்! ஆம்! குறும்பு வாழ்க! நீடூழி வாழ்க!'' என்று மாணவர்களின் இணைந்த குரல்கள் முழங்கின. (தொடரும்)

கால்பந்தாட்டம் விளையாடும்போது அணியும் காலுறையைப் பாதி ஆட்டம் வரை ஒரு 'ஸெட்டும்' மறுபாதி ஆட்டம் வரை வேறொரு 'ஸெட்டு'மாக மாற்றி மாற்றி உபயோகிப்பார் ஓர் இளைஞர்.

''ஏன் அப்படிச் செய்கிறாய்?'' என்று மாணவ நண்பர்கள் கேட்டபோது அவர் சொன்ன பதில் :

''அதுவா ?... ஒரு ஸெட் என் அன்பான அம்மா வாங்கித் தந்தது. மறு ஸெட் என் அன்பான அத்தை வாங்கித் தந்தது. இதில் எதையாவது நான் உபயோகிக்காதிருந்தால் அவர்கள் மனம் புண்படாதா ?'' — இப்படிக் கூறியவர்தான் பின்னால் சாரணர் படையைத் தோற்றுவித்துப் புகழ் பெற்ற லார்ட் பேடன் பவல். - ''லயா''





''முன்புபோல அமெரிக்காவில் இப்பொழுது சிதாருக்கு மதிப்பில்லை. தபலா இப்பொழுது டிபன் சாப்பிட சிறிய மேஜையாகப் பயன்படுத்தப்படுகிறது'' என்கிறார் ரவிசங்கர்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா — பாபு

# ராஜாஜியின் ஜெயில் டைரி

**1922 ஜனவரி, 19உ**

**வி**யாழக்கிழமை. ஆஸ்பத்திரி உதவி டாக்டர் சுவருக்கு அப்புறம் நின்று கொண்டு என்னுடைய தேக சுகத்தைப் பற்றி விசாரித்தார். புதிதாகக் கட்டிகள் புறப்படவில்லை என்று கூறினேன். அதைக் கேட்டதும் எனக்குக் குத்தியிருந்த மருந்தைத் தாமே கண்டுபிடித்தது போலப் பேச ஆரம்பித்தார். இவ்வித மருந்துகளைக் கண்டுபிடித்த பாஸ்டியர் என்னும் விஞ்ஞான சிகாமணி கூட இவ்வளவு பிரமாதமாகத் தம்மைப் பற்றி எண்ணியிருக்க மாட்டார்.

தக்காளிப் பழத்தை வேக வைக்காமல் உண்ண விரும்புவதாகக் கூறினேன். அதைக் கேட்டதும், ''அதைவிட ரொட்டியே மலச்சிக்கலுக்கு நல்ல மருந்து'' என்றார்.

''எதையும் இப்பொழுது கேட்க வேண்டாம். மேலும் தக்காளிப் பழம் ஆஸ்துமாவை அதிகப்படுத்தவே செய்யும்'' என்று யோசனை கூற ஆரம்பித்தார்., தக்காளிப் பழம் கேட்க வேண்டாம் என்று கூறியதற்கு அது காரணம் அல்ல. சிறைத் தலைமை அதிகாரியிடம் அவருக்குள்ள அச்சம்தான் காரணம் என்று தோன்றுகிறது.

அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டாத வேலூர்ச் சிறை கெஜட் பத்திரிகை கீழ்க்கண்ட செய்திகளைக் கூறுகிறது. அவைகளைப் பற்றி எழுதும் அபிப்பிராயங்கள் எல்லாம் என்னுடையவை:

அயர்லாந்து தேசத்தில் உடன்படிக்கையை ஒப்புக் கொள்ள வேண்டாமென்றே டி வாலரா தம்முடைய ஜனங்களிடம் கேட்டுக் கொள்கிறாராம்.

பரத்பூரில் மாஜிஸ்ட்டிரேட் அரசியல் கைதிகளில் சிலருக்குக் கசையடி கொடுக்கும்படி தண்டனை விதித்தாராம். அதனால் அங்கே அதிக பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதாம். அத்தகைய மாஜிஸ்ட்ரேட்டுக்கள்தாம் நம்முடைய உண்மையான நண்பர்கள் ஆவார்கள்.

கர்னூலில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம். சேலமும் சும்மாயிருக்கவில்லை. ஆத்தூரில் ஐந்து பேர் ஒத்துழையாமையில் ஈடுபட்டனர் என்பதால் நீதி மன்றத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்களாம். அனந்தாச்சாரியாரை விசாரணைச் சிறையில் வைத்திருக்கிறார்களாம். வாசுதேவய்யாவுக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையாம். திருப்பத்தூரில் வகாப் சாகேப்புக்கு ஆறு மாதக் கடுங்காவல், ராமசாமி அய்யருக்கு ஆறு மாத வெறுங் காவல்.

ஸ்ரீநிவாசன் என்று ஒருவர் போலீஸிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டதாகக் கூறுகிறார்கள். அவர் யாரோ தெரியவில்லை. தென்காசியிலும் திருவள்ளூரிலும் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் ராஜிநாமாச் செய்திருப்பது நாட்டில் விழிப்பு ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றதே தவிர வேறு அதைப் பற்றிப் பிரமாதமாக எண்ணுவதற்கு ஒன்றுமில்லை.

ஜனவரி மாதம் மத்தி வரையில் கல்கத்தாவில் 3500 தொண்டர்கள் சிறையில் இருந்தார்களாம். எகிப்து தேசமும் நம்முடைய' ஒத்துழையாமை முறையை அனுஷ்டிப்பதாக ஹக்கீம் அஜ்மல்கான் தமது காங்கிரஸ் தலைமை உரையில் கூறுகின்றார். பண்டித மாளவியாவின் குமாரர் கோவிந்தருக்கும் அவருடைய மைத்துனர் கிருஷ்ணகாந்தருக்கும் பதினெட்டு மாதக் கடுங்காவல் விதித்திருந்ததை இப்பொழுது ஆறு மாத வெறுங்காவலாகக் குறைத்திருக்கிறார்களாம். ஷியாம்சுந்தர சக்கர



வர்த்தியும் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று அறிகிறேன்.

சென்னையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாம். அரை டஜன் பேர் யமலோகம் சென்றார்கள். எல்லாம் போலீஸ் அதிகாரியின் கால் மீது யாரோ சிலர் கற்களை எறிந்ததற்காகத்தானாம்.

என்னுடைய தேக சுகத்தைப் பற்றியும் எனக்குக் கொடுக்கும் உணவைப் பற்றியும் வெளியே கிளர்ச்சி நடைபெறுவதாக நான் சந்தேகித்தது உண்மை என்றே தெரிகிறது. செய்ய வேண்டியது யாது என்பதை அறியாமல் இருக்கிறார்களே என்று வருத்தமாயிருக்கிறது. நான் இங்கே உணவைப் பற்றியா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்? இயக்கம் செழித்து ஓங்க வேண்டும் என்றல்லவோ கவலையாயிருக்கிறேன்.

என்னுடைய பசியும் தாகமும் ஒத்துழையாமைக் கைதிகள் இடைவிடாது இங்கு வந்து கொண்டிருக்க வேண்டும் என்பதுதான். ஏதோ நாங்கள் சிலர், துரதிருஷ்டசாலிகள், இங்கு வந்தால் போதும் என்பது போலவும், அதற்காக




சிம்லா மாநாடு முடிந்து ஊர் திரும்பும்போது தம்மைக் கவனித்துக் கொண்டவர்களுக்கு 'டிப்ஸாக' (TIPS) பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டுப் போனார் பூட்டோ! அந்தப் பணம் இன்னும் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறதாம்! 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

- மாலி


எங்களுக்கு எத்தனை வசதி செய்ய முடியுமோ, அத்தனை வசதிகள் செய்து உதவ வேண்டும் என்பதாகவும் எண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது. அதனால்தான் எங்கள் சிறை வாழ்க்கையில் அதிக சிரத்தை 'கொண்டு எங்களுடைய உணவைப் பற்றியும் சுகத்தைப் பற்றியும், இதர வசதிகளைப் பற்றியும் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சிறை வசதிகளைப் பற்றிச் சிறிதளவும் சிந்தியாமல்' எந்த லட்சியத்துக்காக இங்கே வந்திருக்கிறோமோ, அந்த லட்சியத்தை மட்டுமே கண்ணும் கருத்துமாய்க் கவனிப்பார்களானால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அப்படிச் செய்வார்களானால் அடக்குமுறையைப் பெரிய தீமையாக எண்ணவும், அதைத் தடுப்பதற்காகச் சர்வ கட்சி மகாநாடுகளைக் கூட்டவும் விரும்ப மாட்டார்கள். அதற்கு மாறாக அரசாங்கம் நடத்தும் போரை விரும்பி வரவேற்கவே செய்வார்கள்.

ஐயோ பாவம், சாஸ்திரியாருக்கு வயிற்றுழற்சி வியாதி உண்டாயிருக்கிறது. ஆஸ்பத்திரிக்குப் போனால் அங்கே வெறும் கஞ்சி நீர் மட்டுமே கொடுப்பார்கள். வேறு எதுவும் கொடுக்கச் சின்ன டாக்டருக்கு அதிகாரம் கிடையாது. பாலோ, மோரோ கொடுக்க வேண்டுமானால் சிறை அதிகாரியினுடைய அனுமதி தேவையாகும்.

நான் குளிக்கப் போனபொழுது கைதி ஒருவர், ''ஐயோ! இந்தக் குழம்பைச் சாப்பிட முடியவில்லையே? இதில் உப்புமில்லை, காரமுமில்லை. என்னவோ கழுநீரை ஊற்றிக் காய்ச்சியிருக்கிறார்கள், அவர்களுக்குச் சம்பளம் போதாதா? எங்கள் சாப்பாட்டை ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்? கடவுள் எப்போது இந்த அநியாயங்களைக் கண்களைத் திறந்து பார்க்கப் போகிறாரோ, தெரியவில்லை'' என்று முணுகுவதைக் கேட்டேன்.

ஆனால் சுயராஜ்யம் வந்தபிறகும்கூட இதுபோன்ற அநியாயம் நடக்கும் என்று எண்ணுகிறேன். இப்படி அநியாயம் செய்யும் இந்த அதிகாரிகளும் இந்தியர்கள்தானே! இவர்களுடைய மனத்தை எந்தவிதத்தில் திருத்த முடியுமோ, கடவுளுக்குத்தான் தெரியும்.

வெளியே ரயில் சத்தம் கேட்கும்போதெல்லாம் என்ன என்னவோ எண்ணங்கள் என்னுடைய மனத்தில் எழுகின்றன. இங்கே உங்களுக்கு என்ன வேலை என்று நான் அவ்வெண்ணங்களை வெளியே பிடித்துத் தள்ளி வருகிறேன். ஆனால் இன்று மாலை நான் ஜபம் செய்து கொண்டிருந்த சமயத்தில் — வெளியே உள்ள கிராமத்தில், என்ன விசேஷமோ தெரியாது — இனிமையாக நாதஸ்வர இசை வந்து கொண்டிருந்தது. அப்பொழுது என் மனத்தில் உதித்த இன்ப நினைவுகளை என்னால் அப்புறப்படுத்த முடியவில்லை. இந்த வாத்தியத்தின் இசையானது என்னைப் போலவே அனைவருக்கும் இன்ப நினைவுகளைச் சுமந்து வரும் எழில் வாகனமேயாகும். அந்த இசையைக் கேட்டதும் உள்ளத்தில் இளமை உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பிறக்கின்றன. இந்தக் கனவு லோகத்தில் சஞ்சரிக்க எண்ணியதும் என் கண்களில் பெருகிய நீரை என்னால் தடுக்க முடியவில்லை. கடவுள் எனக்குக் குறைவு வைக்கவில்லை. என்னுடைய மனைவி, மக்கள், நண்பர், உறவினர் எல்லோரிடமிருந்தும் நான் எல்லையற்ற அன்பையே நுகர்ந்துள்ளேன். ஆயினும் யார்தான் இது போதும், இனி வேண்டாம் என்று எண்ணிவிட முடியும்? இந்த எண்ணங்கள் வந்து என் மனத்தைத் தளர்ச்சியுறச் செய்கின்றன. என்னுடைய மனோபலத்தையெல்லாம் இப்படிச் சிதற விடலாகாது. அவ்வளவையும் போருக்காகச் சேமித்து வைக்க வேண்டும். எண்ணங்களாகிய இனிமையான பூங்காவனம் கண்ணீரைத் தருவிக்கிறது. அதனால் அந்த மலர் வனத்துக்குள்ளே போக நான் என்னுடைய மனத்துக்கு இடம் தரக்கூடாது. நான் கடவுளிடம் வேண்டிக் கொள்வதெல்லாம், ''அவன் எங்கிருந்தாலும் அவன் எவ்விதத் துன்பத்துக்கும் துக்கத்துக்கும் ஆளாகாமல் இன்பமாக இருக்குமாறு அருளும். துன்பங்களைத் தைரியமாகத் தாங்கிக் கொள்ளவும் கடமைகளைச் சரிவரச் செய்யவும் எனக்கு ஆற்றலை அருளும்'' என்ற வரம்தான்.



# இலக்கிய மலர்கள்

ஸ்ரீ. ப. சோமு

## 10. இரண்டு வேடிக்கைக் கவிகள்

காளமேகப் புலவருடைய பாடல்களிலே சொல்லைக் கொண்டு விளையாடுகிற சிலேடைகளும், கேலியாகப் பாடுகிற வேடிக்கைகளும் ஏராளம். அத்தகைய பாடல்களிலே இரண்டை இப்போது பார்க்கலாம்.

கவி என்ற சொல்லுக்குக் கவிஞன் என்றும் குரங்கு என்றும் இரண்டு பொருள் உண்டு. இதை வைத்துக் கொண்டு சிரித்து விளையாடுகிறார் காளமேகம்.

திருமலைராயன் என்ற மன்னனுடைய சபைக்குக் காளமேகம் சென்றிருந்தபோது, அங்கே இருந்த அவைப் புலவர்களைப் பார்த்து, ''நீங்களெல்லாம் யார்?'' என்று கேட்டாராம். '' நாங்கள் கவிராயர்கள்!'' என்று சற்றுப் பெருமிதத்தோடுதானே புலவர்கள் சொன்னார்களாம். உடனே காளமேகத்தின் புலமைக் குறும்பு எழுந்து விளையாடுகிறது !

வால் எங்கே ? நீண்ட
வயிறு எங்கே ?

கவிராயர்கள், அதாவது அரசக் குரங்குகள் என்றால், உங்களுக்கு வால் இருக்க வேண்டுமே, நீண்ட வயிறு இருக்க வேண்டுமே, இவற்றை எங்கே காணோம் !

வாலெங்கே நீண்ட
வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த
கண்ணெங்கே – சாலப்
புவிராயர் போற்றும்
புலவீர்காள் ! நீவிர்
கவிராயர் என்றிருந்தக்
கால் !

[சால — மிகவும். புவிராயர் — புவிக்கு அரசராகிய திருமலைராயர். கவிராயர் — குரங்கு மன்னர்கள். நீவிர்—நீங்கள். இருந்தக் கால் — இருந்தீர்களேயானால்.]

கவிக்குள்ளே ஒரு கவி விளையாட்டை இப்படி விளையாடுகிறது காளமேகத்தின் கவித்துவம் ! இனி இன்னொரு நையாண்டியைப் பார்ப்போம். இது விகடராமன் வளர்த்த குதிரையைப் பற்றியது. அதனுடைய வேகம் எப்படித் தெரியுமா ?

முன்னே கடிவாளம்
மூன்றுபேர் தொட்டிழுக்க



குதிரைக்கு முன்னாலே போய் நின்று மூன்று பேர்கள் கடிவாளத்தைப் பிடித்து இழுக்க வேண்டுமாம் — தேரை வடம் பிடித்து இழுப்பது போல !

**பின்னே இருந்திரண்டு**
**பேர்தள்ள —**

பின்னால் இருந்து இரண்டு மனிதர்கள், அதிகம் இல்லை, இரண்டு பேர்கள் போதும், குதிரையைத் தள்ள வேண்டும் — புறப்படாத பேருந்துகளைத் தள்ளுவது போல ! அப்படிச் செய்தால்,

**— எந்நேரம்**
**வேதம்போம் வாயான்**
**விகடரா மன்குதிரை**

எப்போதும் பெரிய பெரிய தத்துவங்களையும் மறைகளையும் பேசிக் கொண்டிருக்கிற மேதாவியான விகடராமனுடைய குதிரை யானது, முன்னே கடிவாளத்தை மூன்று பேர்கள் பிடித்து இழுக்கவும், பின்னால் இருந்து இரண்டு பேர்கள் தள்ளவும் செய்தால்,

**மாதம்போம் காத**
**வழி !**

ஒரு மாசத்தில் ஒரு காத தூரம், அதாவது பத்து மைல் செல்லும் !

**முன்னே கடிவாளம்**
**மூன்றுபேர் தொட்டிழுக்கப்**
**பின்னே இருந்திரண்டு**
**பேர்தள்ள — எந்நேரம்**
**வேதம்போம் வாயான்**
**விகடரா மன்குதிரை**
**மாதம்போம் காத**
**வழி !**

பெரிய பெரிய ''ரேஸ்''களில், குதிரைப் பந்தயங்களிலே கொண்டு போய் விடவேண்டிய ஓர் அபூர்வப் பிறவி என்று சொல்ல வருவதுபோல், அந்தக் குதிரைக்கு முன்னும் பின்னும் ஏகப்பட்ட அடைமொழிகளைக் கொடுத்துத் தாங்கியவாறு பவனி ஏறி வருகிறது பாட்டு !

# அகாதெமிப் பரிசு

திரு ஜெயகாந்தன் அவர்கள் வாசகர்களின் மனப்போக்கை அநுசரித்து எழுதும் 'மாமூல்' எழுத்தாளரல்ல. அவர் எழுத்தில் இளைஞர் சமுதாயத்தை ஈர்க்கும் சக்தியும், அவர்களுக்கு விழிப்பூட்டி வழி காட்டும் ஆற்றலும் உண்டு; சாதாரணமான ஒரு கருத்தை வைத்துக்கொண்டு ஓர் அசாதாரணப் படைப்பை வாசகர்களுக்கு அளிக்கும் திறமையும் உண்டு.

அவரது ''சில நேரத்தில் சில மனிதர்கள்'' என்னும் நூலுக்கு சாகித்ய அகாதெமியின் பரிசு கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். நூலாசிரியரை வாழ்த்துகிறோம்.



திரு ஜெயகாந்தன்

ஒரு பேதைப் பெண், அவள் தாய், மாமன் ஆகிய குறைவான பாத்திரங்களை வைத்துக்கொண்டு நிறைவான கதையைப் படைத்து அலுப்புத் தட்டாமல் சுவையாகக் கூறியிருக்கிறார். மனித உள்ளங்களில் உள்ள ஆசாபாசங்களை — அழுக்குகளையும் கூடத்தான் — கூசாமல் வெளியிட்டு, சமூக நெறிகளின் ஊழல்களுக்குச் சவுக்கடி கொடுத்திருக்கிறார். விவாதத்துக்குரிய பல பிரச்னைகளை அநாயாசமாகத் தொட்டு அவற்றை இன்றைய வாழ்க்கையோடு பிணைத்துக் காட்டி, அப்பட்டமான உண்மைகளை நிலைநாட்ட முயன்று வெற்றியடைந்திருக்கிறார். சந்தர்ப்ப வசத்தினாலும், தன் பேதைமையினாலும் ஓர் ஆணின் இச்சைக்குப் பலியான இளம் பெண் கங்காவை ஒரு விரக்திப் பிரகிருதியாக மாற்றி அவளைக் கொண்டே தன் கதையைச் சொல்ல வைத்திருக்கும் பாணி பாராட்டுக்குரியது.

வாழ்க்கை அவ்வளவு வசதியாக நமக்குப் பிடித்தமாதிரி பிடித்த இடத்திலே போய் நின்று கொள்வதில்லை. யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள மறுப்பதனாலேயே அது இல்லை என ஆகிவிடாது. யதார்த்தத்தை, அதாவது ரியலிஸத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட நாவலுக்கு வரவேற்புகுறைந்தனுசாகத்தான் இருக்கும். ஒரு பாத்திரத்தின் மீது அர்த்தமற்ற வெறுப்போ, அல்லது அசட்டுத்தனமான அநுதாபமோ கொண்டு விடும் வாசகர்கள் எழுத்தின் மூலம் மனித வாழ்வைப் புரிந்துகொள்ள மறுத்து விடுகிறார்கள். இந்நாவலில் இக்கருத்தை வலியுறுத்தவே முயன்றிருக்கிறார் ஆசிரியர். இம் முயற்சி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.




# புதிய முச்செயல் புரியும் டெட்

புதிய டெட்—வெண்ணிறப் பவுடர்—அதிக வெண்மையான சலவைக்கு தரமுயர்ந்த வெண்மை தரும் சாதனம் கொண்டது.

புதிய டெட்—அதிக சலவைத் திறன் கொண்டது. மறைந்துள்ள அழுக்கைக்கூட முற்றிலும் அகற்றுகிறது; வண்ணத் துணிகளை அதிக பிரகாசமாக ஒளிவீசச் செய்கிறது.

புதிய டெட்—இதன் நுரை வளத்தில் மிருதுத்தன்மை தரும் தனிப்பட்ட சாதனம் உள்ளது. இதனால் உங்கள் துணிகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது; கைகளுக்கு மிருதுவானது!

புதிய சைஸ்கள் : டெட் 200, 400, 600, 800, 1000 கிராம் பெட்டிகளிலும், டெட் சாம்பின் பைகளிலும் கிடைக்கிறது.

**NEW!**
**TRIPLE ACTION**
*white* **det**
**WASHES WHITEST**

“சரோஜ்! இன்னும் ஒரு வாரம் எனக்கு டயம்' கொடேன்! அடுத்த வாரம் கண்டிப்பாக உன் வீட்டுக்கு வருகிறேன். உன் அப்பாவைச் சந்தித்துப் பேசுகிறேன். ப்ளீஸ்'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டான் சந்திரன்.

''உங்களுக்குக் கல்யாணம் செய்துகொள்ளும் ஆசையே இல்லையா?'' என்று சிணுங்கினாள் சரோஜா.

''ஐயையோ! எங்க பரம்பரையிலேயே யாரும் பிரம்மசாரியாகவோ பால சன்னியாசியாகவோ முக்தி அடைந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. நானாக ஒரு புதிய பாணியை வகுத்துக் கொண்டு போகவும் தயாரில்லை. ஐந்தாறு குழந்தைச் செல்வங்களின் ஏகோபித்த தாக்குதல்களையும் கூக்குரல்களையும் இப்போதே நான் இன்பக்



# மகனே நீ வாழ்க!

கோமதி ஸ்வாமிநாதன்

கற்பனை செய்து கொள்ள ஆரம்பித்திருக்கிறேன். பயப்படாதே!'' என்று சந்திரன் சிரித்துக் கொண்டே பேசினான்.

''ஆசையைப் பாரு, ஆசையை'' என்று அழகு காட்டிக் கொண்டே சரோஜா தன் கைப் பையைச் சுழற்ற ஆரம்பித்தாள். அப்படிச் சுழற்றினால் அவள் புறப்படத் தயார் என்று பொருள்.

அவள் புறப்பட்டுப் போய் வெகு நேரம் கழித்துத்தான் சந்திரன் தன் சிந்தனையிலிருந்து விடுபட்டான். சற்றுத் தள்ளி நிறுத்தப்பட்டிருந்த தன் ஸ்கூட்டரை நோக்கி அவன் நடந்தான்.

அவனுடைய திருமணம் இப்போது அவனுக்கே ஒரு பெரிய பிரச்னையாக உருவெடுத்திருந்தது. சரோஜா அவன் மனத்தை முற்றிலும் கவர்ந்து விட்டிருந்தது என்னவோ மறுக்க முடியாத உண்மை. ஆனால் நகரத்திலேயே சில பெரும் புள்ளிகளில் ஒருவராக விளங்கிய சரோஜாவின் தந்தை பாலகிருஷ்ணனின் மனத்தை எந்த அடிப்படையில் கவருவது என்ற அச்சம் அவன் மனத்தில் மேலோங்கி நின்றது. இத்தனைக்கும் சந்திரன் தனியார் நிறுவனம் ஒன்றில் மாதம் பிறந்ததும் தொள்ளாயிரத்து முப்பது ரூபாய் வாங்கும் இருபத்தி எட்டே வயதான உயர் ரகச் சிப்பந்தி. திறமைசாலி. எந்த விதமான கெட்ட சகவாசங்களும், பழக்கங்களும் கிடையாது. கணிசமான 'பாங்கு பாலன்ஸ்' உண்டு. கூடப் பிறந்தவர்கள் யாருமில்லை' வயதான பெற்றோர்கள் முந்நூறு மைல்களுக்கு அப்பால் ஏதோ குக்கிராமத்தில் இருந்தார்கள். சந்திரன் அவர்களைப் பார்த்துப் பல வருடங்கள் ஆகிவிட்டிருந்தது. அவன் ஒவ்வொரு முதல் தேதியும் சம்பளம் வாங்கியவுடன் அனுப்பும் நூறு ரூபாய் மணியார்டர்தான் அவன் சார்பில் அவர்களைப் பார்க்கும். மணியார்டர் கூப்பனில் 'நலம்' என்று குறிப்பிடும் ஒரு வழிப் பாதைக் குறிப்புடன் அவர்கள் செய்திப் பரிமாறல் நின்றிருந்தது.

சிறு வயதிலேயே கிராமத்தை விட்டுத் துணிவாக வெளியேறி எப்படி எப்படியோ கிடைத்த அரைகுறை உதவிகளையும் முழுத் திறமையையும் காட்டிப் படித்து வியக்கத் தகும் வகையில் உயர் மட்டத்தில் பட்டம் பெற்று அலைந்து திரிந்து வேலை தேடிக் கொண்ட கவனமெல்லாம் இப்போது, தான் சார்ந்திருக்கும் ஸ்தாபனத்தின் முன்னேற்றத்துக்கு எப்படி இன்னும் உழைப்பது என்பதுதான். ஸ்தாபனத்தில் அவனுக்கு மிக நல்ல பெயர். அடுத்த ஆண்டிலேயே அவன் சம்பளம் ஆயிரத்து முந்நூறு ஆகும் என்ற ஹேஷ்யமும் அங்கே நிலவியது.

நான்கைந்து மாதங்களுக்கு முன் நகரிலுள்ள சில பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள்

இணைந்து, தொழில் நிர்வாகம் பற்றி ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடாகி யிருந்தது. சந்திரனுக்கும் அந்தக் கருத்தரங்கில் அரை மணி நேரம் பேச வாய்ப்புக் கிட்டியது. அன்று பிரபல தொழிற் புள்ளியாகிய பாலகிருஷ்ணனும் தம் மகள் சரோஜாவுடன் வந்திருந்தார். சரோஜா ரசாயன பாடத்தில் பட்டம் பெற்றுத் தந்தையின் தோல் ஏற்றுமதி வியாபாரத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்திருந்தாள்.

சந்திரன் அன்று அற்புதமாகப் பேசினான். அதைத் தொடர்ந்து பாலகிருஷ்ணன் அவனிடம் சில கேள்விகளைக் கேட்டார். பணிவுடனும், பளிச்சென்றும் பதில்கள் அவனிடமிருந்து வந்தன. பாலகிருஷ்ணன் உள்ளத்தில் அவனைப் பற்றிய மதிப்பு உயர்ந்தது. நண்பர்களிடம் அவனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்.

சரோஜா அந்த மாதிரி விசாரணைகளில் ஈடுபடவில்லை. கருத்தரங்கு முடிந்ததும் பரபரப்புடன் அவனை அணுகிப் பாராட்டினாள். அதே நேரத்தில் அவள் மனமும் அவனை அணுகி விட்டது. பிறகு தந்தையின் பேச்சிலிருந்து அவனைப் பற்றிய விவரங்களையும் தெரிந்து கொண்டாள்.

அப்புறம் அவர்கள் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நிகழ்ச்சிகளில் சந்தித்துக் கொண்டார்கள். சரோஜா தன் மனத்தைத் திறந்து காண்பித்து விட்டாள்.

தன்னைப் பற்றி அவள் வெகு உயர்ந்த அபிப்பிராயத்தை வளர்த்துக் கொண்டு விட்டாள் என்று புரிந்து கொண்டான் சந்திரன். ஆனால் பாலகிருஷ்ணனின் அந்தஸ்தையும் மதிப்பையும் எட்டிப் பிடிக்கத் தன்னிடம் என்ன தகுதி இருக்கிறது என்று ஆலோசிக்க ஆரம்பித்தபோது அவனுக்குத் தயக்கமாக இருந்தது. ஏதோ ஒரு குக்கிராமத்தில் புரோகிதர் என்று சொல்லிக் கொண்டு, அந்தத் தொழிலை அணுகாமல் பிள்ளை அனுப்பும் ரூபாயைக் கொண்டு காலட்சேபம் நடத்தும் தகப்பனாரைக் கொண்டு வந்து இந்தப் பாலகிருஷ்ணனுக்குச் சமமாக எப்படி அமர்த்துவது என்ற அச்சம் தோன்றியது. இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கலாம் என்ற யோசனையினால்தான் சரோஜாவின் வேண்டுகோளை நிறைவேற்ற வாயிதா கேட்க ஆரம்பித்தான்.

மனத்தின் அடித்தளத்தில் எப்போதோ சிறு வயதில் தன் தந்தையினிடம் திணித்துக் கொண்டிருந்த வெறுப்பு உணர்ச்சியும் தன்னுடைய இப்போதைய தயக்கத்துக்குக் காரணம் என்று அவனுக்குத் தெரியும்.

சந்திரனின் தகப்பனார் கணபதிராமன் ஒரு சாதாரண 'செகண்டரி கிரேட் பள்ளி உபாத்தியாயராக ஒரு குக்கிராமத்தில் வாழ்க்கையை அந்த நாளில் ஆரம்பித்தவர். மானேஜ்மெண்ட் பள்ளி ஒன்றில் அறுபது ரூபாய் சம்பளத்தில் நாலாம் வகுப்பு உபாத்தியாயர். சம்பளப் பட்டியலில்தான் அவருக்கு அறுபது ரூபாய் சம்பளம் என்றுகண்டிருந்தது. ஆனால் ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்துப் போடும்போது பள்ளி நிர்வாகி அவருக்கு நாற்பது ரூபாய்தான் கொடுப்பார். இது அந்தப் பள்ளியின் 'மாமூல்'. இதற்கு ஒப்புக்கொண்டவர்கள்தான் அங்கே பணி செய்ய முடியும். கணபதிராமன் இதற்கு விதிவிலக்கல்ல. நல்ல வேலை! அவர் குடும்பம் அப்படி ஒன்றும் பெரிதல்ல. மனைவியையும் எட்டு வயது மகன் சந்திரனையும் தவிர அவருக்கு வேறு யாரும் நெருங்கிய உறவினர்கள் இல்லை.

இந்தக் கட்டத்தில்தான் ஒரு சமயம் கணபதிராமன் சில சிறு கடன்களின் தொல்லைகளுக்கு ஆளானார். ஒரு மாதம் சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போடும்போது நிர்வாகியுடன் வாக்குவாதத்தைத் தொடங்கினார். அறுபது ரூபாய்களையும் கீழே வைத்தால்தான் கையெழுத்துப் போடுவேன் என்று அடம் பிடித்தார்.

நிர்வாகி ஒரு கல்லுளிமங்கன். கணபதிராமனைப் போல் எத்தனையோ பேர்களைச் சமாளித்து அனுபவம் பெற்றவர். ''வேலை வேண்டுமா வேண்டாமா?'' என்ற மூன்று வார்த்தைகளை மாத்திரம் வீசிவிட்டு வழக்கம் போல நாற்பது ரூபாய்களைக் கொடுத்துவிட்டுக் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.



அந்தக் கேள்வி கணபதி ராமனின் வாயை அடைத்தது. ஆனால் உள்ளக் குமுறலைத் திறந்து விட்டது.

சில நாட்கள் கழித்து அந்தப் பள்ளிக்கான பரிசோதகர் வந்தபோது கணபதிராமன் அவரிடம் நிர்வாகியின் பேராசையைப் பற்றி முறையிட்டார். பரிசோதகர், இந்த விஷயம் பற்றி எழுத்து மூலமாக மனு வந்தால் கவனிப்பதாகச் சொன்னதும் அப்போதே கணபதிராமன் காரசாரமான ஒரு மனுவையும் எழுதிக் கொடுத்தார்.

பாவம் கணபதிராமன்! பரிசோதகரும் நிர்வாகியும் ஊழல் கூட்டில் பாகஸ்தர்கள் என்று தெரியாது. பரிசோதகர் பிறகு அந்த மனுவை நிர்வாகியிடம் கொடுத்தும் அந்த நிர்வாகி அந்த மனுவைச் சிரித்துக்கொண்டே குப்பைக் கூடையில் போட்டதும்கூட அவருக்குத் தெரிய நியாயமில்லை.

அடுத்த மாதம் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு உடைமையான சில பொருள்கள் களவு போய்விட்டதாக நிர்வாகி போலீஸில் புகார் கொடுத்தார். போலீஸார் எல்லா உபாத்தியாயர்களையும் விசாரித்தார்கள். குறிப்பாகச் கணபதிராமன் வீட்டையும் சோதனை போட்டார்கள். கண் துடைப்பாக மற்றச் சில ஆசிரியர்கள் வீடுகளையும் சோதனை போட்டனர். ஆனால் கணபதிராமன் வீட்டிலிருந்து மாத்திரம் சில பொருள்கள் கிடைத்தன. ஊர்க்காரர்கள் சிரிக்கும் வகையில் அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். அவர் நிரபராதி என்று கதறிக் கதறிச் சொல்லியும் போலீசார் நம்பத் தயாரில்லை. பள்ளி நிர்வாகி போலீஸ் அதிகாரிக்கு வேண்டியவர்.

பள்ளி நிர்வாகி இந்தக் கட்டத்தில் ஒரு நல்ல நாடகம் ஆடினார். கணபதிராமன் ராஜிநாமா எழுதிக் கொடுத்தால் போலீஸ் கேஸை வாபஸ் வாங்கிக் கொள்வதாகச் சொன்னார். கணபதிராமனுக்கு வேறு வழி இல்லை. அந்தப் பள்ளிக்கூடத்துக்கும் ஊருக்கும் ஒரேயடியாகத் தலை முழுகினார். பக்கத்து ஊரில் குடியேறினார். மீண்டும் பள்ளி ஆசிரியர் வேலை பார்க்கும் ஆசைக்கும் தலை முழுகினார். புரோகிதர் என்று சொல்லிக் கொண்டார். தனிப்பட்ட சில வீடுகளில் டியூஷன் சொல்லிக் கொடுத்தார்.

பையன் சந்திரனுக்குத் தன் தகப்பனார், பள்ளி நிர்வாகியின் சதிக்கு உள்ளானவர் என்று புரிந்து கொள்ளும் அளவுக்கு மனப் பக்குவம் இல்லை. ஊர்க்காரர்கள் அவரைப் பார்த்து ஏளனமாகப் பேசியதைப் புரிந்து கொண்டான். அவன் மனத்தின் அடித்தளத்தில் கணபதிராமனைப் பற்றித் தவறான ஒருவித அபிப்பிராயம் படிந்து உறைந்து விட்டது. அப்புறம் அவனால் அதை அகற்றவே முடியவில்லை.

அந்தக் கிராமத்தில் ஐந்தாம் வகுப்புக்கு மேலே படிக்க வசதி யில்லாததால் சந்திரன் பக்கத்து ஊருக்கு நடந்து போய் மேலே படிக்க ஆரம்பித்தான். இயற்கையாகவே அவனுக்குப் படிப்பில் நல்ல ஈடுபாடுஇருந்தது. அவனிடம் அன்பு காட்டிய ஓர் ஆசிரியர் அவனை ஹாஸ்டல் வசதியுள்ள வேறு ஊர்ப் பள்ளியில் இலவசமாகச் சேர்த்து விட்டார். பள்ளி இறுதி ஆண்டில் முதலாவதாகத் தேறியதால் பண உதவி பெற்றுக் கல்லூரியிலும் நுழைந்தான். விடுமுறை நாட்களில் அவன் ஊருக்குப் போகும் வழக்கத்தை விட்டுச் சில வருஷங்களாகியிருந்தன. விடுமுறையில் ஆங்காங்கு வியாபார நிறுவனங்களில் கணக்கு எழுதித் தன் துணி மணிகளுக்கான வருவாயைத் தேடிக் கொண்டான்.

ஆரம்ப நாட்களில் கணபதிராமன் தம் பையன் இப்படிப் பிடிப்பற்று இருக்கிறானே என்று ஏங்கினார். ஆனாலும் தம் கையை எதிர்பாராமல் படித்து முன்னுக்கு வருகிறானே என்ற மகிழ்ச்சியும் கூடவே வளர்ந்தது.

சந்திரன் வேலையில் சேர்ந்து முதல் மாதச் சம்பளமாக முந்நூற்றைம்பது ரூபாய் வாங்கியதும் தந்தை பேருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்தான். கச்சிதமாகக் 'கூப்ப'னில் இனி மாதம்தோறும் நூறு ரூபாய் வரும் என்றும் 'கிராமத்திலேயே நிம்மதியாக வாழ்க்கையை நடத்த வேண்டும்' என்றும் எழுதினான். இப்போது சந்திரனுக்குத் தொள்ளாயிரம் ரூபாய் சம்பளம். பத்து வருடங்களாக இந்த மணியார்டர்கள் போகின்றன. இடையில் இரண்டே சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு மணி நேரம் பெற்றோர்களுடன் செலவழித்திருக்கிறான். அவ்வளவுதான்!

பாலகிருஷ்ணனுக்குக் கணபதிராமன் சம்பந்தி என்று நினைத்துப் பார்க்கவே சந்திரனுக்குக் கூச்சமாக இருந்தது. தன் ஆரம்ப கால வாழ்க்கையை அப்பட்டமாகச் சொன்னால், பாலகிருஷ்ணன் தன்னை மருமகனுக்கிக் கொள்ளக் கூச்சப்படுவாரோ என்று சந்தேகமும் எழுந்தது. ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

பாலகிருஷ்ணன் புன்முறுவலுடன் சந்திரன் சொல்வதைக் கேட்டார். ''மிஸ்டர் சந்திரன்! உன் வாழ்க்கை வளத்தைக் கண்டு பெருமைப்பட உன் பெற்றோர்கள் உயிருடன் இல்லையே என்று நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது. அவர்கள் கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவுதான்! உனக்கு உறவு வகையில் யாரும் இல்லை! கவலைப்படாதே! அந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். உனக்கு மாமனாராகும் பொறுப்பை நான் தாங்கத் தயார்'' என்றார் பாலகிருஷ்ணன் சிரித்துக் கொண்டே.

சந்திரன் உடல் புல்லரித்தது. தன் பெற்றோர்களை நினைவு தெரியாத வயதிலேயே இழந்து விட்டதாகச் சந்திரன் துணிந்து சொல்லி விட்டிருந்தான். பாலகிருஷ்ணனோ, அவனுடைய தொழில் மேதா விலாசத்துக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்து அவனுடைய குணங்களைப பற்றியும் பாலகிருஷ்ணன் ஏற்கனவே நன்கு விசாரித்துத் திருப்தியடைந்துவிட்டார். ஆகவே அவர் தம் மகன் சரோஜாவின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை.

முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டு விட்டது.. பாலகிருஷ்ணன் தடபுடலாகக் கல்யாணம் செய்யத் திட்டமிட்டார் தன் நிறுவனத்

# சக்தி, அத்துடனே வளர்ச்சி

## இரண்டையும் அளிப்பது ஃபெர்ராடால் மட்டும் தான்

- ஃபெர்ராடாலில் உள்ள இரும்புச் சத்தும், இன்சுவையுள்ள மால்ட்டும் வற்றாத சக்தியை வரம்பின்றி வழங்குகின்றன.
- அதிலுள்ள வைட்டமின்களின் சரிவிகிதக் கலவை— ஆரோக்கியமான திட வளர்ச்சிக்கு வழிவகுத்திடுகிறது.

# ஃபெர்ராடால்®

**இரும்புச் சத்து, வைட்டமின் டானிக். சுவைத்திட இனியது.**

**பார்க்-டேவிஸ்** தயாரிப்பு

*ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க், ரிஜி. யூஸர்ஸ்—
பார்க்-டேவிஸ் (இந்தியா) லிட்., பம்பாய்-72 AS.



ின் சக ஊழியர்களையே தன் உறவினர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாரானான். முகூர்த்தத்துக்கு ஒரு வாரம் முன்னாலேயே அவன் விடுமுறையும் எடுத்துக் கொண்டான்.

கல்யாணத்துக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் இருந்தன. அன்று காலையில் சந்திரனைத் தேடிக் கொண்டு அவன் தங்கியிருக்கும் விடுதி அறைக்கு, அவனுடைய காரியாலயக் கடைநிலை ஊழியன் முருகேசன் வந்தான். காரியாலயம் சம்பந்தமாகத்தான் அவன் வந்திருக்கிறான் என்று சந்திரன் நினைத்தான். ஆனால் முருகேசன் சொன்ன விஷயம் அவனைத் திகைக்க வைத்தது.

''சார்! உங்களைப் பார்க்கணும்னு ஒரு வயசான ஐயாவும் ஓர் அம்மாவும் ஆபீஸிலே வந்து விசாரிச்சாங்க. உங்களை அவங்களுக்குத் தெரியுமாம்'' என்று சொல்லி விட்டுத் தேடி வந்தவர்களை நன்றாக வருணித்தான்.

அவர்கள் சந்திரனின் பெற்றோர்கள். சந்தேகமே இல்லை.

''வேறு என்ன சொன்னார்கள்?'' என்று விசாரித்தான் சந்திரன்.

''ஒன்றும் சொல்லவில்லை. நேராக ரயில் வேஸ்டேஷனிலிருந்து வந்தவர்கள் போலிருந்தார்கள். இன்று இரவு வண்டிக்குக் காசிக்குப் போகப் போகிறார்களாம். அதற்குள் உங்களைப் பார்த்து ஏதோ தகவல் சொல்ல வேண்டுமாம். நான் அவங்களை நம்ப ஆபீஸ் வரவேற்பு அறையில் உட்கார வைச்சுட்டு ஓடி வந்தேன்'' என்றான் முருகேசன்.

சந்திரனுக்கு கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. ''சரி! நான் இப்பவே கிளம்பிப் போகிறேன். ஒரு டாக்ஸி பாரு!'' என்று கிளம்பி விட்டான்.

முருகேசன் சைக்கிளில் ஆபீஸுக்குத் திரும்புவதற்கு முன்னால் சந்திரன் காரியாலயத்துக்கு வந்து விட்டான். ஒரு புன்முறுவலுடன் அந்த இடத்தில் க்ஷேம லாபங்களை விசாரித்து முடித்துக் கொண்டு, தான் வந்த டாக்ஸியிலேயே அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கத்திலுள்ள உயர்தரக ஹோட்டல் அறை ஒன்றில் அவர்களை அன்று இரவு வரை வசதியாகத் தங்க ஏற்பாடு செய்தான். அவனும் சற்று நேரம் கூடவே இருந்தான்.

குளியல் அறையிலிருந்து வெளிவந்த கணபதி ராமன் தலையைத் துவட்டிக் கொண்டே, ''சந்திரா! அந்தக் கிராமத்து வாழ்க்கை எனக்கும் உன் அம்மாவுக்கும் அலுத்துப் போய்விட்டது. காசியிலேயே போய்க் கொஞ்ச காலம் தங்கலாம் என்று யோசனை. அங்கு போய்ச் சேர்ந்த பிறகு தகவல் கொடுக்கிறேன். அப்புறம் உன் மணி ஆர்டர்களை அங்கே அனுப்பி வைக்க வாய்ப்பாக இருக்கும்!'' என்றார்.

''எங்கள் பிள்ளை 'காசி யாத்திரை' கிளம்புவான், அதை யொட்டி ஒரு மருமகள் வருவாள். நாங்களும் வந்து சேரலாம்' என்று கற்பனை செய்து கொண்டிருந்தோம். ஆனால் இப்போது நாங்கள்தான் காசி யாத்திரை கிளம்புகிறோம்'' என்று சற்று விரக்தியாகவே சந்திரனின் தாயார் கவரைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

அவள் வேதனை சந்திரனின் மனத்தைத் தொட்டது. ஆனாலும் அவன் அதை உணர்ந்ததாகக் காண்பித்துக் கொள்ளவில்லை.

''நீங்க கொஞ்சம் சாவகாசமாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். இரவு நான் வந்து உங்களை ரயில் ஏற்றி அனுப்புகிறேன். வழிச் செலவுக்கு ஐந்நூறு ரூபாய் போதுமா? பாங்கியிலிருந்து வாங்க வேண்டும். நான் கிளம்பட்டுமா?'' — சந்திரன் எழுந்திருந்தான்.

கணபதிராமன் ஓர் எட்டு முன்னால் வந்தார். ''ஏண்டா, சந்திரா ! உன் மனசிலே ஈரம், பாசம் என்பதெல்லாம் உற்பத்தியே ஆகவில்லையா? இல்லை, வறண்டு போச்சா ? ஒரு வேளை சின்ன வயதிலிருந்தே விலகியிருந்து படித்து முன்னுக்கு வந்ததினாலும் இருக்கலாம் இல்லையா?.... பரவாயில்லை. ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே உங்க அம்மா மனதிலே ஒரு சிறு சபலம். நாங்க அந்த வரவேற்பு அறையிலே உட்கார்ந்திருந்தபோது, யாரோ உன் ஆபீஸ் சிநேகிதர்கள் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நடக்கவிருக்கும் உன் கல்யாணத்தைப் பற்றி அவர்களாகப் பேசிக் கொண்டார்கள். நாங்கள் யார் என்று



## NOISE காதுக் காட்சி

இப்போதே நாம் பல கண்காட்சிகளில் ஏகப்பட்ட ஒலிபெருக்கிகளால் ஏற்படும் துன்பத்தைத் தான் முக்கியமாக உணர்கிறோம்.

'நாய்ஸ் எக்ஸிபிஷன்' என்று சத்தத்துக்காகவே ஒரு பொருட்காட்சி அமைத்தார்களாம் லண்டனில். இதில் நவீன உபகரணங்கள் - போக்குவரத்து அமைப்புக்களால் உண்டாகும் சத்தத்தைப் பெரிதாக்கி அமர்க்களப்படுத்தினார்களாம்.

காரணம்: 1985 வாக்கில் இப்போதுள்ள வாகனங்கள் - இயந்திரங்கள் இரட்டித்து விடலாம். அதற்குக் காதுகள் அனுபவப்பட வேண்டும் அல்லவா ?

தேஜ்-

அவர்களுக்குத் தெரியாது. நீயே பெரிய அதிருஷ்டக்காரன் என்றும் அவர்கள் பேச்சிலிருந்து தெரிய வந்தது. 'திடீரென்று நிச்சயமாகியிருக்கும். நம்மைப் பார்த்தவுடன் அவன் ஆனந்த' பரவசமடைவான். நாம் எதிர்பாராமல் வந்து விட்டோம்' என்று உன் அம்மா கற்பனை செய்து கொண்டாள். ஆனால் நீயோ இந்த விநாடி வரை அந்தப் பேச்சை எடுக்கவுமில்லை! இரவில் எங்களை இரயில் ஏற்றவும் தயாராகிவிட்டாய். ஹூம்! விட்டுத் தள்ளு!'' என்றார் கணபதிராமன்.

மாபெரும் ஏக்கத்தை அவர் மறைத்துக் கொண்டுதான் பேசினார். ஆனால் அவர் மனைவியால் அந்த ஏக்கத்தை அடக்க முடியவில்லை. அந்த ஏக்கம் கண்ணீர் வெள்ளமாக ஓடியது.

சந்திரன் மீண்டும் உட்கார்ந்தான். சில நிமிடங்கள் வரை அவனால் பேச முடியவில்லை. '' அப்பா ! இது ஒரு கௌரவச் சுழல். ஆரம்பத்தில் ஒரு பொய்யை ஏனோ சொல்லிவிட்டேன். இனி உண்மையை அணுக முடியாத நிலை'' என்று ஆரம்பித்தான். இரண்டு மணி நேரம் கழித்து அவன் அங்கிருந்து கிளம்பியபோது, அவர்கள் அந்த ஹோட்டல் அறையிலேயே இன்னும் மூன்று தினங்கள் தங்க ஏற்பாடு செய்தான். ரயில் பிரயாண டிக்கட்டுகளின் தேதியை மாற்ற வழி செய்தான்.

திருமண முகூர்த்தம் அமர்க்களமாக நடந்து முடிந்தது. ''மாப்பிள்ளை சார்! கார் தயார்! இப்படியே மணக் கோலத்தோடு உங்கள்' விருப்பம்போல் பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலுக்குப் போய் வந்துவிடலாமா? எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த ஒரு புரோகிராமில் மாறுதல் இருக்கக் கூடாது என்று இரண்டு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே!... கிளம்பலாமா?'' என்றார் மாமனார் பாலகிருஷ்ணன்.

''ஆமாம்! அது மிக முக்கியம். நான் தயார்'' என்றான் சந்திரன். மூன்று நான்கு கார்கள் திருவல்லிக்கேணியை நோக்கிப் பறந்தன.

ஸ்வாமி சன்னதியில் தரிசனத்தை முடித்துக் கொண்டு தாயார் சன்னதிக்கு வந்தார்கள். யாத்ரீகர்கள் போலக் காணப்பட்ட சில முதியவர்களும் வெய்யிலுக்காக ஒதுங்கிய சிலரும் அந்தச் சன்னதி மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். ஒரு பக்கத்தில் கணபதிராமனும், அவன் மனைவியும் உட்கார்ந்திருந்தார்கள்.

வேதவல்லித் தாயாரை வெளியிலிருந்தே சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் பாணியில் சந்திரன் தன் பெற்றோர்கள் முன்னாலும் விழ்ந்து எழுந்திருந்தான். சரோஜாவும் அவனை அப்படியே பின்பற்றினாள்.

கணபதிராமன் தானுகச் சிரித்துக் கொண்டார். அவர் மனைவி சுவரின் பக்கம் திரும்பிக் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டாள். இந்த யோசனையையே சந்திரன்தான் அன்றைக்கே ஹோட்டலில் சொல்லிக் கொடுத்தான். தம்பதிகளைப் பார்க்க அவர்களுக்குச் சுய கௌரவம் பாதிக்கப்படாமல் பார்த்தசாரதி ஸ்வாமி உதவி செய்தார். அதற்காகத்தான் அவர்களை மேலும் மூன்று நாட்கள் ஹோட்டலிலேயே தங்க வைத்தான். இன்றிரவு அவர்கள் கிளம்புகிறார்கள்.

நமஸ்கரித்து எழுந்த சந்திரன் பின்னால் பாலகிருஷ்ணன் குரல் கேட்டது. '' ஒரு நிமிஷம் மாப்பிள்ளை சார்! அந்த மனிதரின் முகம் தெரிந்த முகமாக இருக்கிறது. விசாரித்துவிடுகிறேன் '' என்று சொல்லிக் கொண்டே கணபதிராமனை நெருங்கினார்.

''ஸ்வாமி!... நீர் கொட்டாம்பட்டியிலே ஸ்கூல் வாத்தியாராக இருந்தவர் இல்லையோ! கணபதிராமன்! இல்லையா? என்னைத் தெரிகிறதா?'' என்று கணபதிராமன் திகைப்பிலிருந்து விடுபடுமுன் அவர் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

கணபதிராமனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ''நீங்கள் யாரென்று தெரியவில்லையே...!'' என்று நீட்டினார் கணபதிராமன்.

'' நான் யாரென்று சொல்வதைவிட, நான், உம்மைப் படாதபாடு படுத்தி வைத்து அடக்கியாதிக்குள்ளாக்கிய எலிமெண்டெரி ஸ்கூல் கரஸ்பாண்டெண்ட் வேதபுரியின் தம்பி பாலகிருஷ்ணன். நான் அந்த நாட்களில் கொட்டாம்பட்டிக்கு எப்போதாவது வருவேன். எங்கள் பூர்வீகமும் அந்தப் பக்கம் தான் !.... உம்ம மேலே அடாவடியாகத் திருட்டுப் பட்டம் சூட்டினானே பாவி!....அப்புறம் என்ன பலன் அவனுக்குக் கிடைத்தது தெரியுமோ?... அவனே நிறையத் திருட ஆசைப்பட்டான். ஒரு கள்ளக் கடத்தல் வழக்கிலே அகப்பட்டு, திவாலாகப் போய்க் கண் காணாமல் போயிட்டான்!... பாவம்! அப்போ நீர் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பீர் ! என் சொந்த அண்ணன் ஸ்வாமி!...! நான் இப்ப ஒரு பெரிய மனுஷன் என்பதற்காக உறவை மறந்துட முடியுமா?... இருக்கட்டும்....இன்றைக்கு என் பெண் திருமணம் !... இதோ மாப்பிள்ளை மிஸ்டர் சந்திரன்!... மாப்பிள்ளை!... சார் ! எங்க ஊர்ப் பக்கத்திலே ஸ்கூல் வாத்தியாராக இருந்து எத்தனையோ பேருக்கு எழுத்து அறிவித்த இறைவன். தங்க மானவர். அப்பாவி....! இவரை இரண்டு பேருமா நமஸ்காரம் பண்ணி ஆசிர்வாதம் வாங்கிக் கொள்ளுங்கள்! ஸ்வாமி எங்கள் கூடவே வந்து சாப்பிட வேண்டும்!..... '' என்றார் பாலகிருஷ்ணன் மடமடவென்று. கணபதிராமன் பணிவுடன் ஏதோ சாக்குச் சொல்லிவிட்டார்.

எத்தனையோ கனமான சுமையைச் சட்டென்று இறக்கிவிட்ட உணர்ச்சியுடன் வெகு இலேசாக சந்திரனும் சரோஜாவும் கணபதிராமன் தம்பதியரை நமஸ்கரித்து எழுந்தார்கள். '' அப்பா !'' என்று கூப்பிட்டுவிடலாமா என்று சந்திரன் வேகமாக நினைத்தான். அதே வேகத்தில் அந்த ஆசையை அடக்கிக் கொண்டான்.

''என் ஸ்வாமி! உமக்கு ஒரு பையன் இருந்ததாக நினைவு. என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்றார் பாலகிருஷ்ணன்.

''ஜாம் ஜாம் என்று கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கிறான் '' என்றார் கணபதிராமன்.

சில நிமிடங்களில் கல்யாண வீட்டுக் கார்கள் கோயில் வாயிலிலிருந்து கிளம்பின.



# வட்ட மேஜை

நம் எல்லாருக்கும் கடவுளாகவும், குருவாகவும் ஆத்மனாகவும் விளங்கி வந்த ஒருவர் காலமானதில் ஏற்பட்ட துக்கம் தாங்கமாட்டாது எழுதுகிறேன். இருள் சூழ்ந்த உலகுக்கு ஒளி வீசி வந்த பூஜ்ய ராஜாஜி இனி இல்லை. மனித குலத்தின் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. ஆனால் அவர் வழிகாட்டியாகத் திகழ்ந்தும் இருக்கிறார்; எழுதியும் வைத்திருக்கிறார். உலகம், வெறும் சுயநல நோக்கிலாகிலும் உய்ய வேண்டுமெனக் கருதினால், இவற்றை அது பின்பற்ற வேண்டும்.

இனி அவருடைய ஒளி மிகுந்த முகத்தைக் காண முடியாது. மிருதுவான குரலைக் கேட்க முடியாது. அவரது கைகளின் இதமான ஸ்பரிசத்தைப் பெற முடியாது. ஆனால் அவரது ஆத்மியம் நம்முடன் எப்பொழுதும் இருக்கும். அது நம்மைக் காப்பாற்றும்; ஊக்குவிக்கும்; தடுமாற்றம் அடையும் நம் பாதங்களை ஸ்திரப்படுத்தும். அதன் பயனாக நமது மகத்தான தலைவருக்குச் சற்றும் அருகதையற்றவர்களாக நாம் போய்விடவில்லை என்ற உறுதியை, நம்பிக்கையை நாம் அவ்வப்போது பெறலாம்..

டி. எம். பி. மகாதேவன்

ராஜாஜி இனி இல்லை. ஒரு யுகம் முடிந்தது. அத்துடன் ஒரு தனி உலகம் மறைந்தது. மலை போல் நிலை தளராது நின்ற உள்ளம் மறைந்தது. எதிர்க்கட்சி தனக்குப் பரிந்து பேசும் ஒரு நியாயவாதியை இழந்துவிட்டது. நமது ஆன்மாவைச் சுற்றிக் குப்பையும்கூளமும் சேர்ந்து அழுத்துகிறது. துப்புரவுப் பொறியாளரைக் காணோம். சுத்தமான காற்று வீசுவது தடுக்கப்பட்டது. நாற்றம் பிடித்த இந்தச் சூழ்நிலையை இனி எப்படிச் சுத்தப்படுத்துவது?

தமிழ்நாட்டில் திருப்பாவையும் திருவெம்பாவையும் பாடப்படும் மாதம் அல்லவா இது? பலப் பல யுகங்களாக ஒரு விசித்திரப் பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறோம். நமது வாய் உயர்ந்த லட்சியங்களைப் பற்றிப் பேசும். ஆனால் அதில் ஓர் இம்மியும் வாழ்வில் கடைப்பிடிக்கமாட்டோம்! நமது இந்தப் பரம்பரைக் குணத்துக்கு ராஜாஜியின் கருத்துக்களையும் ஆட்படுத்தி விடாதிருப்போமாக.

ஓ. வி. அளகேசன்

இளிமுக்கும் கைத்தடியும்
    இத்தாப்பும் குறுநகையும்
வெளியுருவம் கரைந்தெங்கள்
    விழியோடு கலந்தனவோ?

சக்கரவர்த்தி என்றழைத்துச்
    சபையேற வைத்ததனால்
திக்விஜயம் செய்துவரச்
    சீரோடு போனாயோ?

சென்னை–14
3–1–73

நா. காமராஜன்

இவ்வாரக் கல்கியில் ராஜாஜியின் உடல் நலம் குன்றியது முதல் கடைசி மூச்சு வரை நிகழ்ந்தவை பற்றிய வர்ணனைக் கட்டுரை நெஞ்சை நெகிழச் செய்தது. நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதியிருந்த பாணி இதயத்தைப் பிழிந்து விட்டது.

ஸ்ரீ ராஜாஜி — நந்தாவிளக்கு — அணைந்து விட்டது. பாரத தேசத்தின் மனச்சாட்சியை இழந்துவிட்டோம். அஞ்சலி செலுத்தும் ஆயிரம் ஆயிரம் இரங்கற் புகழுரைகளிலும் அவரின் சீரிய சீலம், தூய உள்ளம், அஞ்சாநெஞ்சம், கூரிய மதி, மாசற்ற நடத்தை, தீர்க்கதரிசனம் எல்லாம் பற்றிச் சொல்லாதவர்கள் இல்லை. பாரதத்தின் பண்பாட்டுக்கே உருவகமாகத் திகழ்ந்து வாழ்ந்து வந்த கர்மயோகி அவர்.

செகந்திராபாத்
4–1–73

எஸ்.கே.எஸ். ராகவன்

'நான்' இலாமுனிவர் தனிப்பெருந் தலைவர்
நானிலம் எல்லாம் போற்றிய பெரியர்
ஞானக் கடலினர் சேவையிற் சீரியர்
தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்
மனமகிழ் சுதந்திரம் வாங்கிய வித்தகர்
மன்பதை செழித்திட மக்களுக் காக
வன்சிறை வாடிய கிண்கிணிக் குரலார்
இன்புறு கதைகள் இனியும் சொல்வரோ

பம்பாய் - 16
25–12–72

சேஷாத்ரி

★ ★ ★

உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை லிண்டாஸ் தெரிவித்துக் கொள்கிறது.

வழக்கமாக உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்து மடல் அனுப்புவோம். அதை இந்த ஆண்டு அனுப்பப் போவதில்லை.

அதற்குப் பதிலாக விசேஷ கவனம் தேவைப்படுகிற குழந்தைகளுக்கென்று பம்பாயில் நடக்கும் பள்ளிக்கு உங்கள் பெயரில் ஒரு நன்கொடை அனுப்பியிருக்கிறோம்.

பம்பாய் — 1
2–1–73

லிண்டாஸ்
சர்வதேச விளம்பர நிறுவனம்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam






# இரகசியம் — அமுல் மில்க் பவுடர்!

எதிர்பாராதது நேருவது சகஜம். பால்காரர் தாமதித்து வருகிறார். பால் பொங்கி வழிகிறது. பால் தீய்ந்து விடுகிறது. பால் புளித்து விடுகிறது. பால் வண்டி பழுதடைந்து விடுகிறது. எதிர்பாராது விருந்தாளிகள் வருகிறார்கள். பூனை பாலைக் குடித்து விடுகிறது. ஆனால் என்றுமே உங்களைக் கைவிடாது, அமுல் மில்க் பவுடர்.

ஆரோக்கியமான நல்ல பாலைத் தட்டில்லாமல் பெறவும், கட்டியான ஆடைத் தயிர், இனிப்புகள் மற்றும் பழத்தின்பண்டங்கள் தயாரிக்கவும் சிறந்தது, அமுல் மில்க் பவுடர். கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் சேர்த்தால், வளமுடன் சுவை கொழிக்கும். மிகவும் வசதியானது; சிக்கனமானதும்கூட!



**அமுல்**

ஆரோக்கியமான
நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

ASP/AMP-12 TAM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)